


கல்கி
KALKI 10.1.93 ரூ. 3.00
அடுத்த இதழில்
பாண்டியன் மகள்
பொன்விழா போட்டியில்
ரூ. 10,000
பரிசு பெற்ற
தொடர்கதை




# இதுபோன்ற அருமையான கேசட்டுகளை ஜப்பானும் தயாரிக்கிறது


மெல்ட்ராக் — இந்தியாவிலே மிக அதிக அளவில் விற்பனையாகும் இந்த ஆடியோ கேசட்டுகள், உண்மையான ஜப்பானியத் தொழில் நுட்பத்துடன் தயாரிக்கப்படுபவை.


ஃப்ரீக்வென்ஸி ரெஸ்பான்ஸ்: 20 Hz - 20 KHz

மெல்ட்ராக் கோபால்ட் DR-C சிறிதளவு கூட தூசு இல்லாத, மிக நவீன தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகிறது. விசேஷ முறையில் ஃபார்முலேஷன் செய்யப்பட்ட கோபால்ட் ஆக்சைடு, இசையை மிகமிகத் துல்லியமாக, குறை சிறிதும் இல்லாமல் ஒலிக்கச் செய்கிறது.


கோபால்ட் ஆக்சைடு கோட்டிங்

மேலும், மெல்ட்ராக்கில் இருப்பது ஹை-டென்ஸைல் பாலியெஸ்டர் ஃபிலிம் மற்றும் முழுவதும் பாலன்ஸ் செய்யப்பட்ட ஷெல். இதன் மூலம் நீங்கள் கேட்கும் இசையில் எரிச்சலூட்டும் ஏற்றத் தாழ்வுக் கோளாறுகள் இருக்காது.


பாலன்ஸ்டு ஷெல்கள்

அதைவிட முக்கியமானது — உங்கள் மெல்ட்ராக் கேசட்டில் தொல்லை ஏதேனும் ஏற்பட்டால், அதை உடனடியாக மாற்றித்தர* மெல்ட்ராக் உத்தரவாதம் அளிக்கிறது.


உத்தரவாதம்

அதைவிடச் சிறப்பாக — மெல்ட்ராக் கேசட் வாங்குவதற்கு ஜப்பானிய நாணயமோ அந்நியச் செலாவணியோ தேவையில்லை. மெல்ட்ராக் — உங்கள் இசைச் சாதனத்திற்கு உகந்தது, செவிக்குச் சிறந்தது.

**M மெல்ட்ராக்**
**ஆடியோ கேசட்டுகள்**

*இந்தியத் தயாரிப்பு. ஜப்பானியத் தரம்.*

* கேசட் பிளேயரில் அழுக்கும் தூசும் படிந்த ஹெட், கேப்ஸ்டன் மற்றும் பின்ச் ரோலர்கள் இருக்கையில், அவற்றை விட்டுவிட்டுக் கேசட்டுகளை குறை கூறுவது வழக்கம். எனவே உங்கள் கேசட் பிளேயர் அல்லது மியூசிக் சிஸ்டம் நல்ல நிலைமையில் இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். இதற்கு உதவும் — மெல்ட்ராக் ஆடியோ ஹெட் கிளீனர்.

ARTIG/MG/1176



# தமிழகம் வருக; நலமெல்லாம் தருக!

●● இறைவனை வழிபடும் மார்க்கத்தை ''மதம்'' என்கிறோம். அறிவை ''மதி'' என்கிறோம். இரண்டையும் ஒருசேரப் பார்த்தால் மதியைப் பக்குவப் படுத்தவே மதம் என்பதை உணரலாம்.

●● எல்லா மதங்களின் அடிப்படையும் லட்சியமும் மனத்தைப் பண்படுத்தி, தனிமனிதனுக்கு ஆன்ம விடுதலையையும் சமுதாயத்துக்குச் சந்தோஷத்தையும் அளிப்பதுதான்.

●● அன்பை வளர்த்துக் கொள்வதன் மூலமே, ஒரே ஜாதி - அது மனித ஜாதி; ஒரே மதம் - அது அன்பு மதம்; ஒரே மொழி - அது இதய மொழி என்பதை உணர முடியும்.

●● வியாசரின் பதினெட்டு புராணங்களையும் இரண்டே வாக்கியங்களில் அடக்கி விடலாம்: பிறருக்கு நன்மை செய், தீங்கிழைப்பதைத் தவிர்த்து விடு. நல்லது செய்வது என்பது மருந்து, தீமையைத் தவிர்ப்பது என்பது பத்தியம்.

- பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா



* ஜீனோ - விசேஷ தயாரிப்பு

''இயந்திரா'' :

# கம்ப்யூட்டர் சித்திரங்கள்; டிஜிட்டல் ஜாலங்கள்!

வருங்கால விஞ்ஞான யுகத்தைப் பின்னணியாகக் கொண்டு நடைபெறுவதாக வுள்ள சுஜாதாவின் கதை -

முழுமையான டிஜிட்டல் ஒலிப்பதிவு முறை, மிக்சர் ஆட்டோமேஷன் போன்ற மிக நவீன தொழில் நுட்ப வசதிகள் கொண் டுள்ள மீடியா ஆர்ட்டிஸ்ட்ஸ் நிறுவனம் -

இவற்றின் இணைவில் உருவாகி ஒளி பரப்பாகி வருவதுதான் 'என் இனிய இயந்திரா' தொலைக்காட்சி விளம்பரதாரர் தொடர்.

இந்தத் தொடரைத் தயாரிப்பதில் இவர் களை எதிர்நோக்கிய முக்கிய பிரச்னைகள் எவை? தயாரிப்பாளர் - இயக்குனர் அருண் வீரப்பன் சொல்கிறார் :

வரவிருக்கும் ஒரு புதிய யுகத்தில் நடை பெறுவதாக உள்ள கதை. எனவே, தற்போ துள்ள சுற்றுப்புறச் சூழ்நிலை எதையும் வெளிப்புறக் காட்சிகளுக்குப் பயன்படுத்த முடியாத இக்கட்டு. ஜீனோ என்கிற இயந் திர நாய். இதனை உணர்வும் பாசமும் மிக்க குணச்சித்திரமாக உருவாக்க வேண்டிய பணி. மனிதனைப் போலவே அமைந்துள்ள ரோபோக்கள். லேசர் கதிர்களால் உருவான பிம்பங்கள்... இவற்றையெல்லாம் தமிழ் தொலைக்காட்சித் தொடருக்குக் கிடைக்கக் கூடிய குறைந்த விலையில், ஆனால் ரசிகர்கள் பாராட்டும் வகையில் மிகுந்த தரத்தில் தயாரிக்க வேண்டும்.

''தொலைக்காட்சித் தொடர் ஒவ்வோர் இல்லத்தையும் ஒரே சமயத்தில் சென்று அடைகிறது. எனவே, எல்லாத் தரப்பின ருக்கும் புரியும் வகையில், அவர்களை ஈர்க் கும் வகையில் ஒரு புதிய விஞ்ஞான யுகத் தின் வாழ்க்கையைச் சித்திரிக்க வேண்டும். கம்ப்யூட்டர், லேசர், ரோபோ எனப் பல உத்திகளில் நவீன அமைப்புகளைக் காண் பிக்கும் போது இவற்றைப் பற்றி அதிகம் கேள்விப்படாதவர்கள் புரியாமல் குழம்பி விடக்கூடாது. எனவே, எளிமையாக எல்லா ருக்கும் புரியும் வகையில் கதையைச் சொல்ல வேண்டும்.''

இந்தப் பிரச்னையை எப்படிச் சமாளித் திருக்கிறார்கள்?

''உரையாடல்களைக் கூடிய வரையில் சீரான தமிழில் அமைத்து, ரொம்பவும் அன் னியமாகி விடாத வகையில் தேவையில்லா மல் ஆங்கில வார்த்தைகளை உபயோகப் படுத்தாமல் காட்சிகளை அமைத்திருக்கி றோம்.

''கம்ப்யூட்டர் கிராஃபிக், 3-டி அனி மேஷன், டிஜிட்டல் எஃபக்ட், போன்ற தொழில் நுட்பங்கள் இக்கதையை 21 - ஆம் நூற்றாண்டுச் சித்திரமாக மாற்றிக் காண் பிக்க உதவுகின்றன. இதனைச் செய்பவர் தொழில்நுட்ப இயக்குனர் செந்தில்குமார். உதாரணமாக, கதையின் முதல் வாரத்தில் இடம் பெறும் ஜீவாவின் மாபெரும் பிம்பம். இந்தக் காட்சி அண்ணாசாலையில் உள்ள முற்றுப் பெறாத ஒரு கட்டடத்தைப் பின்னணியாகக் கொண்டு படம் பிடிக்கப் பட்டது. பின்னர், டிஜிட்டல் முறையில் சாருஹாசனின் ஜீவா பிம்பம் மெகா திரை யில் பேசும் காட்சி தகுந்த கோணத்தில் 'பெர்ஸ்பெக்டிவ்' கெடாமல் இணைக் கப்பட்டு எல்லாரும் பாராட்டும் வகையில் ஒரு பிரமையை ஏற் படுத்தியது.

''காட்சிகளில் ஆங் காங்கே தொலைபேசி யில் தெரியும் உருவங் கள், வீட்டில் பெரிய



* அருண் வீரப்பன்



கவர்த் திரையில் தோன்றும் பிம்பங்கள், லேசர் கதிர்களால் உண்டாகும் மாயா வினோதங்கள், கேபிள் கார்களில் செல்லும் காட்சிகள் ஆகியவை அனைத்தும் வீடியோ டெக்னாலஜியின் சாதனைகள். இந்தக் காட்சிகளை இதே மாதிரி சினிமாவில் கொண்டு வருவதானால், இதைவிடப் பன்மடங்கு செலவு செய்தாலும் இந்தப் பாதிப்பை ஏற்படுத்த முடியுமா என்பது சந்தேகம்.''

இயந்திர நாய் ஜினோ ஒரு சுவாரஸ்யமான படைப்பு. அது நடக்கிறது. பேசுகிறது. கேள்விகள் கேட்கிறது. ஆலோசனைகள் வழங்குகிறது. தத்துவங்களை உதிர்க்கிறது. இத்தகைய ஒரு பொம்மை நாயை எப்படி உருவாக்கினார்கள்?

''வெளிநாட்டில் வாங்கிய பஞ்சு பொதிந்த ஒரு நாய் பொம்மையை (stuffed dog) இயந்திர நாயாக மாற்றினோம். உள்ளே இருந்த பஞ்சை அகற்றிவிட்டு, மின்சாரத்தால் இயங்கும் கிளாக் ஒர்க் பல் சக்கர இயந்திரத்தை அதனிடத்தில் அமைத்தோம். இதன் மூலம் வேண்டும்போது வால், கால்கள், தலை, வாய் இவற்றைத் தேவையானபடி அசைக்க முடிகிறது. என்றாலும், ஜினோவுக்கு உயிரூட்டுவது காட்சியமைப்புதான். நிஜ மனிதர்கள் நடுவில் ஒரு பொம்மை நாய் பங்கேற்கும் போது சரியான உத்திகளைப் பயன்படுத்திக் காண்பித்தால்தான் நம்பும்படியாக அமையும்.

''ஜினோவின் குரல் கம்ப்யூட்டர் உதவியுடன் டிஜிட்டல் தொழில் நுட்பத்தினால் உருவான ஒலியமைப்பு. உரையாடலில் தெளிவைக் கெடுக்காமல், ஆனால் இயந்திரத் தன்மையுடன், அதே சமயம் உணர்ச்சி பாவங்களுடன் வெளிப்படும் ஜினோவின் குரல் வளம் இத்தொடரின் ஒரு முக்கியமான அம்சம்.''

இந்தத் தொடரில் பங்கேற்பவர்களைப் பற்றி அருண் வீரப்பன் என்ன சொல்கிறார்?

''இந்தத் தொடரைத் தயாரிக்க ஆரம்பித்த போது சுஜாதாவின் கருத்துப்படி இளமைமிக்க நடிகர் குழுவைத் திரட்டினோம். சிவரஞ்சனி அப்போது 'மனசார வாழ்த்துங்களேன்' என்ற படத்தில் அறிமுகமாகி நடித்துக் கொண்டிருந்தார். துடிப்பான அவரது இயல்பு 'நிலா'வாகத் தேர்வு செய்யக் காரணமாயிற்று.

''இளம் நடிகர் நியாஸ் சென்னை கேட்டரிங் கல்லூரியில் பயின்று, 'சனக்கத்து கடிவம்' என்கிற மலையாளப் படத்தில் கதா நாயகனாக நடித்துக் கொண்டிருந்தார். 'சிபி' பாத்திரத்துக்கேற்ற புதியதொரு உருவம் அவருக்கிருந்தது. அவரைத் தேர்ந்தெடுத்தோம்.

'' 'வண்ணக் கனவுகள்', 'தலைவாசல்' ஆகிய படங்களில் நடித்துள்ள இளைஞர் ஆனந்த் புரட்சிக்காரன் 'ரவி'யாகப் பங்கேற்கிறார்.

''எல்லாவற்றுக்கும் ஈடுகொடுத்துக் கதையெங்கும் வியாபித்திருக்கும் 'ஜீவா' பாத்திரத்துக்கு வேறு யாரையும் தேடிப் போக வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஒரு முறை பார்த்தாலும் மறக்க முடியாத சாருஹாசனின் காந்தப் பார்வையும் கம்பீரக் குரலும் 'ஜீவா' பாத்திரத்துக்கு உயிர் கொடுக்கின்றன.

''ஆங்காங்கே இலக்கியம், சித்தாந்தம் ஆகியவற்றைப் பேசும் 'டாக்டர் ஓ'... இப்பாத்திரத்தை ஏற்றுள்ள டாக்டர் சீர்காழி சிவசிதம்பரம் இதற்குச் சேர்ப்பது ஒரு தனித் தன்மையை.

''இந்தத் தொடரின் இன்னொரு முக்கிய அம்சம் இதனுடைய இசையமைப்பு. நமது சாஸ்திரீய சங்கீதத்திலும் மேல்நாட்டு இசையிலும் இளம் வயதிலிருந்தே பூரண பயிற்சி பெற்றுள்ள தாயப்பன் ரிசர்வ் வங்கியில் பணியாற்றுகிறார். முழுக்க முழுக்கப் புதிய பாணியில் கம்ப்யூட்டர், ஸாம்ப்ளர், 8போர்ட் ஆகியவற்றைக் கொண்டு இத்தொடருக்கு இவர் இசையமைத்திருக்கிறார். இவர், தொழில் நுட்ப இயக்குனர் செந்தில்குமார், ரிகார்டிங் என்ஜினியர் ஸ்ரீதர் ஆகிய மூவரும் ஒரு குழுவாகச் செயல்பட்டுப் புதியதொரு இசையமைப்பை வழங்கியிருக்கிறார்கள். டைட்டில் காட்சியிலிருந்தே இதை உணர முடியும்.''

– சி. ஆர். கே.



* அலைகடல் செல்லமாயிலே...



* ...ஆனந்தமான கச்சேரி...'

● த. கு. பா. பட்டுதுரை, சிதம்பரம்.

*? ''சிவசேனாக்காரர்கள்தாம் மசூதியை இடித்தார்கள் என்றால் இன்று உலகில் மிகச் சந்தோஷமான மனிதன் நான்தான்'' என்று பால்தாக்கரே கூறியதன் உள்ளர்த்தம் என்ன?*

! ஒரு தலைவராக இருக்கத் தகுதியற்ற வெறியர் என்று நிரூபிக்கிறார்.

● வி. கஸ்தூரி ரங்கன், ஸ்ரீரங்கம்.

*? ''பாபர் மசூதி இடிப்பு எதிர்பாராத செயல் என்பதை ஏற்காது பா.ஜ.க. மீது குற்றம்சாட்டினால் ராஜீவ் கொலைக்கு மத்திய மாநில அரசுகளும் காங்கிரஸ் கட்சியும் காரணம் என்று ஏன் சொல்லக் கூடாது?'' என்று கேட்கிறாரே ஜனா கிருஷ்ணமூர்த்தி?*

! அவர் சொல்லி வாய் மூடுவதற்குள் வர்மா கமிஷன் அறிக்கை, காங்கிரஸ் கட்சியும் மத்திய மாநில அரசுகளும் பொறுப் பேற்க வேண்டும் என்று கூறிவிட்டதே. ஆக, காரணமாவது வேறு, முன்யோசனையுடன் செயல்பட்டு தவிர்த்திருக்க முடியும் என்பது வேறு. அத்வானியும் எதிர்பாராத செயல் என்றாலும் வருந்தி, கண்ணியமாகப் பொறுப்பேற்கத்தான் செய்தார் முதலில். அப்புறம்தான் 'கலாசார வேர்களை அடையாளம் காட்டுகிறோம்', அது இது என்று குழப்பி, பின்வாங்க ஆரம்பித்து விட்டார். மாறாகத் தவறுக்குப் பரிகாரம் தேடியிருந்தால் பாராட்டுப் பெற்றிருப்பார்.

● பி. சுப்புலக்ஷ்மி, கரையிருப்பு.

*? ''மசூதியை இடிப்பது எங்கள் நோக்கமல்ல, ஆனால் மீண்டும் மசூதியைக் கட்டித் தரக் கூடாது'' என்று வாஜ்பாய் கூறுவது பற்றி...?*

! டிசம்பர் 6 வரை இருந்த வாஜ்பாயி வேறு; எல்.கே. அத்வானி கைதாகி மாநில பி. ஜே. பி. அரசுகள் கலைக்கப்பட்ட பிறகு உள்ள வாஜ்பாயி வேறு. அது வாஜ்தான் 'சாலை விபத்து என் நோக்கமல்ல; ஆனால் என் காரில் அடிபட்டவனை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போகக் கூடாது' என்பது போல் பேசுகிறார்.



* ''இடிப்பது நோக்கமல்ல...''

● எம். சந்திரசேகர், மேட்டுமகாதானபுரம்.

*? இரண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானங்களைச் சந்தித்த நரசிம்மராவ் பற்றி...?*

! இரண்டாவதில், தீர்மானம் கொண்டு வந்த பா.ஜ.க. உறுப்பினர்களிலேயே பலர் பிரதமரிடம் நம்பிக்கை தெரிவித்து வோட்டளித்திருக்கின்றனர் என்பது கவனத்துக்குரியது.

● வெங்கட், நாட்டரசன்கோட்டை.

*? 'ஒரு ஆண் பல பெண்களை மணப்பதன் மூலம் எய்ட்ஸ் நோயைக் குறைக்கலாம்' என இலங்கை எம். பி. யோசனை கூறியுள்ளாரே?*

! ''நோயை விட மோசமான சிகிச்சை'' என்று ஆங்கிலப் பழமொழி உண்டு.

● ஆர். கே. மதியழகன், கரப்பட்டி. ❒

*? தமிழக அரசுக்குத் தெரியாமலே தமிழ்நாட்டுக்கு ராணுவம் அனுப்பப்பட்டது குறித்து?*

! இந்திய ராணுவம் தேசத்துக்குள் எங்கு வேணுமானாலும் போகலாம். ஆனால் ஒரு மாநிலத்தில் இயங்க அம் மாநில அரசின் கூட்டுறவு வேண்டும். இங்கே ராணுவம்,

## தமிழ்நாட்டுக்கு ராணுவம் அனுப்பப்பட்டது குறித்து?



* நம்பிக்கைத் தீர்மானம்





✱ சந்தோஷ மனிதன்!  ✱ "ஏன் கூடாது?"

மஸ்ஜித் இடிக்கப்பட்டது தொடர்பாக ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனுப் பப்பட்டது - குறிப்பாக கேரள நிலவரத் தைச் சமாளிக்க நேரலாம் என்பதற்காக. இதைத் தெளிவுபடுத்திய பிறகும் முதல்வ ரும் மற்றவர்களும் 'குய்யோ முறையோ' என்று கூச்சலிடுவது அபத்தம்.

● கு. நாகராஜன், குருசாமிபாளையம்.

*? "அ.தி.மு.க.வில் ஒரு கோடியே இருபது லட்சம் வீரர்கள் உள்ளனர். ராணுவத்தால் தமிழ்நாட்டை அசைக்கவோ ஆட்டவோ முடியாது" என அமைச்சர் செல்வ கணபதி கூறியுள்ளாரே?*

! ராணுவம் வந்து இறங்கியது என்றதுமே ஆட்சி கலைக்கப்படப் போவதாக ஒரு பயம் வந்து விட்டது முதல்வருக்கும் அமைச்சர்களுக்கும். ஊழல் மலிந்த, திற மையற்ற நிர்வாகம் நடக்கும் போது இந்தப் பயம் வந்ததில் வியப்பில்லை.

● ஜெயப்பிரகாஷ், வேட்டைக்காரன்புதூர்.

*? டான்காப் சேர்மன் ராமமூர்த்தி ஐ.ஏ. எஸ். அவர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து?*

! நேர்மையாளர் பலருக்கு இங்கு அடிக் கடி ஏற்படும் அவதிதான் அது.

● மல்லிகை மன்னன், மதுரை.

*? 'ராஜீவ் காந்தியின் படுகொலைக்குத் தமிழக போலீஸும் காங்கிரஸ் தலைமை யும் பொறுப்பற்றவர்களாக நடந்து கொண்டதுதான் காரணம்' என்று வர்மா கமிஷன் அறிக்கை வழங்கியுள்ளதே?*

! தேர்தல் வெற்றி கருதி, ராஜீவ் படு கொலைக்குத் தி.மு.க. மீது காங்கிரஸ் தலைமை பழி சுமத்தியது அதை விடவும் பெரிய பொறுப்பற்ற, கீழ்த்தரமான செயல். ஏனெனில் முன்னது திட்டமிடப்படாமல் நேர்ந்த கவனக் குறைவு. பின்னது திட்ட மிடப்பட்டு நிறைவேறிய*அநாகரிக நாட கம்.

● முகதி சுபா, திருவண்ணாதபுரம்.

*? டிசம்பர் இசை விழாவில் உங்களைக் கவர்ந்த அம்சங்கள்?*

! வெள்ளி விழாவை நெருங்கிக் கொண்டி ருக்கும் நுங்கம்பாக்கம் கல்சுரல் அகாடமி யின் மிக நீநீண்ட நிகழ்ச்சி நிரல். (கின் னஸ்?) அங்கே சுதாவின் வலஜி. அகாடமி யில் மதியம் ஒரு மணிக்கு எள் போட்டால் விழ இடமின்றி விஜயசிவாவுக்குக் கூட்டம். அடுத்த வருஷம் பிரமோஷன் தந்து கூட்டத் தைக் குறைத்து விடலாம்! 'முன் வரிசையில் அமர்ந்து நடனத்தை(?) ஜொள்ளு வழியப் பார்த்தார்கள்' என்ற கப்புடுவின் ஆபாசம். அது தினமணியில் இடம்பெற்ற அதிசயம். தமிழிசையில் ஜெயலலிதா வராது ஏமாற்ற மளித்த குறையை இட்டு நிரப்பிய நெடுஞ் செழியனின் பேச்சு. கிருஷ்ணகான சபையில் ஓய்வு பெற்ற அரசு அதிகாரி வெள்ளோடி, சற்றும் எதிர்பாராதவிதமாக கதகளியின் சிறப்பு பற்றி மிக அழகாகப் (நிருத்தத்தில் பரதத்தை எதனாலும் வெல்ல முடியாது; ஆனால் பாவத்துக்கு கதகளிதான் - அதில் முகத்தின் ஒரு பாதி ஒரு பாவத்தையும் இன்னொரு பாதி வேறு உணர்ச்சியையும் காட்ட வேண்டிய தருணம் உண்டு!) பேசி யது. உச்சத்தில் இருக்கும் டி.வி. சங்கரநாரா யணன், பாரத் கலாசாரில் பக்தவத்சலத்தை யும் மைசூர் நாகராஜையும் உற்சாகப் படுத்தி, தம்பளவுக்கு உயரச் செய்து, கச்சே



✱ "அசைக்க முடியாது!"


ரியை 'ஓஹோ'வென்று களைகட்டச் செய்த அற்புதம். வைர விழா காணும் இண்டியன் ஃபைன் ஆர்ட்ஸில் சிக்கில் மாலா-நீலா- குஞ்சுமணி குழலிசையில் நீலாவின் கரகரப் பிரியா. தொடர்ந்து மூவரும் ஒருவராக வாசித்த தியாகையரின் கிருதி ராமா நீயெட.... (ஆத்மானுபவத்தால் ஏற்படும் சுகம் தனக்கே தெரியாமல் பிறருக்குச் செய் யும் போதனை பயனளிக்குமா? பயங்கர மான புலி பசு வேடம் பூண்டு வந்தால் குழந் தைக்குப் பால் கிடைக்குமா?) அயோத்தி செல்லாமலே ராமருக்கு நடந்த ஆத்மார்த்த மான கரசேவை அந்தக் குழலிசை!

❒ ரூ 25 பரிசு பெறுபவர் :
ஆர். கே. மதியழகன்,
கரடிப்பட்டி (அஞ்சல்),
செல்லப்பம்பட்டி (வழி),
சேலம் - 637 019.

சென்னை, நகரில் மட்டுமல்ல... தமிழ்நாட்டின் பிற நகரங்களிலும் செங்குத்துக் குடியிருப்புகள் பெருகிக் கொண்டிருக்கின்றன. இனி 400–500 சதுரடியில் சிறிதும் பெரிதுமான குடும்பங்கள் வாழ்க்கையை நடத்த வேண்டியதுதான் என்று மத்தியதர வகுப்பினர் மனத்தளவில் தயாராகி வருகிறார்கள். ஆனால், நடைமுறையில் இட நெருக்கடி பிரச்னையாகத்தான் இருக்கிறது.


இந்தப் பிரச்னைக்குப் பகுதியளவேனும் தீர்வு அளிக்கக் கூடிய உபாயங்கள் புருஷோத்தமிடம் உள்ளன.

இடத்தை மிச்சப் படுத்தும் வகையில் ஃபர்னிசர்கள் வடிவமைத்து, தொழில் ரீதியாக விற்பனையும் செய்கிறார் புருஷோத்தம். அவர் வடிவமைத்த சில மாடல்கள் இதோ :




இதன் பெயர் 'செவன் வொண்டர்ஸ்'... டிரஸ்ஸிங் டேபிள் அலமாரி....

# சின்ன இடத்தில் சௌகரியமாய் வாழ...



இப்படி இருக்கையில் வார்ட்ரோப் (அலமாரி)....




பக்கத்தை பிரித்தால் சோஃபா...




... இப்படித் திறந்தால் இருக்கைகளுடன் கூடிய உணவு அல்லது எழுதும் மேஜை.

... இன்னும் பிரித்தால் இரண்டு அல்லது மூன்று பேர் படுக்கக் கூடிய படுக்கை...




... பக்கவாட்டில் சற்றே இழுத்தால் வெளிப்படும் பலகை ஒரு சிறிய மேஜை....



படங்கள் : பாலாஜி.

ஒற்றைக் கட்டில்....





...... இப்படி விரியும்....

## சார்மினார் சானல் :



# சட்டசபையில் தற்கொலை நாடகம்!

❒ சட்ட சபையில் கைகலப்பும், மைக் உடைப்பும் சர்வ சாதாரணம். ஆனால் ஆந்திர சட்ட சபையில் நடைபெற்ற தற்கொலை நாடகம் ஆபாசத்தின் உச்சம்.

1990 - ல், மின்சாரம் பற்றிய துடிப்பான விவாதத்தின் போது - 1992 க்குள் நிறை வேற்றுவதாகச் சில வாக்குறுதிகள் கூறி யிருந்தார் அமைச்சர் ரோஸய்யா. அதோடு நிறுத்தக் கூடாதோ? ''தவறினால் தூக்குப் போட்டுக் கொள்வேன்'' என்று ரோஷமாகக் கூறியிருந்தார்! இதனை எதிர்க்கட்சி தெலுங்கு தேசக்காரர்கள் நினைவூட்டினர். ரோஸய்யா 'ஷாக்' அடையவில்லை. மாறாக, மந்திரவாதி போல் மூன்று கயிறுகளை எடுத்தார்.....!

''வாக்கைக் காப்பாற்றாதவன் தண்டனைக்குரியவனே ஆகையால் சட்டசபையில் நான் தூக்குப் போட்டுக் கொள்ளவே இந்தக் கயிறு'' என்று கூறியதுடன் நிற்காமல் கயிறில் சின்ன 'முடிச்சு'ம் போட்டார்! பிறகு, ''எனது காங்கிரஸ் நண்பர்கள், 'சுய நலத்துடன் தனியாக சுவர்க்கம் போக வேண்டாம்; எதிர்க்கட்சித் தலைவர் என்.டி. ஆரையும் அழைத்துக் கொள்ளுங்கள். பட்டா வழங்குவதில் அவரும் தமது வாக்கைக் காப்பாற்றவில்லை' என்று கூறுகிறார்கள்... அவருக்கு முதல் தாம்பூலம் அளிக்கிறேன். அவருடைய மந்திரிக் குழுவில் இருந்த சந்திரபாபு நாயுடு (ராமராவ் மாப்பிள்ளை) சத்துணவுத் திட்டத்தை அம்போல் என்று விட்டு விட்டார். அவருக்கும் ஒரு கயிறு பரிசு....''

இவ்வாறு கூறி, ரோஸய்யா இரண்டு கயிறுகளை எதிர்க்கட்சிக்கு அனுப்பினார். இதற்குள் உள்துறை அமைச்சர் மைசூர்யா ரெட்டி குறுக்கிட்டு, ''அசெம்ப்ளியில் தற்கொலை முயற்சிக்குப் போலீஸ் கேஸ் பதிவு செய்வேன்'' என்று கூற, ரோஸய்யா, ''சட்ட சபைக்குள் எங்களை அரெஸ்ட் செய்ய முடியாது'' என்று பதிலுக்கு ஒரு போடு போட.... பதினைந்து நிமிஷங்களுக்குப் பொது மக்கள் செலவில் அவரவரும் 'கயிறு' திரித்தார்கள்!

### ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் போர்க் கொடி!

❒ ஆந்திர மாநிலத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் போர்க் கொடி தூக்கி இருக்கிறார்கள். டிஸம்பர் முடிவில் ஓய்வு பெறுகிறார் பிரதம காரியதரிசி அரோரா. பல சீனியர் அதிகாரிகளை (1958 - ல் நுழைந்தவர்கள்) ஓரங்கட்டி, பத்து பேர் தாண்டி, 1961 - ம் ஆண்டு பணியில் நுழைந்த 'ரெட்டி' ஒருவரை பிரதம காரியதரிசியாக்க முயற்சி நடைபெறுகிறது - காரணம் முதல்வர் விஜய பாஸ்கர ரெட்டியின் விருப்பு வெறுப்புகள் தாம் என்கிறார்கள். 110 ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் கூடி, தங்கள் சங்கம் மூலம் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். அரோராவிற்கு நீடிப்புத் தந்தால் கூட ஒத்துழைப்புத் தர மாட்டோம் என்கிறார்கள்.

### காப்டன்களும் கண்டங்களும்!

❒ அரசியலிலும் சரி, கிரிக்கெட்டிலும் சரி சமீபகாலத்தில் ஹைதராபாத் 'தலைமை'க்குத் தலைகுனிவு ஏற்பட்டுள்ளது! பி.வி. நரசிம்ம ராவுக்கு அயோத்தியா கண்டம்! அஸாருதீனுக்கு ஆப்பிரிக்கா கண்டம்! ஆளும் பிரதமரை 'கர'சேவகர்கள் 'கை' விட்டனர். கிரிக்கெட்டில் மஞ்சரே'கர்', டெண்டுல்'கர்' சேவை தரம் குறைந்தது. பிரதமர் வாய்ப்புக்களை நழுவ விட்டது போல அஸார் 'காச்'களை நழுவ விட்டார்!

### தர்ணா - பிஜேபி ஸ்டைல்

❒ பயந்து விடாதீர்கள்! படத்தில் இருப்பவர்கள் கொள்ளைக்காரர்கள் அல்ல; கைதானவர்களும் அல்ல! பாரதிய ஜனதா கட்சி ஆட்சிபுரியும் மூன்று அரசுகள் நீக்கப்பட்டதை எதிர்த்து விவாதம் கோரி, ஆந்திர பிஜேபி அங்கத்தினர்கள் கோஷமிட்டு அசெம்ப்ளி நடைபெறாத வண்ணம் குறுக்கிட்டனர்.

ஆறு அங்கத்தினர்கள் தற்காலிகமாக நீக்கப்பட்டு மார்ஷல் மூலம் குண்டுக்கட்டாகத் தூக்கி வெளியேற்றப்பட்டனர். வெளியே அவர்கள் புதுமையான முறையில் தர்ணா செய்தனர். வாய்க்குக் கறுப்புத் துணி அடைப்பு; கைகளையும் கழுத்தையும் இணைத்துச் சங்கிலி, 'கட்டுண்டோம்' என்ற முறையில்!

– சுபஸ்ரீ

# பார்க் டவுன் பெனிபிட் பண்ட் லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1985

**223, தெற்கு தங்கசாலை வீதி (முதல் மாடி), சென்னை-600 003. போன் : 582676**

## பிக்சட் டிபாசிட் திட்டம்

| 46 நாள் | 90 நாள் | 6 மாதம் | 1 ஆண்டு | 2 ஆண்டு | 3 ஆண்டு | 4 ஆண்டு | 5 ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|
| 13% | 14% | 15% | 17% | 18% | 18.5% | 19% | 20% |

மாத வட்டிக்கான செக்குகள் முன்கூட்டியே கொடுக்கப்படும்.

உங்கள் டிபாசிட்டுகள் 45 மாதங்களில் 2 மடங்காகிறது 90 மாதங்களில் 4 மடங்காகிறது.

## காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

(அ) பிரதி மாதம் ரூ. 100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்துவீர்.
முதல் 5-ம் ஆண்டு முடிவில் ரூ. 6000/-ஐத் திரும்பப் பெறுவீர்.
இரண்டாம் 5-ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ. 6000/-ஐத் திரும்பப் பெறுவீர்.
மூன்றாம் 5-ம் ஆண்டு முடிவில் ரூ. 50,000/- பெறுவீர்.

(ஆ) ரூ. 6320/- முதலீடு செய்து 5-ம் ஆண்டு முடிவில் ரூ. 6000/-ம்
10-ம் ஆண்டு முடிவில் ரூ. 6000/-ம்
15-ம் ஆண்டு முடிவில் ரூ. 56,320/- பெறுவீர்.

## பென்ஷனர் நலத்திட்டம்

| வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம். | | |
|---|---|---|
| ரூ. 10,000/-அதற்கு மேலும் | 12 மாதங்கள் | வட்டி 19½% |
| ரூ. 10,000/-கீழ் | | வட்டி 18½% |

## ரெக்கரிங் டிபாசிட் திட்டம்

| பிரதி மாத டிபாசிட் | ரூ. 25/-ம் அதன் பெருக்கமும் பெற்றுக் கொள்ளப்படும் மாதங்கள் முடிவில் கிடைக்கும் தொகை | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| ரூ. 25 | 330 | 715 | 1,180 | 1,800 | 2,510 | 3,350 | 4,370 |
| ரூ. 100 | 1,320 | 2,860 | 4,720 | 7,200 | 10,050 | 13,400 | 17,500 |

## செல்வக்களஞ்சியம் டிபாசிட் திட்டம்

உங்கள் குழந்தையைக் குபேரனாகக் காண ஆசையா! இதோ
ரூ. 7500/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ. 1,20,000/- பெறலாம்
ரூ. 9000/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ. 1,44,000/- பெறலாம்

**• சேவிங்ஸ் கணக்குகள் மீது 10% வட்டி**

**கடன் வேண்டுமா? எங்களை அணுகுங்கள். நகைக்கடன் சவரனுக்கு ரூ. 2,400/- வட்டி விகிதம் ரூ. 1.85 கடனுக்கு உச்சவரம்பு இல்லை. தருவதில் தாமதமில்லை. R.D. கட்ட வேண்டியதில்லை...**

கௌரவ ஆலோசகர் :
**P. பாலசுப்ரமணியம், B.Sc**
முதன்மை அறங்காவலர்
கந்த கோட்டம், சென்னை-3

(Friday Weekly Holiday.)

இயக்குநர் குழுத் தலைவர் :
**R. விவேகாநந்தன், B.Com.**

பங்குதாரர்களுக்கு மட்டும் Business Hours : Week days 8.30 a.m. to 12.30 p.m. & 2.00 p.m. to 6.00 p.m. Sunday 8.30 a.m. to 12 noon.

சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டி

SURESH





# சிந்தனையைக் கூர்மையாக்கும் சீட்டாட்டம்!

சீட்டாட்டம் என்றாலே சூதாட்டம்தான் என்ற சமன்பாடு நம் மனத்தில் ஊறிப் போயிருக்கிறது. ஆனால், 'பிரிட்ஜ்' என்ற ஆட்ட வகையில் சிந்தனைக்குச் சவாலும் மூடிவெடுக்கும் ஆற்றலுக்குச் சோதனையும் நிறைந்துள்ளது. அதனால்தான் சென்னையில் நடக்கும் தேசிய அளவிலான 34 வது பிரிட்ஜ் போட்டிக்குப் பல தொழில் நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களை அனுப்பி வைத்துள்ளன!

சென்னை ராகவேந்திரா திருமண மண்டபத்தில் 176 அணிகள் ஆடுகின்றன. "எதிராளியைத் துல்லியமாக எடை போட்டு அதற்கேற்ப விளையாட்டு முறைகளை அமைத்துக் கொள்வதில்தான் இந்த ஆட்டத்தின் வெற்றியே அடங்கியுள்ளது. நினைவாற்றலும் இதற்கு இன்றியமையாதது. தொழில், வியாபார முன்னேற்றத்துக்கும் இந்த அம்சங்கள் அத்தியாவசியமானவை. ஏன் வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கே அடித்தளமானவை..." என்கிறார் கோவை லட்சுமி மில்ஸ் அதிபர் ஜி.கே. சுந்தரம்.

தமிழ் நாடு பிரிட்ஜ் அசோசியேஷன் தலைவர் ஆர் ரத்னம், அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் "பிரிட்ஜ் ஒரு பாடமாகவே வைக்கப்பட்டு, அனைத்துக் கல்லூரிகளுக்கிடையே போட்டிகள் நடத்தப்படுகின்றன..." என்கிறார். "எனினும் டென்னிஸ், கிரிக்கெட் போன்ற ஆட்டங்களில் புரளும் பணம் இந்த விளையாட்டில் இன்னும் எட்டிப் பார்க்கவில்லை."

பிரிட்ஜ் என்ற பெயர் எப்படி வந்தது என்பதற்குச் சுவையான விளக்கம் அளித்தார் இந்திய பிரிட்ஜ் ஃபெடரேஷன் தலைவர் டாக்டர் டிப்ரோவாலா:

துருக்கியில் போர் நடந்து கொண்டிருந்த சமயம், ராணுவ அதிகாரிகள் மாலை வேளைகளில் ஒரு பாலத்தைக் கடந்து சென்று ஆட்டத்துக்கு அணி சேர்த்துக் கொள்வார்களாம். அந்தப் பாலத்தின் நினைவாக ஆட்டத்துக்கும் பிரிட்ஜ் என்று பெயர் வந்துவிட்டது!

இன்றைக்கும் டிப்ரோவாலா போன்ற படு பிஸியான மருத்துவர்களைக் கடுமையான உழைப்பிலிருந்து உற்சாகமான மனமாற்றத்துக்கு அழைத்துச் செல்லும் பாலமாகவே அமைந்து வருகிறது இந்த ஆட்டம்.

உலக நாடுகளிடையே (பிரிட்ஜ் ஆட்டத்தில்) இந்தியாவின் நிலை என்ன? 86 நாடுகள் பங்கேற்கும் அனைத்துலகப் போட்டியில் ஒரே ஒரு முறைதான் நாம் செமி ஃபைனலையே எட்டியிருக்கிறோம்.

"இந்திய அரசின் அங்கீகாரம் பெற்ற 39 விளையாட்டுக்களுள் கடைசி இடம் பெறுவது பிரிட்ஜ்தான்" என்கிறார் தமிழ்நாடு பிரிட்ஜ் அசோசியேஷன் கௌரவச் செயலாளர் மோகன் ராவ்.

– நிர்மலா சக்கரவர்த்தி


படங்கள் : கோபிநாத்

அடுத்த இதழ் :


# கல்கி


## 17.1.93

# பொங்கல் சிறப்பிதழ்




## ஜில்லு-ஜானு ஸ்பெஷல்!





- ஏராளமான சிரிப்பு அம்சங்கள்!
- விஷ்வக்சேனன் எழுதும் பாண்டியன் மகள்
  - சரித்திரத் தொடர் ஆரம்பம்
- வாசகர்களுக்குப் பரிசுப் போட்டி!


அதிக பக்கங்கள் : அதே விலை!

## 24.1.93 கல்கி இதழில் -

# ஜெளகார் ஜானகி எழுதும்

அனுபவத் தொடர் ஆரம்பம்




356
திமுக அரசு
ஆஹா, என்ன பவர்ஃபுல் கிக்!...
பி.ஜே.பி. அரசுகள்
போற போக்கைப் பார்த்தா நமக்கு ஆபத்து வந்திடும் போலிருக்கே! இந்த அநியாயத்தைக் கேட்பாரில்லையா!...
ஏற்கனவே கிரகச்சேர்க்கை சரியில்லேன்னு பலதும் சொல்லியிருக்கேன்... போதாக்குறைக்கு அயோத்தியிலே அ.தி.மு.க. துண்டு... தமிழ்நாட்டில ஆர்.எஸ்.எஸ். கூட்டம்... ஜவுளி வாங்கின கணக்கு... வருமான மோசடி... அஷ்டமத்துல சனி... மொத்தத்துல ஜனவரி-31, நாள் நல்லா இல்லே!...
ஜோஸியர் சுப்ர மணிய சுவாமி
அந்தம்மா கேட்காட்டா என்ன? நீங்க சொல்லுங்க ஜோஸியம்!
சந்திரலேகா
ஜெ. ஜாதகம்
ஃப்ரெண்டுங்கதான்! சும்மா பொழுது போகாமே தமாஷுக்கு சண்டை போடறாங்க
வாழப்பாடி
ஜெ.



# கல்கி



1993
ஜனவரி 10
மலர் : 51
இதழ் : 24
ஆங்கீரச
மார்கழி 26

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

## இமேஜைக் கெடுத்த காமிக் ஷோ!

'அ.தி.மு.க.வின் பொதுக் குழு, செயற்குழுக் கூட்டம் ஓர் உட்கட்சி விவகாரம்' என்று சொன்ன அளவில் அக் கட்சித் தலைவர் ஜெயலலிதாவின் கூற்று சரியானது. அதற்கு மேல் அவர் கூறியுள்ளவை எதுவும் அவருக்கோ கட்சிக்கோ ஆட்சிக்கோ பெருமை சேர்ப்பதாக இல்லை. அங்கே பத்திரிகையாளருக்கு அழைப்பு இல்லை என்றும் ஒட்டுக் கேட்டு எழுதப்பட்ட ஆதாரமற்ற செய்திகளின் அடிப்படையில் வாழப்பாடி எதிர்ப்புத் தெரிவிப்பதில் அர்த்தமில்லை என்றும் சொல்லியிருக்கிறார்.

உட்கட்சி விவகாரம்தான் என்றாலும் அக் கட்சி இன்று ஆட்சியில் இருக்கின்ற காரணத்தால் கட்சியில் விவாதிக்கப்படுகிற விஷயங்கள், கொள்கை விளக்கங்கள் முதலியன மிகவும் முக்கியத்துவம் பெற்றவையாகின்றன. அவற்றை மக்கள் அறிந்து கொள்வது அவசியம் என்பது மட்டுமல்ல, அந்த உரிமையும் ஜனநாயகத்தில் மக்களுக்கு உண்டு. எனவே பத்திரிகையாளர்களைக் கௌரவமாக வரவேற்று வசதிகள் செய்து தந்திருக்க வேண்டுமே தவிர, வெளியே நிறுத்தி அவ்வப்போது ஜன்னலைத் திறந்து மூடுகிற கண்ணாமூச்சி விளையாட்டில் அ.தி.மு.க. இறங்கி இருக்கக் கூடாது. இதனைப் பத்திரிகையாளர் சங்கம் எடுத்துக்காட்டி, பத்திரிகைகளில் வெளி வந்த செய்திகள் ஆதாரமற்றவை என்பது போல் முதல்வர் மூடிமறைக்க முயல்வது அழகல்ல என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. வாழப்பாடியார் விண்டுரைத்துள்ளது போல அ.தி.மு.க. கட்சிப் பத்திரிகைகளே செய்திகளை வெளியிட்டுள்ளன. அவை பிற பத்திரிகைகளிலிருந்து அதிகமாக வித்தியாசப்படவில்லை.

●● 'காங்கிரஸின் கையை முறிப்போம்' என்றெல்லாம் ஜெயலலிதா பேசியது வாழப்பாடியார் உள்பட காங்கிரஸ்காரர்களை மிகுந்த கோபத்துக்கு உள்ளாக்கியிருக்கிறது.

●● 356 பிரயோகித்துத் தி.மு.க. அரசைப் பதவி நீக்கம் செய்த போது மகிழ்ச்சியுடன் வரவேற்ற ஜெயலலிதா, தற்போது 356 பிரிவை எதிர்ப்பதை 'முரண்பாடு' என்று மு.க. எடுத்துக்காட்ட, முதல்வர் நமது பரிதாபத்துக்குரியவராகிறார்.

●● கட்சிக்காரர்களுக்காக நாலரை லட்சம் வேலைகள்; காண்ட்ராக்டுகள் கட்சிக்காரர்களுக்குப் பிரித்து வழங்கப்படும் என்றெல்லாம் பேசப்பட்டதும், 'கள்ளச் சாராய ஊழலில் கட்சிக்காரர்களே ஈடுபட்டிருக்கிறார்களே' என்ற 'ஜெ'யின் அங்கலாய்ப்பும் தமிழக ஜனதா தலைவர் சந்திரசேகரின் கவனத்தைக் கவர, ஜெயலலிதா கண்டனத்துக்கும் கேலிக்கும் உள்ளாகியிருக்கிறார்.

●● பிரதமர் கன்னியாகுமரிக்கு வந்திருந்த போது 'சுப்பிரமணியம் சுவாமியை அடக்காத பிரதமர்' என்பதாக அ.தி.மு.க.வினர் எழுப்பிய எதிர்ப்புக் கோஷங்கள் அர்த்தமற்றது மட்டுமல்ல, அநாகரிகமானது. 'இதை 'ஜெ' அடக்கவுமில்லை, இதற்காக வருந்தவும் இல்லை என்னும் போது, அவரே விரும்பி வரவேற்கிறார் என்றுதான் அர்த்தம்' என்பதாக நல்லாட்சி இயக்கத் தலைவர்களுள் ஒருவரான முந்நாள் அமைச்சர் ராஜாராம் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

●● பொதுக் குழுவில் அமைச்சர்கள், எம்.எல்.ஏக்கள் மீது சுமத்தப்பட்ட புகார்கள், தலைவர்கள் மீது புகார் எழுதிப் போட வைக்கப்பட்ட பெட்டிகள் எல்லாமே சிரிப்பாய்ச் சிரிக்க அடிக்கும் காரியங்கள் ஆகி விட்டன.

ஆக மொத்தம் இந்த 'காமிக் ஷோ' முதல்வரின் 'இமேஜ்' மேலும் தேய்ந்து விகாரப்பட்டுப் போகவே வழிவகுத்துள்ளது.

என்னதான் பிரதமர் நாடாளுமன்றத்தில் ஆதரவு தேவை என்பதற்காகக் "கூட்டணி நிலைக்கும்" என்று பேசினாலும், இனி தமிழகத்தில் காங்கிரஸும் அ.தி.மு.க.வும் அனுசரித்துப் போவது என்பது நடக்காத காரியமாகி விட்டது. தமிழக காங்கிரஸில் இரு கோஷ்டியினருமே விரும்பாத ஒரு கூட்டணி மத்தியத் தலைமையின் ஆதரவுடன் மட்டும் நீண்ட காலத்துக்கு நீடிக்க முடியாது.

இன்றில்லாவிட்டாலும் நாளை கூட்டணியில் வெட்டு விழுவது உறுதி. அந்த வெட்டு வருமுன்னரே இங்கு ஒரு ஒட்டுதல் வேலை நடக்க வேண்டும். பழசையெல்லாம் மறந்து, ஒதுக்கி வைத்து விட்டு மூப்பனார் - வாழப்பாடி கோஷ்டிகள் நெருங்கி வந்து, ஒரு 'ஃபெவிக்கால்' பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பாரம்பரியப் பெருமைமிக்க காங்கிரஸ், இங்கே மதிப்பும் மரியாதையும் பெற்று விளங்க, இது இன்றியமையாதது. இதைச் செய்யாவிடில் இருந்த இடம் தெரியாமல் போவதைத் தவிர்க்க முடியாது.

**பம்பாய்க் கடிதம் :**

# ஹேமாவின் பதற்றம்!



★ ஹேமா

## பம்பாயின் புது ஷெரீஃப்

ஷெரீஃப் பதவி அலங்காரமானது தான். ஆனாலும் பம்பாயில் 325 வருடங்களாக இருந்து வரும் இந்த ஒரு வருடப் பதவிக்கு, ஒரு மதிப்பு உண்டு. நானா சுதாசமா, இந்தப் பதவியில் இருந்து கொண்டு நிறைய வேலையும் செய்ய முடியும், விளம்பரமும் தேடிக் கொள்ள முடியும் என்பதை நிரூபித்தார். அவரைத் தொடர்ந்து திருமதி பாருல் படேலும் இப்பதவியில் பிரகாசித்தார். அவருக்கு அடுத்தபடியாக ஜெயா பச்சன் நியமிக்கப்படுவார் எனப் பரவலாகப் பேசப்பட்டது. ஆனால் பக்ருதீன் கொராக்கிவாலா என்பவரைத்தான் இப்போது ஷெரீஃப்பாக நியமித்துள்ளார் முதலமைச்சர். பம்பாயின் பிரபல டிபார்ட்மெண்டல் ஸ்டோரான 'அக்பர் அலி'யின் தலைவர் கொராக்கி வாலா.



★ கொராக்கிவாலா

## ஆசிட் விவகாரம்

'சந்திரலேகா வழக்கில் பம்பாயில் கைது செய்யப்பட்ட சுவாமிநாதன் தேவர் உண்மையான குற்றவாளிதானா?' என்று பம்பாய் போலீஸார் சந்தேகப்படுவதாக இங்கு செய்திகள். இச்செய்திகளின்படி, தாக்குதலுக்கு ஒரு மாதம் முன்பு சென்னையிலிருந்து இரண்டு அரசியல்வாதிகள் பம்பாயின் முக்கிய குண்டர்களில் ஒருவரான கீம் பகதூர் தாப்பாவைச் சந்தித்ததாக நம்பப்படுகிறது. மேலும் சென்னை போலீஸால் கைது செய்யப்பட்ட மோரே, அண்ணாதுரை, பாந்த்வே என்ற மூன்று குற்றவாளிகளும் பெயிலில் வெளியே விடப்பட்டுள்ளனர். 'இவர்களை ஏன் தடா சட்டம் அல்லது தேசிய பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்திக் கைது செய்யவில்லை?' என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது.

## ஹேமாவின் பதற்றம்

டிசம்பர் இரண்டாம் வாரத்தில் வெளியாகவிருந்த நிறைய படங்கள் கலவரங்களினால் வெளிவரவில்லை. இதனாலோ என்னவோ, வெளியிடப்பட்ட ஒரே படமான "தார்" (Dhaar - ஜிதேந்திரா) நன்றாக ஓடுகிறது. ஹேமாமாலினியின் சொந்தத் தயாரிப்பான 'தில் ஆஷ்னா ஹை' படத்தின் வெளியீடு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதன் விடியோ பதிப்புகள் விடியோகாஸ்தர்களுக்குக் கொடுக்கப்பட்டு விட்டன. படம் வெளியிட்டிருந்த முன்பு கேசட்டுகளை விற்பனை - வாடகைக்குத் தர வேண்டாம் என்று ஹேமா வேண்டிக் கொண்டிருக்கிறார். விடியோகாஸ்தர்கள்; ஒத்துழைக்கவில்லையானால் படம் படுத்து விடும்!

## சரித்திரம்படைத்த 'நவாகால்'

நீல்காந்த் காடில்கர் ஆசிரியராக உள்ள மராத்திப் பத்திரிகை 'நவாகால்' இதில் ஏழு பேர் மட்டுமே பணியாற்றுகின்றனர். அவர்களில் காடில்கரின் இரு பெண்களும் மனைவியும் அடக்கம்! சாதாரண நாட்களில் சராசரி விற்பனை மூன்று லட்சம் உள்ள இப்பத்திரிகை, கலவரங்கள் நடந்த சமயத்தில் $6^1/_2$ லட்சம் பிரதிகள் விற்றுச் சரித்திரம் படைத்துள்ளது! தலையங்கத்திற்காக மட்டுமே பெரும்பாலும் வாங்கப்படும் நான்கு பக்கங்கள் கொண்ட இப்பத்திரிகையின் விலை 75 பைசா. இப்பத்திரிகை இவரது வீட்டிலிருந்தே பிரசுரிக்கப்படுகிறது. இவரே 'சந்தியாகால்' என்ற மாலைப் பத்திரிகையும் வெளியிடுகிறார். அது $1^1/_2$ லட்சம் பிரதிகள் விற்பனையாகிறது. இந்தியாவிலேயே அதிகமாக விற்கப்படும் மாலைப் பத்திரிகை இதுதான்.

## கலவரத்தின் நடுவே பம்பாய்

இருநூறுக்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் (90% க்கு மேல் போலீஸ் சுட்டதால்), நூற்றுக் கணக்கான வாகன எரிப்புகள், மின்சார வண்டிகளின் சேதம், மூன்று தினங்கள் வண்டிகள் ஓடாததால் அலுவலகங்கள் சரிவர இயங்காமல் கோடிக் கணக்கில் நஷ்டம். பாலிவுட்டிலும், மூன்று தினங்களுக்கு ஷூட்டிங் எதுவும் நடக்காததால் கோடிக் கணக்கில் நஷ்டம்.

சுக்தான்கர் என்ற I.A.S. (retired) அதிகாரி, வன்முறைக் கலவரங்களைப் பற்றிய விசாரணைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்.

முஸ்லீம்கள் அதிகம் உள்ள பம்பாயின் புறநகர்ப் பகுதியான பிவாண்டியில் கலவரங்களின் பாதிப்புகள் ஏதும் இல்லை. காரணம் 1990 - ல் இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள 70 க்கும் மேற்பட்ட மொஹல்லா (தெரு) கமிட்டிகளே. பல இனத்தினரும் உள்ள இந்த கமிட்டிகளின் ஒற்றுமையே இங்கு அமைதி நிலவ உதவியது.

– அம்ருதா பார்த்தசாரதி

உங்கள் ஜாதக பலனை
கேட்டறியுங்கள்

ஜோதிட
போன்

## வார பலன்கள்

☎ 001 609 936 34 + □□

மேலே கொடுத்துள்ள பதினொரு எண்களையும் டயல் செய்வதுடன் உங்கள் சூரிய ராசிக்கு கொடுத்துள்ள இரண்டு எண்களையும் சேர்த்து டயல் செய்யவும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 |
| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி |
| 57 | 58 | 59 | 60 | 61 | 62 |
| துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |

## டாரட் பலன்கள்

ஒரு பண்டைய ஆருட முறை.
உங்கள் குறிப்பிட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கிறது.

அழையுங்கள் :

**0016099363450**

## பொருத்தம்

நீங்களும் உங்கள் துணையும் எவ்வாறு ஒத்துப்போக முடிகிறது?

அழையுங்கள் :


**0016099363474**

இது ஒரு இன்டர்நேஷனல் போன்கால். அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் 30 நொடிகளுக்கு ரூ. 30 மட்டுமே.
வேர்ல்டு போன் இன்கார்ப். புனை.

Anthem



தேக்கு! தேக்கு! தேக்கு!



# இயற்கை அன்னையின் அன்பளிப்பு
# எதிர்கால வாழ்வின் பரிபூரண பாதுகாப்பு

## நோபிள் தேக்கு பம்பர் திட்டம்

ரூ. 900|-க்கு இரண்டு மரத்தை விதைத்து
20 ஆண்டுகளில் ரூ.1,50,000|-த்தை அறுவடை செய்வீர்.

இருபது ஆண்டுகளில் மற்ற முதலீடுகளின் லாபம்
வைப்பு நிதியில் — 16 மடங்கு
தங்கத்தில் — 20 மடங்கு
சொத்துகளில் — 50 மடங்கு

ஆனால் மர முதலீட்டிலோ 166 மடங்கு எப்படி?

- 1 மரத்திற்கு 37.5 கன அடி
  2 மரத்திற்கு 75 கன அடி

Hurry! 2 trees scheme Upto 31st Jan.'93 only.

இன்றைய விலை கன அடி ரூ.750|-
20 ஆண்டுகளில் கன அடி ரூ.2000|-
ஆக ரூ 2.000 x 75 க.அடி = ரூ. 1,50,000|-

வழங்குபவர்கள்:

**நோபிள் ஹெல்த் ரிசார்ட் (பி) லிமிடெட்**

*A-188-B, பூந்தமல்லி நெடுஞ்சாலை, கீழ்பாக்கம், சென்னை-600 010. போன்: 6412210*

*தவணை முறை திட்டமும் உண்டு! (ஏஜெண்டுகள் தேவை)*

Future Ads

# பாட்டி கால பல்லவிகள் பறந்தன!

◆ பிரெஞ்சு கலாசாரம் உலகிற்கு வழங்கிய முக்கியக் கொடைகளில் ஒன்று சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கோட்பாடு. பிரெஞ்சு கலாசாரத்தின் ஜன்னல் என்று கூறப்படும் புதுவையின் பிரஜைகளால் மிக இயல்பாக, சமத்துவக் கோட்பாடு நடைமுறைப் படுத்தப்படுவதைத் தெளிவாகக் கூறியது பிரபஞ்சனின் 'அனாதை' சிறுகதை. அக்கதையில் பிரபஞ்சன் கையாண்டுள்ள வரலாற்றுச் சிறப்புடன் கூடிய பிரெஞ்சு பாதிப்புடனான தமிழ் நடையும் குறிப்பிடத்தக்கதாகும்.

பக்கம் 45 - ல் 'எட்டு மணி வேலை' என்ற செய்தி வெளியாகியுள்ளது. அதில் ''புதுவை'' என்ற சொல் விடுபட்டுப் போயிருக்கிறது. ''புதுவைப் பஞ்சாலைகளில்'' என்றிருக்க வேண்டும்.

வில்லியனூர், இரா. நாகசுந்தரம்.

◆ 'உலகத்தின் கடைசி மனுஷன்தான் அனாதை' - என்ன அருமையான வார்த்தைகள்! பிரபஞ்சனின் சிறுகதை அருமையாக இருந்தது!

திருச்சி - 7, தென்னூர் எம். யாதவன்.

◆ பாண்டிச்சேரியைச் சுறுசுறுப்பாகத் தேனியைப் போல சுற்றோ சுற்று என்று சுற்றி, ஏராளமான இனிய தகவல்களைத் திரட்டித் தந்திருக்கிறீர்கள்!

மங்கைநல்லூர், ஆர். செல்வராணி.

◆ மெழுகுவர்த்தி ஒளியில் படித்தல் ஒருவித பயிற்சி என்று கூறி, பாட்டிகால எதிர்மறைப் பல்லவிகளுக்கு டாடா கூறிவிட்டீர்! பயனுள்ள கட்டுரை.

திருச்சி - 2, ஆங்கரை ஆனந்.

◆ ராய் கூறிய பல எளிமையான பயிற்சிகள், எனது கிட்டப் பார்வைக்குத் தீர்வு காண உதவும் என்ற என் தன்னம்பிக்கை வில்வருபம் எடுத்துள்ளது. நல்ல பயிற்சி முறைகளைக் கூறியமைக்கு நன்றி! மக்களுக்கு இவ்வாறு பல பயனுள்ள செய்தி தரும் 'கல்கி'யை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

திருச்சி - 8, தமிழ்முகன்.

◆ பாண்டிச்சேரியை நாங்களே ஒரு ரவுண்ட் அடித்தது போல் இருந்தது. கவர்னர் ஹர்ஸ்வருப் சிங் வித்தியாசமானவர்தான் போலிருக்கிறது! ஓவியராகவும் திகழ்கிறாரே - இது புதிய செய்தி!

தூத்துக்குடி - எஸ். ராமசுப்பிரமணியன்.

◆ மதத்தின் பெயரால் வோட்டு பெற முடியாது, என்ற நிலை உருவானால்தான் பிரச்னைகள் தீரும் என்ற தங்களின் ஆணித்தரமான தலையங்க வரிகள், இனியாவது அரசியல்வாதிகளுக்கு உரைக்க வேண்டும்!

கும்பகோணம், எஸ்.கே. மூர்த்தி.

◆ புத்திசாலித்தனமற்ற, சந்தர்ப்பவாதக் கொள்கையாலும், செயலாலும் காங்கிரஸ் பலவீனம் அடைந்தது போதாதா. அர்ஜுன் சிங் இதற்கு மேலும் பிரச்னையை வளர்க்காமல் விட்டு விட்டால் அதுவே காங்கிரஸ் வளர்ச்சிக்கு உதவியதாக அமையும். ஆனால் அவர் அதன் வீழ்ச்சிக்குத்தான் உதவுவார் போல் தெரிகிறது!

திருத்துறைப்பூண்டி, ரவிகுமார்.

◆ பாண்டிச்சேரி ரவுண்ட் அப் கட்டுரை அந்நகரில் ஒரு சுற்றுலாப்பயணி சுற்றுப் பயணம் செய்தது போல் நிலைமைகளைத் தெளிவாக எடுத்துக் காட்டியிருந்தது.

தக்கோலம், அ. முஸ்தபா.

◆ கிச்சாவின் T.V. மர்சனம் Veri, Veri கிச்சு கிச்சு மூட்டுகிறது!

கொணவட்டம், கே.ஆர். தேவேந்திரன்.

◆ நா. நாகராஜன் எழுதிய 'மறுபடி ஜனனம்' சிறுகதை, சினிமாவின் மூலம் தங்களின் சிந்தனைகளை மக்களுக்குச் சொல்லத் துடிக்கும் இன்றைய இளம் இயக்குனர்களுக்குத் தயாரிப்பாளர்களால் ஏற்படும் இடையூறுகளை அருமையாகச் சித்தரித்துக் காட்டியது.

போடிநாயக்கனூர், ரா. நாச்சிமுத்து.

◆ ''அறிவொளி இயக்கம் என்பது முழுக்க முழுக்க ஓர் அரசு இயக்கம்தான்'' என்கிறார் புதுவை கல்வி அமைச்சர். இது தவறானது. தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பங்கேற்பை மையமாகக் கொண்ட சுயாதிகார அமைப்பு. புதுவையில் மட்டும் அன்றி, தமிழகம் உட்பட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் அந்தந்த மாநில அறிவியல் இயக்கங்களே இந்த இயக்கத்தில் முக்கிய பங்கு பெறுகின்றன.

இரண்டாவது நிலை பாடத்திட்டத்தில் இந்தியா குறித்துத் தவறான தகவல்கள் எழுதியிருக்கிறார்கள் என்கிறார் அமைச்சர். அதுவும் சரியல்ல, வெற்றி விழா மலரில் தற்போதைய நாட்டு நிலை பற்றி ஒரு கட்டுரை எழுதப்பட்டது; அதுவும் சரியான புள்ளி விவரங்களே என்று நிரூபிக்கப்பட்டு விட்டது.

இரண்டாவது நிலைக்காக தேசிய எழுத்தறிவு இயக்கத்தின் அனுமதி பெற்ற, சர்ச்சைக்கிடமில்லாத பாடப் புத்தகத்தைப் புதுவை அரசு இதுவரை வெளியிடவில்லை. இதுதான் உண்மை.

பாண்டிச்சேரி - 1, ஞானகுமாரன்.



# சோலையம்மா

❖ எண்ணற்ற கொலைகளுக்கும் கற்பழிப்புகளுக்கும் அதைத் தொடர்ந்த ஓரிரு தற்கொலைகளுக்கும் காரணமாக இருக்கும் வில்லன் மீது நடவடிக்கை எடுக்க முடியாமல் இருப்பதற்கு வசதியாக அந்தச் சுற்று வட்டாரத்திலேயே போலீஸ் இல்லாத (!?) கிராமம்....

❖ அந்தக் கிராமக் குளத்தில் பெண்கள் குளிக்கும் போது ஒரு கட்டிலைக் கொண்டு வந்து போட்டுக் கொண்டு அதில் அமர்ந்தவாறு அந்தக் காட்சியைத் தினந்தோறும் ரசிக்கிற (செந்தில்) மைனர் (நகைச்சுவையாம்!) - அதைக் கண்டும் கூச்சப்படாமல் சிரித்துப் பேசிக் கொண்டே தொடர்ந்து குளிக்கும் பெண்கள்....

❖ ஆடை கட்டியுள்ள 'நீலப்பட'த்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் உணர்வைத் தூண்டும் ஆண்-பெண் கோஷ்டி நடன அசைவுகள்...

❖ "நான் உன்னைக் கெடுக்காமலேயே நீ என்னிடம் கெட்டுப் போய் விட்டதாக இந்த ஊரைப் பேச வைத்து விட்டேன். நீயாகவே வலுவில் வந்து என்னிடம் கெட்டுப் போய் விடு. இந்த ஊர் முழுவதையும், நீ என்னிடம் கெட்டுப் போகவில்லையென்று உன் காலில் விழுந்து சொல்லச் செய்கிறேன்" என ஒன்றில்லை, இரண்டில்லை - நான்கு முறை கதாநாயகியைத் தேடி வந்து அவளிடம் கூறும் வில்லன்.....

❖ தனக்கு அவன் இணங்க மறுக்கிறாள், மறுத்து தன் கன்னத்தில் அடித்து விடுகிறாள் என்பதற்காக அவளை வலுக்கட்டாயமாக நடுச்சந்திக்கு இழுத்து வந்து நிறுத்தி, ஊர் ஜனங்கள் அனைவரையும் கூட்டி, அவர்கள் அந்தக் காட்சியைப் பார்த்தே ஆக வேண்டும் என ஆணையிட்டுக் கதாநாயகியின் சேலையைப் பரபரவென உருவி எறிந்து மானபங்கப் படுத்தும் அதே வில்லன்....

❖ அண்ணன் திருமணம் முடித்து மனைவியுடன் வீட்டுக்கு வரும் அன்றிரவே அவன் படுக்கையறையில் புகுந்து, தடுக்கும் அவனைக் கொன்று, அந்த உடலுக்கருகிலேயே வலுக்கட்டாயமாக, அண்ணன் மனைவியின் தாலியை அறுத்தெறிந்து, அவளைக் கற்பழிக்கும் அதே வில்லன்...

❖ அவனால் கெடுக்கப்படாத பெண்களே அந்த ஊரில் இல்லை என்கிற நிலையில், வாய் மூடி மௌனிகளாகக் குனிந்த தலை நிமிராத ஆண்கள்...

❖ இத்தகைய கொடுமைக்கார வில்லனுக்கு இணங்கிப் போவதைப் போல நடித்து, அவனுடைய உணவில் விஷம் கலந்து கொடுத்து அவனை அழித்து, தானும் தற்கொலை செய்து கொண்டு தமிழ்ப் பண்பாட்டைக் காப்பாற்றிவிடும் கதாநாயகி....

- படத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் இடம் பெறும் அறிவிப்பின்படி இவற்றுக்குப் பெயர் -

மண்வாசனையாம்! மண் அல்ல புண். வாசனையல்ல, துர்நாற்றம்!

– சி. ஆர். கே.



* முதியோர் கல்விப் பணி

அதிகார பலத்தைக் காட்டி சிலர் டாக்டர் பட்டம் பெறுவார்கள்; காப்பி அடித்துச் சிலர் அடைவார்கள்; பணம் தந்தும் வாங்குவார்கள்; நல்லவிதமாக ஆய்வு செய்து பெறுவோரும் இல்லாமல் போகவில்லை. அவர்களில் ஒருவர் தான் பகபதி, என்றாலும் இவர் டாக்டர்பட்டம் பெற்றதில் ஒரு புதுமையும் உண்டு. ஸ்வீடிஷ் விஞ்ஞானிகள் கழகத்தின் மூன்று விஞ்ஞானிகள் சென்னை வந்தார்கள். தாஜ் கொரமாண்டலில் தங்கியிருந்து, பகபதியை வரச் சொன்னார்கள். அவர் பி.எச்டி பட்டத்துக்காக ''இம்யூனாலஜி'' பற்றி அக் கழகத்துக்குச் சமர்ப்பித்திருந்த (தீஸிஸ்) ஆய்வு பற்றி மூன்று பேரும் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் குடைந்தெடுத்தார்கள். ஒருநாள் முழுக்க நடந்த இந்தப் பேட்டி, தாஜ் கொரமாண்டலிலிருந்து ஸ்வீடன் நாட்டுக்கு அப்படியே நேரடியாக ஒளிபரப்பானது! அங்கேயும் விஞ்ஞானிகள் அதைப் பார்த்தார்கள் - கேட்டார்கள். பேட்டியின் முடிவில் டாக்டர் பட்டத்தைப் பகபதிக்கு வழங்கினார்கள்!

பகபதி, ஸ்வீடிஷ் விஞ்ஞானக் கழகத்தின் ஒரு பிரிவில் ஆராய்ச்சி மாணவர். எனவே 'இம்யூனாலஜி' பற்றி தீவிர ஆய்வு செய்து அவர்களிடம் பட்டம் பெற்றார். வேறு பல சர்வதேச அமைப்புக்களிலும் உறுப்பினராகவும் ஆய்வு மாணவராகவும் உள்ள பகபதியிடம், ''இப்படி பெரிய பெரிய பட்டங்களை வாங்கி விட்டால் அப்புறம் மேல்நாடுகளுக்குப் போக வேண்டியதுதானே; பல்கலைக் கழகம் அல்லது தனியார் துறையில் நல்ல சம்பளத்தில் சேர்ந்து, ஆய்வைத் தொடர்வது அல்லது கல்வி புகட்டுவது என்று பணியாற்ற வேண்டியதுதானே?'' என்று கேட்டால் வருத்தப்படுகிறார்.

''எனக்கு அப்படியெல்லாம் இஷ்டமில்லை ஸார்; நம்ம நாட்டுக்குச் செய்யணும்னுதான் ஆசைப்படறேன்; செய்துகொண்டும் இருக்கிறேன்'' என்கிறார்.

''அப்படி என்ன செய்கிறீர்கள்?'' என்று கேட்டால், ''வாங்க போகலாம்'' என்று பின்னோடு அழைத்துக் கொண்டே போய் விடுகிறார்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழும் வடசென்னைப் பகுதிகள் சிலவற்றில் இவர் நடத்தி வரும் பள்ளிகளின் எண்ணிக்கை... நம்புங்கள் - ஐம்பத்து ஒன்று! அந்தந்தப் பகுதி மக்களே பள்ளிகள் இயங்க உதவுவதோடு, நிறைய கல்லூரி மாணவர்களும் சேவா மனப்பான்மையுடன் பாடம் சொல்லிக் கொடுக்க முன்வருகிறார்கள். முதியோர் கல்வியிலும் கணிசமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் பகபதி.

இதோடு போயிற்றா? சேரிகளில் ஏழு இலவச மருத்துவ முகாம்கள் - டிஸ்பென்சரி போல் - நடத்தி வருகிறார். இதற்கும் ஸ்டான்லி, எம்.எம்.ஸி. மருத்துவர்கள் தவிர, மருத்துவ மாணவர்களும் உற்சாகத்துடன் உதவ முன்வருகிறார்கள்.


நம் வியப்பு அடங்கு முன்னர் பகபதி தொடர்ந்து பேசுகிறார் : ''கொருக்குப் பேட்டை பிரச்னைகள் சம்பந்தமாக முன்னாள் ஜனாதிபதி ஆர்.வி.யிடம் ஒரு மனு கொடுத்தேன். 'நாலு பக்கமும் ரயில்வே கேட் சூழ்ந்த தீவு இது! பள்ளிகள், மருத்துவ வசதி ரொம்பக் குறைவு' என்றெல்லாம்

* பகபதி



# சேரிகளில்

எடுத்துச் சொன்னேன். ஆர்.வி. ஆளுனருக்கு ஒரு கடிதம் கொடுத்தார். அன்றைய ஆளுனர் பர்னாலா, முதல்வர் கருணாநிதியிடம் சிபாரிசு செய்ய, பதிமூன்று ஹெக்டேர் பார்த்தீனியச் செடிகள் அழிக்கப்பட்டன. குப்பை கூளம் கொட்டிக் குவியும் இடங்கள் சீராக்கப்பட்டன. பதினைந்து பொதுக் கழிப்பிடங்கள் கட்டித் தரப்பட்டன... கொருக்குப் பேட்டைக்கும் தண்டையார்பேட்டைக்கும் இணைப்பு மேம்பாலம் தயாராகி விட்டது. கார்ப்பரேஷன் இருபுறமும் சாலை போட வேண்டியதுதான் பாக்கி. அவர்களும் தாமதமின்றி ஒத்துழைத்தால் கொருக்குப் பேட்டைவாசிகளின் நன்றியைப் பெறுவார்கள்.''



● கல்லூரி முதல்வரிடம் பரிசு

இப்படியெல்லாம் பலவிதப் பொதுப் பணிகளில் ஈடுபடுகின்ற காரணத்தால் பகபதி படிப்பையோ, ஆய்வையோ விட்டு விடவில்லை. அவை பாட்டுக்கு நடந்து கொண்டிருக்கின்றன.

● பாக்டீரியா கழிவுப் பொருளிலிருந்து மின்சக்தி உருவாக்கக்கூடிய சாத்தியக் கூறு...

● உளவியல் கோளாறுகளில் சுரப்பிகளின் பங்கு...

● அதிக மீன்களைக் கவர பாக்டீரியல் வண்ணம் பூசப்பட்ட பாலியெதிலீன் படகுகள்...

● கொசு உற்பத்திக் கேந்திரமான கூவம் நதிக்கரையில் வளரும் பலாரி வட்டம் இலையில் கொசுக்கடிக்கு எதிராக உள்ள சக்தி...

என்று பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

''கவனியுங்கள்; எனது பதின்மூன்று ஆராய்ச்சிகளும் மனிதகுல நன்மையை அடிப்படையாகக் கொண்டவை. உடனடித் தேவைகளையொட்டியவை'' என்கிறார் பகபதி. விஞ்ஞானிகளின் ஆய்வு மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்ட இவர், கான்சர் விழிப்புணர்வுப் பிரசாரத்தை மேற்கொண்டு, சென்னையிலிருந்து கன்யாகுமரி வரை பாத யாத்திரை போயிருக்கிறார். பிறகு, இந்தியா முழுவதும் சைக்கிளில் ஒரு சுற்றுப்பயணம் செய்து, டாடா நிறுவனத்தின் கான்சர் ஸொஸைட்டி அளித்த துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தார். ஆங்காங்கே சொற்பொழிவுகள் நிகழ்த்தியதோடு, பல்வேறு பிரதேச மொழிகளை இவரும் கற்றுக் கொண்டார்.

''கிராமப்புற மக்களிடையே சொற்பொழிவு நிகழ்த்துவது எளிது தானே'' என்றால், ''இருக்கலாம்; ஆனால் இந்தியப் பல்கலைக் கழகங்களிடையே மிகச் சிறந்த பேச்சாளர் பட்டத்தை 89, 90, 91 ஆகிய மூன்று ஆண்டுகளில் தொடர்ந்து பெறுவது சிரமமல்லவா?'' என்பதுதான் பதில்!

ஐந்நூறு வெவ்வேறு தலைப்புக்களில் தொடர்ந்து பதினாறரை மணி நேரம் பேசும் சாதனையும் புரிந்து கின்னஸ்ஸிலும் இடம் பெற்றார் பகபதி!

சாதனைகள் இத்துடன் முடிந்து விடவில்லை. நீண்டு கொண்டே போகும் அவற்றின் பட்டியலை விட முக்கியமானது, ''நான் விஞ்ஞானிதான்; ஆனால் சமூகத்தைக் கூர்ந்து பார்த்த பிறகு பரிசோதனைக் கூடத்துக்குச் செல்பவன்'' என்ற பகபதியின் கொள்கை வாக்குமூலம்.

யார் தூண்டுகோல்?

கல்லூரி நாட்களில் முதல்வர் அகஸ்டீன் செல்லையா; என்.எஸ்.எஸ். ஆபீஸர் மதுசூதன் ராவ் ஆகியோர்....

இப்போது?... அன்னை தெரசாவிடமிருந்து அவ்வப்போது வரும் டெலிஃபோன் வாழ்த்துக்கள்!

பேட்டி, கட்டுரை : சாருகேசி
படங்கள் : யோகா

# உழைக்கும் இளம் விஞ்ஞானி!

24

'ஷிப்டு' முடியப் போகிற நேரம். மணி மூன்றுக்கு மேல் ஆகி விட்டது. 'வொர்க் மேனேஜர்' ரூமிலிருந்து பழநிக்கு அழைப்பு. போன் வந்திருக்கிறதாம்...

கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தால், உதவி மேனேஜர் இருந்தார்.

''வாங்க பழநி.''

''எஸ் சார்?''

''உங்களுக்குப் போன். டைம் ஆபீஸ் லேயிருந்து.''

டேபிளில் கிடந்த ரிஸீவரை எடுத்தான்.

''ஹலோ...''

''ஹலோ... பழநியா?''

''ம். என்ன விஷயம்?''

''நா ஷிப்ட்டுக்குப் புறப்பட்டுக்கிட்டிருந்தேன்...''

''போர்-டுவல்லா?''

''ம். அப்ப உங்க வளர்த்தையா வந்துருந்தாரு.''

இவனுள் ஆச்சர்யம்.

''வளர்த்தையாவா?'' மகிழ்ச்சியோடு பழநி சிரித்தான்.

''அதனாலேதான் நான் கரெக்டா இருக்கணும். லீடர்ங்கிற சலுகையை நான் பயன்படுத்தித் தப்பு பண்ணுனா... ஒர்க்கர்ஸ் கிட்டே ஒழுக்கம் எப்படி வரும்? நீங்களே என்னை மதிப்பீகளா?''

''ஓ....'' ஏதோ ஜோக் சொல்லி விட்டதைப் போல பெரிதாகச் சிரித்தார், அவர். நன்றி சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

**நா**ன்கு மணியாகவும் கிளம்பினான். நேராக அறைக்கு ஓடினான். வளத்தையாவைப் பார்க்கிற ஆசை. வந்த இடத்தில் அவரை நல்லபடியாக உபசரிக்க வேண்டும். மகிழ்ச்சிப்படுத்த வேண்டும். வளர்த்து, படிக்க வைத்து ஆளாக்கிய வளத்தையா. தாய் தகப்பன் இல்லாத வெறுமையை உணர விடாமல் காப்பாற்றிய வளத்தையா.

அவனுள் ஒரு பரபரப்பு. ஆவல். அதையும் தாண்டி ஆழத்தில் ஒரு குறுகுறுப்பு.

'இவ்வளவு தூரம் தேடிக் கொண்டு வர வேண்டிய அளவுக்கு என்ன அவசியம்? என்ன அவசரம்?'

கேட்டான். அவன் முகத்தில் ஒரு மலர்ச்சி.

வாரத்திற்கொரு தடவை வீட்டுக்குப் போவான். அல்லது இரு வாரத்துக்கொரு தடவை போவான். எப்போதுமே அவர் இங்கு வந்ததில்லை. வர ஆசைப்பட்டது மில்லை. தேவையும் நேரவில்லை. இப்போது என்ன தேவை? அப்படியென்ன அவசரம்?

''ஆமா. அவரை உங்க ரூம் சாவியைக் குடுத்து, அங்க உக்கார வைச்சேன். ஒரு காப்பி வாங்கிக் குடுத்தேன். உங்களுக்குத் தகவல் தரச் சொன்னாரு.''

''ரைட். ஓகே. நா வாரேன்.''

போனை வைத்தான். நிமிர்ந்தான். இவன் முகத்தையே பார்க்கிற உதவி மானேஜர்.

''என்ன பழநி.... பெர்மிஷன் வேணுமா?''

''வேணாம் சார்... டயம் முடியப் போகுதில்லே...''

''பரவால்லே. நீங்க போகணும்னா போங்க. யூனியன் லீடர் நீங்க. உங்களுக்கு இல்லாத சலுகையா?''

வளத்தையா வெளியிலேயே காத்திருந்தார். இவனைக் கண்டதும் முகம் மலர்ந்தார்.

''என்ன வளத்தையா... அதிசயமாயிருக்கு?''

''சும்மாத்தாண்டா...''

''சும்மா அலையுறதுக்குக் கிறுக்கா பிடிச்சிருக்கு?''

''கிறுக்குத்தான். இதுவும் ஒரு கிறுக்குத்தான். என்னிக்கோ போட்ட சோத்துக்குச் சாகுற வரைக்கும் வாலாட்டுற நாய் மாதிரி இது... எனக்கு இப்படியொரு கிறுக்கு.''

இடுப்பில் நாலு முழ வெள்ளை வேட்டி. மேலே ஒரு துண்டு. இடையில் பளீரென்று கறுத்து மின்னுகிற உடம்பு. மார்புக் குழியில்மட்டும் நரைத்த ரோமம். பழநியைப் போலவே உதட்டுக்கு மேலே கொத்து மீசை. வெள்ளை மீசை. இன்னும் வழுக்கை விழாத தலை.

சொர்ணம் வீட்டில் காலம் பூராவும் சாணிக் கூடை சுமந்து சுமந்து செம்பட்டையாகிப் போன தலைமுடி.



அன்றைக்குள் அழைத்துச் சென்றான். இவன் பேச்சு பேச்சாகப் பேசிக் கொண்டிருக்கையிலேயே கால் கையைக் கழுவிக் கொண்டான். கைலியை உடுத்திக் கொண்டான். மின்விசிறியைப் போட்டு விட்டு இவனும் ஒரு சேரில் உட்கார்ந்து கொண்டான்.

வருகிற வழியிலேயே ஒரு பையனிடம் சொல்லி விட்டு வந்திருந்தான். ரெண்டு முட்டைக்கோஸ், நாலு உளுந்து வடையோடு பையன் வந்தான்.

வளர்த்தையாவும் இவனும் டீயைக் குடித்து முடித்தனர்.

''சரி... இப்பச் சொல்லுங்க வளத்தையா. வந்த விஷயம் என்ன?''

''விஷயம் இதாண்டா. எங்க மோலாளி (முதலாளி) மகளைக் *காப்பாத்தணும். என்ன ஆயிட்டாலும் சரி, எம்புட்டுச் செலவாயிட்டாலும் சரி... அந்தப் புள்ளையைக் காப்பாத்தணும்...''

சொர்ணம்! அவனது அந்தரங்கக் கனவு. அழகுச் சிற்பம். ஆழ்மன வசீகரம். ஆன்மாவோடு பின்னிக் கலந்து விட்ட கற்பனைப் பந்தம்.

அவனுள் ரகசியமாக ஓடிய சிலிர்ப்பு.

''அவளுக்கு என்ன ஆச்சு?''

வளர்த்தையாவின் கண்களில் கோபம். கண்டிப்பு. தாட்சண்யமற்ற கண்டிப்பு. உதடு துடிக்கச் சீறினார்.

''மரியாதையா பேசுடா. 'அவ, இவ'ன்னு என்ன ஏக வசனம்? படிச்ச ஒரு உத்யோகத்துக்கு வந்துட்ட உடனே, பெறந்த சாதி மறந்து போகுதோ...? அது யாருன்னு பார்த்தே? எனக்கும் ஒனக்கும் சோறு போட்ட நாச்சியாள். நம்ம கண் கண்ட தெய்வம்டா. எங்க ராசாவோட செல்லப் புள்ளை. அந்த எளைய ராணியையா... நீ 'அவ, இவ'ன்னு பேசுறே? ராஸ்கல். நீ... அவுக கால்லே ஒட்டுற தூசி வெலை கூட பெறமாட்டே, தெரியுமா?''

பழநி உள்ளுக்குள் இறுகிப் போனான். லேசான அவமானம். கோழி மிதித்த குஞ்சின் வேதனை. வளர்த்தையாவை வெறுமையாகப் பார்த்தான். எதுவும் பேசவில்லை. பேசத் தோன்றவில்லை.

மேலாண்மை பொன்னுச்சாமி

- ஏனடி பெண்ணே!
  உன் இனமென்று
  கண்டு கொண்டதும்
  கருவறை கல்லறையானது!
- கருவறை கதவு திறந்து
  நீ - எட்டிப் பார்த்ததும்
  முலைக் காம்புகள் கூட
  கள்ளிப்பால் சுரக்கிறதே!
- நீயோ,
  பொன்னும், மணியும்
  சூட்டி மகிழ்வார்களென
  சிறு இதழ் விரித்தாய் -
  விழுந்ததென்னவோ நெல்மணிதான்!

உள்ளுக்குள் உயிர் வளர்த்துக் கொண்டிருந்த கனவு ரொம்ப அதிர்ந்தது. சொர்ணம் சம்மதிக்கிறாளோ, இல்லையோ... இவரே இவனது காதலை அனுமதிக்க மாட்டாரோ... சகித்துக் கொள்ள மாட்டாரோ...?

அவள் என்று சொல்லக் கூட அனுமதிக்க மறுக்கிற இவர் எப்படி, இவனது காதலைப் பொறுத்துக் கொள்வார்?

பழநி உள்ளுக்குள் சிதைந்து போனான். ரொம்பக் கலவரப்பட்டான்.

தாத்தாவைக் காயப்படுத்தி இவன் கனவை நிறைவேற்றிக் கொள்வதா? அது நியாயமா? நன்றி உணர்வா?

ஆனால், தாத்தாவின் அடிமைப் புத்தியையும் அங்கீகரிக்க முடியாதே... கூடாதே! அடிமைப் புத்தியை அங்கீகரித்தால்... நானுமல்லவா அடிமையாகச் செயல்பட வேண்டும்?

அது என்னால் முடியுமா? இயலுமா? தேவையா? மூன்றாவது தலைமுறையிலும் அந்த அடிமை உறவு நீடிக்க வேண்டுமா? மாறுதலே இல்லையா? காலம் என்பதற்கு ஒரு மதிப்பேயில்லையா?

"என்னடா?"

"ஒண்ணுமில்லே... சொல்லுங்க."

முனியசாமி, நாட்டாண்மை வெங்கடாசலம், நாராயணசாமி பற்றிக் கூற ஆரம்பித்தார்.

"இதான் விஷயம்."

பழநி யோசித்தான்.

"எனக்குத் தெரிஞ்ச வரைக்கும்... இதுலே ரெண்டே ரெண்டு வழிதான் இருக்கு."

"சொல்லு."

"அவரோட மூத்த சம்சாரம் போலீஸ்லே எழுதிக் கொடுக்கணும். மறுதாரத் தடைச் சட்டப்படி அரெஸ்ட் பண்ணி கேஸ் போடுவாக. அல்லது... இவங்க சொர்ணமே கேஸ் குடுக்கணும். 'என்னோட விருப்பத்துக்கு மாறா... பலவந்தத் திருமணம் செய்ய முயற்சி பண்றாங்க காப்பாத்துங்க'ன்னு புகார் குடுக்கணும்."

"ஏலேய்... நீ சொல்ற ரெண்டுமே நாராயணசாமியைக் கோர்ட்லே நிறுத்துமில்லே?"

"ஆமா."

"ஊஹூம். அது கூடாது. இந்த அம்மாவே சொல்லுது... 'அவுக மாமாவுக்கு எந்த ஆபத்தும் வரக் கூடாது'ன்னு."

"அதெப்படி வளத்தையா? கூரையிலே நீ வைக்கிறதையும் நிறுத்தணும், தீப்பந்தத்துக்கும் நோகக் கூடாதுன்னு சொன்னா, எப்புடி? விறகை எரிக்காம, பணியாரம் எப்படிச் சுட்டு எடுக்குறது?"

"அதுக்குத்தான்... ஒங்கிட்டே வந்துருக்கேன்...."

"எனக்கு ஒண்ணும் தோணலை."

"சரி... நாஞ்சொல்ற மாதிரி செய்துரு."

"எப்படி?"

"நீய் பெட்டியாபீஸுக்குப் போயிட்டு வர்றப்போ... வழிமறிச்சு அந்தப் புள்ளையைக் கடத்திக் கொண்ணாந்துரு. சம்மதத்தோட ஓடியாந்துரும். ஒரு மாசம் எங்காச்சும் பாதுகாப்பா வைச்சிரு..."

"ம்... சரி..."

"அதுக்குள்ளே அங்க ஊர்லே பிரச்னையாயிடும். மூத்த அம்மா... புருஷன் கூட சண்டை போடும். எங்க பெரிய அம்மாவும் தப்பை உணர்ந்து, அழுது புலம்பும். அப்புறம் அவுககிட்டே ஒப்படைச்சிருவோம்... சரிதானே?"

"சரிதான் ஆனா... இது சிக்கலான யோசனை. நம்ம எதிர்பாராத தப்புகள் நடந்து போக நியாயமிருக்கு. அப்புறம் நாம, தேவையில்லாத கிரிமினல் வம்புகள்லே போய் மாட்டிக்கிட்டு நிக்கணும்."

"அதெல்லாம் ஒண்ணும் வராது."

"வராட்டா நல்லதுதான் வளத்தையா. வந்துட்டா, என்ன செய்றது?"

"என்னடா... கோழைப் பயலா இருக்கே? ஒரு காரியத்துலே ஒரு குறியோட எறங்கிட்டா... அதுக்கப்புறம் லாப நட்டத்தைப் பத்தி யோசிக்கவே கூடாதுடா..."

"இது, கோழைத்தனமில்லே தாத்தா. எறங்குற காரியத்தைப் பத்தி யோசனையில்லாம செய்றது, முரட்டுத்தனம்தா, வீரமில்லே."

"வெள்ளத்துலே ஒரு உயிர் போய்க்கிட்டிருக்கையிலே, கரையிலே நின்னு யோசிக்கக்கிட்டா இருப்பாக? அது மனுஷப் பயலுக்கு அழகா? இல்லே, அறிவு இருக்கிறவன் செய்ற காரியமா?"


பழநி யோசித்தான். நிதானமானான். மௌனமாக வளத்தையாவின் முகத்தையே பார்த்தான்.

இவர் சொல்லுகிற யோசனையில் ஏகப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றன. ஏகப்பட்ட வம்பு தும்புகள் வரக்கூடும். ஆபத்தான விளையாட்டு. கடத்துகிற போது... ஏதேனும் இசகு பிசகு ஏற்பட்டு விட்டால்...

ஒளித்து வைத்திருக்கிற இடத்தில் ஏதேனும் தவறுகள் நிகழ்ந்து விட்டால்...

● அரசுத் தொட்டிலுக்கு
இங்கு முன்பதிவு செய்வோர்
ஏராளம்... ஏராளம்...!
அண்டை மாநிலத்தோருக்கும்
அது அழைப்பு விடுக்குது
தாராளம்! தாராளம்!

- பிரியாராஜன்



ஒளித்து வைத்த இடம் கண்டுபிடிக்கப் பட்டு விட்டால், அதனால் வரக்கூடிய விளைவுகள்...?

மகள் காணாமல் போன அதிர்ச்சியில், சொர்ணத்தின் அம்மா தற்கொலை செய்து கொண்டால்...

இப்படி எத்தனையோ சிரமங்கள் உண்டு. சிக்கல்கள் உண்டு. வம்பு தும்பு உண்டு. ஏகப்பட்ட சனியன்கள் ஒளித் திருக்கக்கூடிய மோசமான, ஆபத்தான, காரியம்தான்.

ஆனால், அதற்குள்ளும் நல்ல விஷயங்கள் உண்டு. இனிமையான நிகழ்வுகள் உண்டு.

சொர்ணம் நமது பாதுகாப்புக்குள் வரும் போது... நெருங்கிப் பழகலாம். என்னைப் பற்றிப் புரிந்து கொள்கிற வாய்ப்பு வரலாம். எனது கதகதப்பான காதல் மனம் புரியலாம்.

தாயும் உறவும் கூட எதிராக நிற்க, நாதியற்ற மனநிலையில், எனது நல்ல மனசும், பாதுகாப்பும் துல்லியமாக உணரப் படலாம். அது நல்ல பல சமிக்ஞைகளுக்கு உதவலாம்.

வளர்த்தையாவையும் மீறி... சொர்ணமே என்னைத் துணையாகத் தேர்வு செய்து விட்டால்...

வளத்தையா பூரித்துப் போய் ஆசீர்வாதம் பண்ணி விடுவார்...

அவனுக்குள் முகம் கவிழ்ந்து போய் நின்ற கனவுகள், மீண்டும் பூக்களாக மலர்ந்து சிரித்தன. இரை கண்ட சிட்டுக் குருவிகளாக ஜிவ்வென்று சிறகடித்துப் பறந்தன. கும்மாளமிட்டன. கும்மியடித் தன.

சந்திப்புச் சாலைக்கு வளத்தையா வைக் கூட்டிக் கொண்டு வந்தான். நல்ல ஓட்டலில் திருப்தியாகச் சாப்பிடச் செய் தான். அப்புறம், பஸ்ஸில் ஏற்றி விட்டான்.

அறைக்குத் திரும்புகிற போது, மனசு விசிலடித்தது. பாரதியின் கண்ணம்மா பாட்டை அவன் சொந்த ராகத்தில் இசைத் தான்.

பக்கத்து அறைக்காரர், ஒரு கடிதத்தைக் கொடுத்தார்.

இன்றைக்கு மதியம் வந்தது என்றார்.

அறைக்குள் நுழைந்தான். கட்டிலில் வாகாகச் சாய்ந்து கொண்டான். கால்களைச் சுதந்திரமாக நீட்டினான்.

அந்த இன்லண்ட் லட்டரைப் பிரித் தான்.

அவனுள் குப்பென்று ஓர் ஆச்சர்யம். விருட்டென்று எழுந்தான். வாராது வந்த மாமணி போல அதிசயமான கடிதம். சொர் ணத்தின் கடிதம்.

மனசுக்குள் ஒரு சந்தோஷப் பிரவாகம்.

''பழநிக்கு,

சொர்ணத்தின் கடிதம்.

உங்கள் வளத்தையா முழு விவரமாகச் சொல்லியிருக்கலாம். மாமா, ஊர், நாட் டாண்மை, அம்மா இப்படிச் சகலராலும் முற்றுகையிடப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சூழலிலேயே நான் இருந்தால்... நான் பலியாவதைத் தவிர வேறு வழியில் லாமல் போய் விடும்.

பலியாகவும் விரும்பவில்லை. சாகவும் விரும்பவில்லை.

ஆகவே, என்னைக் கடத்துவதற்கு ஏற் பாடு செய்யவும். இது உதவிதான். ஆனால், இந்த உதவியைச் செய்கிற கடமை உங்க ளுக்கு உண்டு என்று நம்புகிறேன்.

இப்படிக்கு,

ரா. சொர்ணம்''

வளத்தையா 'வளவளா'வென்று பேசி விளங்க வைக்க முடியாத விஷயத்தை, கடிதத்தில் சொர்ணம் நறுக்கென்று புரிய வைத்து விட்டாள்.

முற்றுகையின் மூர்க்கத்தில்... ஒற்றைப் பெண் நின்று சமாளிக்க முடியாது; போராட முடியாது - என்கிற விஷயத்தைத் துல்லிய மாகக் கடிதம் உணர்த்தி விட்டது.

கடைசி விஷயம்தான், மூளையைக் குடைகிறது....

'உதவிதான். இந்த உதவியைச் செய்ய நீ கடமைப்பட்டுள்ளாய்...'

இது என்ன அர்த்தத்தில்?

சொர்ணத்தின் மீது ஆசையையும், காதலையும் ரகசியமாக வளர்த்து வந்திருக் கிற இவனது உள்மனசின்படி, அந்தக் கடமை உள்ளவன்தான்.

அது எப்படி அவளுக்குத் தெரியும்? நின்று, நேருக்கு நேராக ஒரு வார்த்தை கூடப் பேசியதில்லையே...

ஆத்மார்த்தமாகப் புரிந்திருக்கிறாளா? அல்லது தன்னைப் போலவே... அவளும் தன்னைப் பற்றி மனசுக்குள் ஆசையும் காதலும் கொண்டிருக்கிறாளா?

அவனுள் இறக்கைகள் முளைத்தன. அவனுக்குள் புதிய பலம் கிடைத்தது. காதலி கடைக்கண் காட்டி விட்டாள்....

(தொடரும்)

ஆர். சூடாமணி

# நண்பர் திருமலை

நெடிய தோற்றம். சிவந்த உடல். நெற்றியில் ஸ்ரீசூர்ணக் கோடு. "எம்பெருமானார் மறு அவதாரம்" என்று நண்பர்கள் பாராட்டுவதைத் திருமலை மனசில் பெருமையோடும் வாயில் புன்னகையோடும் மறுப்பார். புன்னகை என்றாலும் எப்படிப்பட்ட புன்னகை! மிக நேர்த்தியான பல் வரிசைகள் வைத்துக் கட்டியது மாதிரி.

வைத்துக் கட்டியதுதான்.

பாழாய்ப் போன பயோரியா வந்ததில் மொத்தப் பற்களுக்கும் சீட்டுக் கிழிந்து விட்டது. செயற்கைப் பல் செட் இல்லாமல் தம்மை யாரும் பார்க்க அவர் விடுவதில்லை. கிழவன் மாதிரி பொக்கையாய்... சே!

எழுபது வயதில் ஒருவன் கிழவன் இல்லையா? ஆனால் அவரைப் பார்த்தால் எழுபது வயதென்று யார் சொல்வார்கள்? அவரே சொல்ல மாட்டாரே! புது மனிதர்கள் யாராவது "உங்க வயசென்ன ஸார்?" என்று கேட்டால் தயங்காமல் பளிச்சென்று "அறுபத்தஞ்சு" என்பார். கடந்த ஐந்தாண்டுகளாய் அவர் வயது அந்தப் புள்ளியிலிருந்து நகரவில்லை.

பிள்ளை ரங்கநாதன் சொல்வதுண்டு. "எனக்கு நாப்பத்தஞ்சு வயசப்பா. ஏதோ இப்ப நீங்க சொல்லிக்கற வயசுக்கு ஒரு மாதிரி சமாளிக்கலாம். இன்னும் ஒரு அஞ்சு வருஷத்தில் எனக்கு அம்பதாகற போதும் உங்க வயசு இப்படியே அசையாம நின்னா உங்களுக்குப் பதினஞ்சு வயசில் பிள்ளை பிறந்ததாய் வச்சுக்கறதா?"

"அந்த நாளில் அதுவும் ஒண்ணும் அதிசயமில்லேடா! உனக்குப் பிடிக்கலேன்னா நீயும் அம்பதுன்னு சொல்லிக்காதேயேன்?"


"சரிதான். அப்புறம் ஒருநாள் என் பெண் நம்ம ரெண்டு பேரையும் விடப் பெரியவளாயிடுவா."

ரங்கநாதனின் பெண் கவிதாவுக்குத் தாத்தாவிடம் ரொம்ப நெருக்கம். அவளிடம் அவர் "பி. யு. சின்னப்பா பாட்டு மாதிரி உண்டா?" "அந்த நாளில் சாரட் வண்டின்னு ஒண்ணு இருந்துது பாரு..." என்னும் ரீதியில் பேசி அறுக்க மாட்டார். "பம்பாயில் வரதட்சிணைக் கொடுமையை எதிர்த்து ஒரு மாதர் மன்றம் போராடறதே, இன்னிக்கு பேப்பர்ல படிச்சயாம்மா?" என்று அதை அவளுடன் விவாதிப்பார். "சாயந்திரம் டீவியில் கமல் படம். மறந்துடாதே" என்பார். பேரன் சுரேஷிடம் "டெண்டுல்கர் பர்ஃபார்மென்ஸ் பத்தி நீ என்னடா நினைக்கறே?" என்பார். வேர் பழங்காலத்தில் ஊன்றியிருந்தாலும் இலைகள் தற்காலத்தில்தான் அசைந்தன. "தாத்தா ஒண்ணும் தாத்தா மாதிரி இல்லே. எங்க ஃப்ரெண்ட் அவர்"என்று பேத்தியும் பேரனும் கூறும் போது பெருமையில் திளைப்பார். முதுமைக்கு இளமை இதை விடப் பெரிய பாராட்டு வேறென்ன தர முடியும்?

ஃப்ரெண்ட். நட்பியல் அவர் குணத்தின் அடிப்படை. பலரகப்பட்ட நண்பர்கள் அவருக்கு உண்டு. "திருமேனி பாங்கா?"விலிருந்து "ஏண்டா பழி, இன்னும் உயிரோடயா இருக்கே?" வரை விசாரிப்பு வகைகளில் வேறுபடும் அத்தனை ரக நண்பர்களும் உண்டு. நண்பர்களின் ரசனைக்கேற்ப ராமானுஜரின் ஸ்ரீபாஷ்யம் முதல் ரஜினியின் 'தளபதி' வரை, பண்டைய எகிப்து நாகரிகம் முதல் இன்றைய எயிட்ஸ் நோய் வரை, பேசுவார்.

மனைவியை இழந்தவரைப் பிள்ளையும் மருமகளும் இத்தனை அன்பாய்க் கவனிக்கவில்லையென்றால் ஒருவேளை இது போன்ற அமைதியான வாழ்வு கிடைக்காமல் போயிருக்கலாம்.

காலையில் குளித்து விட்டுச் சுத்தமாய்ப் பூஜை அறைக்குள் நுழையும்போதே மாட்டுப் பெண் ஸ்ரீமதி அங்கு கோலம் போட்டுத் தூப தீபங்களும் நைவேத்தியப் பாயசமும் தயாராய் வைத்திருப்பாள். பகல் உணவும் மாலைப் பலகாரமும் அவர் பசிக்கும் ருசிக்கும் ஏற்றபடி தயாரித்துப் பரிமாறுவாள். இரவு அவள் எடுத்து வரும் குங்குமப்பூ, கல்கண்டு சேர்த்துச் சுண்டக் காய்ச்சிய பாலைக் குடிப்பதற்கே இன்னும் ஏழு பிறவிகள் எடுக்கலாமே! பிள்ளையோ எத்தனை வேலைகள் இருந்தாலும் அப்பாவுடன் உட்கார்ந்து பேசவென்றே தினம் ஒரு மணி நேரமாவது ஒதுக்குகிறான். அவர் ஒரு தும்மல் தும்முவதற்குள் பதறிக் கொண்டு டாக்டரிடம் அழைத்துப் போகிறான். ஒரு நல்ல நாள், கிழமை என்றால் மனைவி மக்கள் சகிதம் முதலில் அவர் காலில் விழுந்து வணங்குகிறான்.



'நான் ரொம்ப கொடுத்து வச்சவன்' என்று நினைத்து நினைத்து நெஞ்சு நிரம்பிப் போகும் அவருக்கு.

**பே**ரக் குழந்தைகளுக்கு மட்டுமே அவர் ஃப்ரெண்ட் இல்லை. அவர்கள் நண்பர்களுக்கும்தான்.

ஹாலில் கவிதாவுடன் அன்று மாலை அவள் கல்லூரித் தோழி நளினி உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த போது தோட்டத்தி லிருந்து திருமலை அவர்களைக் கடந்து உள்ளே சென்றார்.

''இரு நளினி, என் தாத்தாவை உனக்கு இன்ட்ரடியூஸ் பண்றேன்'' கவிதா ஆவலாக எழுந்தாள்.

பஞ்சகச்சமும் ஸ்ரீசூர்ணமுமாய் அந்தப் பெரிய உருவத்தைக் கண்டு சற்றே அலண் டிருந்தாள் நளினி. ''வேணாண்டி. ரொம்ப ஆசாரக் கிழவர் போல் தெரியறது. என் கடிதார் ட்ரெஸ்ஸைப் பார்த்தா அவருக்குப் பிடிக்காது.''

''என் தாத்தா அப்படியில்லை. நான் இன்னிக்குத் தற்செயலா புடைவையில் இருக்கேனே தவிர கடிதார் என்ன, மிடி, ஜீன்ஸ் எல்லாம் போடுவேன். தாத்தா ஒண்ணும் சொல்ல மாட்டார். ரொம்ப 'ப்ராட்மைண்டெட்'.''

உள்ளே போய்க் கவிதா தாத்தாவை அழைத்து வந்து அறிமுகம் நிகழ்த்தினாள்.

''இது என் ஃப்ரெண்ட் நளினி, இது என் ஃப்ரெண்ட் தாத்தா. நளினிக்கு ஒரே பயம் தாத்தா, எங்கே அவள் கடிதாரைப் பார்த்து நீங்க கோச்சுப்பேளோன்னு!''

''இதில் கோச்சுக்க என்னம்மா இருக்கு நளினி? நீ இந்தக் காலத்துப் பெண்தானே?''

''என் தாத்தாவுக்கு அவ்வளவாப் பிடிக்காது, அதான்'' என்று நளினி இறுக்கம் தளர்ந்து கூறினாள்.

''நளினிக்கு சங்கீதம்னா ரொம்ப இஷ்டம் தாத்தா!''

''கர்நாடக சங்கீதமில்லே, ஜாஸ் மியூஸிக்'' என்று அவசரமாய் விவரித்தாள் நளினி.

''எல்லாம் சங்கீதம்தான். எல்லாம் அழகுதான்.''

திருமலையின் இந்தப் பதில் அவளுக்கு நிம்மதியளித்தது. ''உங்களுக்கும் மியூஸிக் பிடிக்குமா ஸார்?'' என்றாள்.

''பிடிக்கும்.''

''அமெரிக்கன் ஜாஸ் ரிதம்னா எனக்கு உயிர்!''

''அந்த ரிதம், இசை எல்லாத்துக்குமே ஆப்பிரிக்க அடிப்படைதான். கறுப்பர்களுடைய மதம், உழைப்பு சம்பந்தமான பாடல் வகைகளை வச்சு வளர்ந்ததுதானே ஜாஸ்.''

நளினிக்கு அவரிடம் மதிப்பு உச்சாணிக்குத் தாவியது. எவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறார்! ஒரே அலைவரிசையில் மேலே பேசப் பேசத் தயக்கம் முற்றிலும் விலகி, தாத்தா அவளுக்கும் நண்பர் ஆனார்.

''உன்னைப் பார்த்தா எப்பவோ எனக்குத் தெரிஞ்ச ஒரு முகஜாடை ஞாபகம் வராப்பல இருக்கு. உன் அப்பா பேரென்ன?'' திருமலை கேட்டார்.

''ராமப்ரசாத்.''

திருமலையின் புருவங்கள் உயர்ந்தன. ''ஏன்டா சௌரி, பிரசாத்னு கூப்பிட்டா வடக்கு தெற்கு எல்லாத்துக்கும் பொதுவா இருக்குமேன்னு இந்தப் பேர் வச்சிட்டியோ பிள்ளைக்கு?'' என்று நாற்பத்தைந்து ஆண்டுகள் முன்பு நண்பனைத் தமாஷ் செய்த தம் குரல் நினைவில் ஒலித்தது.

''அவரோட அப்பா பேர்?''

''சௌரிராஜன். ஏன் கேக்கறேள் ஸார்?''

''ஆதி நாளில் பி.டபிள்யு.டி. என்ஜினியராயிருந்தாரே, அந்த டி.எஸ். சௌரிராஜனா?''

''ஆமாம். உங்களுக்கு...''

''நம்ம சௌரி பேத்தியா நீ? அந்த ஜாடைதானா? பலே பலே!'' திருமலை நிமிர்ந்து உட்கார்ந்தார். ''உன் தாத்தாவும் நானும் பால்ய சிநேகிதாள்ம்மா! ரொம்ப அன்னியோன்யம். எங்களுக்கு ஒரே வருஷத்தில்தான் பையன் பிறந்தான். ரெண்டு பேருக்குமே ஒன்லி சைல்ட். இப்போ இத்தனை வருஷம் கழிச்சு எங்க ரெண்டு பேர் பேத்திகளும் நண்பிகள்!''

'நண்பிகள்' என்னும் சமீபத்திய பிரயோகத்தை அந்த முதிய வாயிலிருந்து கேட்டு நளினி புளகாங்கிதமடைந்தாள். ''யு ஆர் க்ரேட் தாத்தா!'' என்று தீர்மானமாய்ச் சான்றிதழ் வழங்கினாள்.

அவள் கிளம்பும் போது திருமலை ''உன் தாத்தாவை நான் ரொம்ப விசாரிச்சதாய்ச் சொல்லும்மா!'' என்றார்.

சௌரி! அவர் நண்பன் சௌரிராஜன்! பேத்தி கடிதார் அணிந்தால் பிடிக்காத இப்போதைய தாத்தா! தொடர்பு விட்டுப் போய் எத்தனை காலமாகி விட்டது! இப்போது இருவரும் ஒரே ஊரில். தொடர்பைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டாமா? கவிதாவிடம் அவள் தோழியின் முகவரியைக் கேட்டுத் தெரிந்து கொண்டு உடனடியாய்ப் போய் சௌரிப் பயலைப் பார்க்க வேண்டும். ''எப்படிடா இருக்கே?'' என்று அவன் தலைமுடியை - அவனுக்கு இப்போது தலைமுடி இருந்தால் - பிடித்துச் செல்லமாய் உலுக்க வேண்டும்.

மறுநாள் மாலை பலகாரம் உண்டதுமே ஆட்டோ ஏறிக் கிளம்பி விட்டார்.

நுங்கம்பாக்கத்தில் பெரிய வீடு. தற்கால மாடிக் கட்டடம். பச்சை வெளிச் சுவர்களும் க்ரில் ஜன்னல்களும் குளிப்பாட்டி விட்டது போல் பளபளத்தன. மொட்டை மாடியில் டிஷ் ஆன்டெனா, பிரித்து மல்லாத்திய பெருங்குடையாய்த் தெரிந்தது.

வாசல் வராந்தாவில் சாய்வு நாற்காலியில் கைப் புத்தகத்தின் மேல் குனிந்திருந்த நரைத் தலை...

சௌரிராஜனா?

திருமலையின் பொய்ப் பல் வரிசைகள் நேர்த்தியான புன்சிரிப்பில் அலர்ந்தன. இப்போது தலை நிமிர்ந்து தன்னைப் பார்த்து அடையாளம் கண்டு கொண்டு கண்கள் விரிந்து மின்ன ''ஏ திரு! நீயா! நீயா!'' என்று சந்தோஷத்தில் நெகிழ்ந்து ஓடி வருவானோ?

திருமலை நெருங்கி வந்தார். நெற்றி சுருங்கியது. கண்ணாடியைச் சரிப்படுத்திக் கொண்டு உற்றுப் பார்த்தார். சௌரி இல்லை போல் இருக்கிறதே?

அந்த மனிதர் பக்கத்தைத் திருப்புகையில் தற்செயலாய்த் தலை நிமிர, இவரைப் பார்த்தார். இல்லை, சௌரியின் முகம் இல்லை.

''யாரு?''

**திருடர் :** வகுப்புக் கலவரங்களை அடக்கறதுக்கு என்ன செய்யப் போறீங்கன்னு அந்த அமைச்சர்கிட்டே கேட்டது தப்பாயிடுச்சு!

**நண்பர் :** ஏன்...?

**திருடர் :** எல்லா ஸ்கூல் ஹெட்மாஸ்டர்களையும் சஸ்பெண்ட் பண்ணப் போறோம்கிறார்!

- எஸ். ரமேஷ்



நடிகையின் கணவர் : என்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு உனக்கு எப்படித் தோணிச்சு?

நடிகை : என்னமோ தெரியலைங்க! உங்களைப் பார்த்ததுமே நீங்க டைவர்ஸ் சமயத்திலே எதுவும் தகராறு பண்ண மாட்டீங்கன்னு தோணிச்சு, அதான்!

- ஆர். ஆர். பூபதி



குரலும் சௌரியுடையதில்லை.

''நான்... மிஸ்டர் ராமப்ரசாத்தைப் பார்க்க முடியுமா? குடும்பத்துக்குத் தெரிஞ்சவன்.''

''உள்ள வாங்கோ.''

அவர் எழுந்து உள்ளே போனார். ஹூம், சௌரி இவ்வளவு உயரமில்லை.

ஹாலில் திருமலை பத்து நிமிடம் காத்து உட்கார்ந்திருந்தபின் வேட்டி சட்டை உடையில் பூசினாப் போன்ற உடல்வாகுடன் ஓர் ஆள் உள்ளேயிருந்து வந்தான். முன் முடியில் திட்டாய்ச் சில நரைகள். நாற்பத்தைந்து வயதுக்கு இது அதிகமில்லை.

திருமலை எழுந்து ''நமஸ்காரம்'' என்றார்.

''நமஸ்காரம்.''

''ராமப்ரசாத் தானே?''

''ஆமாம். ஸார் யார், தெரியலையே?''

''என் பேர் திருமலாச்சாரி. உங்கப்பாவின் பால்ய சிநேகிதன்.''

''அப்படியா? ரொம்ப சந்தோஷம். உக்காருங்கோ. என் மாமனார் சரியாச் சொல்லலை.''

''வாசல்ல உக்காந்து படிச்சுண்டிருந்தாரே, அவர்தான் உன்... உங்க மாமனாரா?''

''ஆமாம். என்னை ஒருமைப் படையிலேயே பேசலாம்.''

''தாங்ஸ்.''

''ஏதாவது சாப்பிடறேளா?'' குரலை உயர்த்தினான். ''அம்புஜம், கொஞ்சம் காப்பி கொண்டா. நீங்க எங்கே ஸார் என்னைப் பார்க்க.... என்னைப் பத்தி எப்படித் தெரிஞ்சுண்டேள்?''

''அது ஒண்ணுமில்லே. உன் பெண் நளினி என் பேத்தியின் சிநேகிதி. நேத்து அவளைப் பார்க்க ஆத்துக்கு வந்திருந்தா. அப்போ பேச்சுவாக்கில் அவள் சௌரியோட பேத்தின்னு தெரிஞ்சுது. சௌரி எனக்கு ரொம்ப வேண்டிய சிநேகிதனப்பா! இளவயசில் சாப்பாட்டு, தூக்க நேரம் போக எப்பவும் ஒண்ணாவே இருப்போம். அவனைப் பார்க்கணும்னுதான் ஓடி வந்திருக்கேன்.''

ராமப்ரசாத் திகைப்புற்றார் போல் வெறித்தான்.

''சௌரி எங்கே? கொஞ்சம் வரச் சொல்றயா? எங்கயானும் வாக்கிங் போயிருக்கானா? இல்லே மாடியில் இருக்கானா? நானே போய்ப் பார்க்கட்டுமா?'' எழுந்திருக்க முனைந்தார்.

''வேணாம் வேணாம்... அது வந்து ஸார்... அப்பா... இப்போ இங்கே இல்லை.''

''இங்கே இல்லைன்னா?''

''அதாவது... இல்லை.''

''என்னப்பா சொல்றே? புரியலையே?''

''என் மாமனாரும் மாமியாரும் எங்களோடத்தான் இருக்கா. என் வொய்ஃப் அவாளுக்கு ஒரே பெண். அப்பாவோ மத்தவாளோட ஒத்துப் போறதில்லே. மகா பிடிவாதம்! அதுவும் அம்மா போனப்புறம் கேட்கவே வேணாம். சரிதான்னு அவருக்கு வேற ஏற்பாடு பண்ணிட்டேன்.''

''வேற ஏற்பாடுன்னா?'' சரேலென்று அறிவில் ஒரு மின்வெட்டு. ''முதியோர் இல்லமா?''

''நானும் அடிக்கடி போய்ப் பார்த்துட்டுத்தான் வரேன்.''

திருமலை வாயடைத்துப் போனார். மகா பிடிவாதமாம். மற்றவர்களுடன் ஒத்துப் போவதில்லையாம். தம் நண்பனை அவருக்குத் தெரியாதா? சௌரி பரம சாது. வாயில் விரலை வைத்தால் கடிக்கத் தெரியாத அப்பாவி. மென்மையான சுபாவம்...

எல்லாம் புரிந்த போது முதுகில் பெரும் பாரம் திடீரென்று வந்து அழுத்தியது. தலை கவிழ்ந்தது.

எதிரே மேஜை மேல் ஒரு தம்ளரும் டபராவும் முளைத்தன.

''காப்பி எடுத்துக்குங்கோ ஸார். இவள் தான் என் வொய்ஃப் அம்புஜம். அம்புஜம், ஸார் வந்து...''

''காப்பி வேணாம்ப்பா.'' தலை மெல்ல நிமிர்ந்தது. ''உங்கப்பா அட்ரஸ் குடு, போறும்.''

வீடு திரும்பிய மாமனார் வழக்கமான கலகலப்பின்றி தம்ளரில் பால் ஆற, வெகு நேரம் இடிந்து உட்கார்ந்திருப்பதைக் கண்ட ஸ்ரீமதி மெல்ல அருகில் வந்து, ''என்ன அப்பா? எப்படியோ இருக்கேளே? பால் கூடச் சாப்பிடலையே? உடம்பை ஏதானும் செய்யறதா?'' என்றாள் கனிவாக.

நிமிர்ந்து அவளை ஒருகணம் உற்றுப் பார்த்த திருமலை ''நான் ரொம்ப... கொடுத்து வச்சவன்மா'' என்று உதடு துடிக்கச் சொன்ன போது மனசில் கொந்தளித்துக் கொண்டிருந்த வெள்ளம் கண்களுக்குப் பாய்ந்தது.

# அட, அப்படியா!



* சந்திர மண்டலத்தின் மேல்பரப்பு

# சூரியனை 'வணங்கும்' குரங்குகள்!


!! மடகாஸ்கர் காடுகளில் வாழும் ஸிஃபாக்கா என்ற ஒரு வகைக் குரங்கு, மரங்களின் உச்சிக்கு ஏறிப் போய் மல்லாக்கப் படுத்துக் கொண்டு, கால்களைப் பரப்பி, கரங்களைச் சூரியனை நோக்கி உயர்த்தும். வெயிலில் 'குளித்து' உடலை இதமாக்கிக் கொள்ள அவை இவ்வாறு நடந்து கொள்ளப் போக, அப் பகுதியின் பழங்குடியினர், அக் குரங்குகள் சூரியனை வணங்குவதாகவே நம்பினார்கள்.

!! ஆப்பிரிக்க விலங்கான ஜெம்ஸ்பாக் (Gemsbok) இறைச்சிக்காக மட்டுமின்றி நீருக்காக வும் வேட்டையாடப்படுகிறது. வயிற்றில் தூய நீரைச் சேமித்து வைத்திருக்கும் இந்த விலங்கு.

!! முழு இருட்டில் வௌவால்களால் பார்க்க முடியாது. எலி, பூனை, வௌவால் போன்ற சில விலங்குகளின் கண் பார்வை குறைவான வெளிச்சத்தில்தான் சிறப்பாக இயங்குகிறது. இவற்றின் கண்களிலுள்ள 'பாப்பா' மிக அகல மாக விரிந்து அதிக வெளிச்சத்தை விழித்திரைக்கு அனுமதிக்கிறது. அதனால்தான் நமக்குக் கண் தெரியாத அளவு இருட்டில் இவற்றுக்கு நன்றாகத் தெரிகிறது.

!! வானவியலின் முன்னோடி ஜோதிடவியல் அல்ல. வானவியலே தொன்மையானது. கோள்களின் இயக்கங்களைப் புரிந்து கொள்ளவும் கணிக்கவும் கணிதம் உதவியது. அதன் அடிப்படையில் எதிர்காலம் பற்றிய ஜோதிடம் வகுக்கப்பட்டது. ஜோதிடம் மெய்யாகுமா என அறியும் பொருட்டுப் பல மருத்துவ, உயிரியல் பரிசோதனைகள் நிகழ்த்தப்பட்டதால் அப் பிரிவுகளும் வளர்ந்தன.

!! பல விஞ்ஞானிகளைப் போல் ஆல்பர்ட் ஐன்ஸ்டைனும் ஞாபகமறதிக்காரர். ஒரு கொடை நிறுவனம் அளித்த ஆயிரம் டாலர் காசோலையை ஐன்ஸ்டைன் தாம் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தில் பக்க அடையாளம் குறிப்பதற்காக வைத்தார். வெகு சீக்கிரத்தில் அப் புத்தகத்தையே தொலைத்து விட்டார்.



* ஐன்ஸ்டைன்

!! அரை நிலவை விட முழு நிலவு இரு மடங்கு அல்ல, ஒன்பது மடங்கு பிரகாசமானது! பாதி வளர்ந்த நிலையில் நமக்குத் தென்படுவது சந்திரனின் மேடு பள்ளமான பகுதி என்பதால் அது எதிரொளிக்கும் வெளிச்சம் குறைந்து போகிறது.

!! உலகின் கிட்டத்தட்ட ஒரு பாதியை பசிஃபிக் சமுத்திரம் ஆக்கிரமித்துள்ளது.

!! சந்திரனில் காற்றோ நீரோ இல்லாததால் அங்கு உயிர்கள் தழைக்காது. ஆனால் அங்கிருந்து பூமிக்குக் கொண்டு வரப்பட்ட மண்ணில் செடிகள் வளர்த்து வெற்றி கண்டுள்ளனர் விஞ்ஞானிகள்.

தொகுப்பு : உதய்லால்

# சக்கரவர்த்தித் திருமகன்

## 16. பரசுராமர்

அயோத்தியில் தன்னிடம் ஒப்புவித்த ராஜகுமாரர்களை மிதிலையில் தசரதனிடம் க்ஷேமமாக ஒப்புவித்துவிட்ட விசுவாமித்திர மகா முனிவர் மங்கள காரியங்கள் முடிந்தவுடன் இரண்டு அரசர்களிடமும் விடைபெற்றுக் கொண்டு இமயமலைக்குச் சென்றார். இராமாவதார சரித்திரத்தில் விசுவாமித்திருடைய பங்கு இத்துடன் முற்றிற்று.

இராம சரித்திரம் என்கிற மகா கோபுரத்துக்கு விசுவாமித்திரர் அஸ்திவாரக் கல் என்றே சொல்லலாம். இதற்குப் பிறகு விசுவாமித்திரரைப் பற்றி ராமாயணத்தில் ஒன்றுமில்லை. வால்மீகி ராமாயணத்தில் கவனிக்க வேண்டிய ஒரு விஷயம்: ஒரு காண்டத்தில் மிக முக்கியமான பங்கெடுத்துக் கொள்ளும் பாத்திரங்கள் அந்தக் காண்டத்தோடு மறைந்து போகிறார்கள். பிறகு அவர்களை நாம் காண்பதில்லை. பால காண்டத்து விசுவாமித்திரர் பிறகு காணப்படுவதே இல்லை. அயோத்தியா காண்டத்துக் கைகேயி பிறகு எங்கேயோ மறைந்து போகிறாள். குகனும் அப்படியே.. பரதனும் இவ்வாறே. சித்திர கூடத்திலிருந்து திரும்பிப் போனவனை மறுபடி ராமன் அயோத்தி திரும்பும் வரையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் நாம் காண்பதில்லை. ராமனுடைய பல கஷ்டங்களிலும் கவலைகளிலும் பரதனைக் கவி நம் முன் கொண்டு வருவதில்லை. சாதாரண நாடகங்களில் வரும் பாத்திரங்களைப் போல் வால்மீகியின் இதிகாசத்திலுள்ள பாத்திரங்கள் கடைசி வரையில் நின்று அவ்வப்போது தகுந்த சமயங்களில் திரும்ப வந்து தங்களைக் காட்டிக் கொள்ளுகிறதில்லை. கதா பாத்திரங்களை விமரிசை செய்வதில் விசேஷரஸம் காணும் நாவலர்கள் இதைக் கவனத்தில் வைக்க வேண்டும்.

விவாகம் முடிந்ததும் தசரத சக்கரவர்த்தி அயோத்தியைக்குத் திரும்பினான். அவனுடைய பெரும் பரிவாரமும் கூடச் சென்றது.

வழியில் ஓர் இடத்தில் திடீரென்று அபசகுனங்கள் தென்பட்டன. கவலைப்பட்ட தசரதன் இதென்னவென்று வசிஷ்டரைக் கேட்டான்.

"கெட்ட நிமித்தங்கள் உண்மையே. ஆயினும் இதனால் கெடுதலில்லை. பறவைகளின் குறிகள் அசுபமாக இருந்தாலும் தரையில் நடக்கும் பிராணிகளின் குறிகள் சுபமாகவே இருக்கின்றன. ஆகையினால் பயத்துக்குக் காரணமில்லை" என்றார்.

இவ்வாறு ரிஷியும் அரசனும் பேசிக் கொண்டிருக்கையிலேயே பயங்கரமான காற்று வீசிற்று. மரங்கள் விழுந்தன. ஒரு பெரிய அதிர்ச்சி உண்டாயிற்று. புழுதி உயரக் கிளம்பிச் சூரியனை மறைத்தது. எட்டுத் திக்குகளும் இருண்டு விட்டன. எல்லாருமே பயந்து போனார்கள். பிறகு காரணம் கண்டார்கள். க்ஷத்திரியக் கூட்டத்துக்கே யமனாக அவதரித்த பரசுராமர் வந்து நின்றார்.

தோளில் வில்லும் கோடாலியும் கையில் மின்னலைப் போல் ஜொலிக்கும் ஒரு அம்புமாகத் திரிபுரம் எரித்த

ராஜாஜி

ருத்திரனைப் போலவே, பார்த்தவர்கள் நடுங்க, தலையில் ஜடையுடன் பரசுராமர் விளங்கினார். அவர் முகத்தினின்று காலாக்கினி போலத் தாங்க முடியாத ஒளி வீசிற்று. தலைமுறை தலைமுறையாக க்ஷத்திரியர்களை ஹதம் செய்த ஜமதக்கினி குமாரர் பரசுராமர் எங்கே சென்றாலும் பூகம்பமும் பெருங் காற்றும் அவருக்கு முன் செல்லும். க்ஷத்திரியகுலம் நடுங்கும்.


தசரதனுடைய பரிவாரத்திலிருந்த பிராமணர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். ''ஜமதக்கினி முனிவருடைய குமாரரான ராமர் தம்முடைய தந்தை ஒரு அரசனால் கொல்லப்பட்ட காரணத்தினால் க்ஷத்திரிய குலத்தையே அழித்து விடுவதாகப் பிரதிக்ஞை எடுத்து, பிரதிக்ஞைப்படி நூற்றுக் கணக்கான அரசர்களை ஹதம் செய்து சினம் தணிந்ததாக எண்ணினோமே, மறுபடியும் தம் கோர யுத்தத்தை ஆரம்பித்து விட்டாரா என்ன?'' என்று பயந்து மெதுவாகப் பேசிக் கொண்டார்கள். இவ்வாறு சந்தேகித்துக் கொண்டே அவருக்கு அர்க்கியம் சமர்ப்பித்து உபசரித்தார்கள்.

அவர்கள் செய்த உபசாரத்தை அங்கீகரித்துப் பரசுராமர் ராமசந்திரனைப் பார்த்துப் பேசலானார் :

''தசரதன் மகனே! உன் வீரச் செயல்களைப் பற்றி நான் கேள்விப் பட்டேன். ஜனகர் சபையில் பரமசிவனுடைய தனுஸை நீ வளைத்து விட்டதும் அது ஒடிந்ததும் எல்லாம் நான் கேட்டு இது எவ்வாறு நடந்தது என்று ஆச் சரியப்பட்டுத்தான் உன்னைப் பார்க்க வந்தேன். இதோ என்னிடம் இருக்கும் வில். நீ ஒடித்த வில்லுக்குச் சமானமான இது என் தந்தை ஜமதக்கினி அடைந்த விஷ்ணு தனுசு. இதை வளைத்து நாண் ஏற்றுவாய். பாணமும் தருகிறேன். இதைச் செய்வாயேல் நாமிருவரும் யுத்தம் செய்வோம்'' என்றார்.

தசரதன் இதையெல்லாம் பார்த்துப் பெருந் திகிலடைந்தான். மகனை எப்படியாவது பரசுராமரிடமிருந்து மீட்டு அவன் உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்று பரிதாப முறையில் பேசினான்.

''நீர் பிராமணர், க்ஷத்திரிய ஜாதியின் பேரில் உமக்கிருந்த கோபம் இதற்கு முந்தியே தணிந்து விட்டதல்லவா? பிறகு தவம் செய்யப் புகுந்தீர் அல்லவா? என் குமாரன் சிறுவன். அவனுடனா நீர் யுத்தம் செய்வது? அபயம் தருவீராக. இனி ஆயுதம் எடுப்பதில்லையென்று தேவராஜனிடம் நீர் வாக்குறுதி செய்து விட்டீர். காச்யபருக்குப் பூமண்டல ஆதிபத்யத்தையும் தந்து விட்டு, மகேந்திர பர்வதத்தில் தவம் செய்யப் போனீரல்லவா? பிரதிக்



ஞையைத் தவறலாமா? ராமனிடத்தில் நாங்கள் எல்லோரும் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறோம். அவனை நீர் ஹதம் செய்து விட்டால் நாங்களும் கூடவே செத்துப் போவோம்'' - இவ்வாறு தசரதன் நிலைகுலைந்து கெஞ்சியதைப் பரசுராமர் கவனிக்கவேயில்லை. அவர் தசரதனைப் பார்க்காமல் ராமசந்திரனோடேயே பேசிக் கொண்டு போனார்.

''விசுவ கர்மாவால் பூர்வம் இரண்டு சிறந்த வில்லுகள் செய்யப்பட்டன. இரண்டும் சம சிறப்பு வாய்ந்தவை. ஒன்று திரிபுரத்தை எரித்த திரியம்பகனுக்குத் தரப்பட்டது. இரண்டாவது வில் திருமாலுக்குத் தரப்பட்டது. அந்த விஷ்ணு தனுசு இது. நீ வளைத்து ஒடித்ததாகச் சொல்லப்படுவது சிவன் வில். இந்த வில்லை நீ வளைக்க முடியுமா, பார்! வளைத்தாயானால் உன் வீரியம் எனக்கு நிச்சயமாகும். அப்போது நாமிருவரும் யுத்தம் செய்வோம்'' என்று கூறினார்.

இவ்வாறு தனக்குச் சமானம் யாருமில்லை என்று எண்ணி வந்த பரசுராமர் மிக உரத்த குரலில் பேசியதைக் கேட்ட சக்கரவர்த்தித் திருமகன் மெதுவாகவே அடக்கமும் கம்பீரமும் கொண்ட குரலில் பதில் சொன்னான்.

''ஜமதக்னி புத்திரரே! தந்தை கொல்லப்பட்ட கோபத்தால் நீர் பழி வாங்கினீர். அதில் நான் குற்றம் காணவில்லை. ஆனால் மற்றவர்களைப் போல் என்னை நீர் அடக்க முடியாது. தயவு செய்து வில்லைக் கொடும்'' என்று சொல்லி தசரதராமன் ஜமதக்னி ராமரிடமிருந்து வில்லையும் அம்பையும் வாங்கினான். வில்லை வளைத்து அம்பையும் வைத்து நாணையும் இழுத்தான்!

''பிராமணரே! இப்போது என்ன செய்யச் சொல்கிறீர்? இந்த அம்பு வீணாகாதே?'' என்றான் சக்கரவர்த்தித் திருமகன் புன்னகையுடன்.

இரண்டு ராமர்களும் கூடியதைப் பார்க்க, தேவ கந்தர்வ யக்ஷகணங்கள் ஆகாயத்தில் வந்து நின்றார்கள்.

தசரதராமன் வில்லை வளைத்ததும் பரசுராமருடைய தேஜஸானது வாடி விட்டது. அவருடைய அவதார சக்தி அந்தக் கணத்தில் மறைந்தது.

''உன் பிரபாவத்தைக் கண்டேன். நீ என்னைக் கர்வபங்கம் செய்ததில் எனக்கு வருத்தமில்லை. நீ யார் என்பதை அறிந்தேன். என் தவம் முழுதும் உனதாகக் கடவது. ஆனால் காசியபரிடம் நான் செய்த பிரதிக்ஞைப்படி அவருக்குக் கொடுத்து விட்ட பூமியில் நான் இரவில் தங்கக் கூடாது. ஆனபடியால் நான் என் தவ வலிமையால் சூரியாஸ்தமனத்துக்கு முன் மகேந்திர மலைக்குப் போய்ச் சேர வேண்டும். அதற்கு மட்டும் அனுமதிப்பாயாக. மற்றப்படி உன் கையிலிருக்கும் அம்புக்கு என் தபோபலம் முழுதும் இரையாகக் கடவது'' என்று சொல்லி விட்டுச் சக்கரவர்த்தித் திருமகனைப் பிரதக்ஷிணம் செய்து வணங்கித் தாம் வந்த வழியே திரும்பினார்.

சக்கரவர்த்தியும் ராஜகுமாரர்களும் திரும்பி வருவதை அறிந்து அயோத்தி நகரத்தினரின் மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடிற்று. தசரதனையும் பரிவாரத்தையும் ராஜ குமாரர்களையும் வரவேற்பதற்காக அலங்கரிக்கப்பட்ட அயோத்தி நகரம் தேவலோகத்தைப் போல் ஜொலித்தது.

ராமனும் சீதையும் மிகவும் சந்தோஷமாக அயோத்தியில் ஒரு குறையுமின்றிப் பன்னிரண்டு ஆண்டுகள் கழித்தார்கள். ராமன் தன் இதயத்தை அப்படியே சீதைக்கு அர்ப்பணம் செய்து விட்டான். இருவர்களுக்குமிடையில் வளர்ந்த பிரியமானது இருவர்களுடைய குணங்களைப் பற்றியதா? அல்லது இருவர்களுடைய சம அழகைப் பற்றியதா என்பதைச் சொல்ல முடியாமலிருந்தது. இரண்டும் சேர்ந்தே அவர்களுடைய பரஸ்பர அன்பு இருமடங்காக வளர்ந்து கொண்டு போயிற்று. ராமனுடைய உள்ளமும் சீதையினுடைய உள்ளமும் சம்பாஷணையின்றியே ஒன்றோடொன்று பேசும் என்கிறார் கவி. இவ்வாறு ராமனுடைய பிரியத்தை அனுபவித்த சீதையின் காந்தியானது தேவலோகத்தில்






சாக்ஷாத் ஸ்ரீதேவியின் காந்தியைப் போல் பிரகாசித்தது.

வெகு நாட்களுக்குப் பிறகு, வன வாசம் ஆரம்பித்த சமயம், மகா தபஸ்வி அனசூயை ராமன் மேல் சீதை வைத்து வந்த அன்பைப் பற்றிப் பாராட்டிப் பேசிய போது சீதை சொன்னாள் : ''ராமர் எல்லா நற்குணங்களையும் அடைந்தவர். அவருடைய அன்பின் விசேஷம் என்ன வென்றால் அது என் அன்புக்குச் சமமான அன்பு. எந்த நிலையிலும் மாறாத அன்பு. மாசற்ற சிந்தனையும் புலன்களை அடக்கியாளும் சக்தியையும் பெற்றவர். தாயைப் போலும் தகப்பனைப் போலும் என்னைக் காத்து வருகிற இவரை நான் எப்படிக் காதலிக்காமலிருக்க முடியும்?'' என்றாள்.

காதலைப்பற்றி ஆராய்ச்சி செய்கிறவர்களும், விவாகம் செய்து கொண்டு நன்றாக வாழ வேண்டும் என்று ஆசைப்படும் யுவர்களும் யுவதிகளும், சீதை அனசூயைக்குச் சொன்ன இந்த வார்த்தைகளைக் கவனிக்க வேண்டும். அவற்றில் பொருள் நிறைந்து கிடக்கிறது. இருவர்களுடைய அன்பும் சமமாக இருக்க வேண்டும். ஒன்று அதிகமாகவும் ஒன்று குறைவாகக் கடன் பட்டதாகவும் இருக்கலாகாது. எந்தக் காரணத்தைக் கொண்டும் அன்பு மாறலாகாது. வாழ்க்கையில் பல நிகழ்ச்சிகள் நிகழும். அன்பு ஒன்றே போலிருக்க வேண்டும். என்ன நேர்ந்தாலும் அதனால் அன்பானது ஏற்றத்தாழ்வு அடையக் கூடாது. கொண்ட மனைவிக்குப் புருஷன் தாயைப் போலும் தந்தையைப் போலும் இருக்க வேண்டும். இப்படியெல்லாம் இருந்தால் வாழ்க்கையில் மகிழ்ச்சி நிறைந்து தேவியின் அருளைப் பெறுவோம்.

(தொடரும்)

## அருள்வாக்கு



**ப**லவீனர்களைப் பயமுறுத்தி ஹிம்சை முறையால் பணிய வைக்கிற போக்கு நல்லதல்ல. இந்த மாதிரி செய்கிற உண்ணாவிரதம், கொடும்பாவி கொளுத்துதல், கிளர்ச்சி இவையெல்லாம் உண்மையில் இவற்றைச் செய்கிறவர்களின் பலவீனத்தைத்தான் காட்டுகிறது. தங்களுடைய லட்சியத்தில் உள்ள சத்தியத்தின் சக்தியில் நம்பிக்கை இல்லாததால்தான் இத்தகைய நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். பெரும்பான்மை (மெஜாரிடி) பலம் படைத்தவர்கள் பலத்தை துஷ்பிரயோகம் செய்யும்போது, அதைக் கண்டு பயப்படுவதும், அதே போல் தங்கள் பலத்தை துஷ்பிரயோகம் செய்து பலவீனர்களைப் பயமுறுத்துவதும் தேசத்துக்கு நல்லதல்ல. மக்களின் இந்த பலவீனம் சர்க்காரிலும் தானே பிரதிபலிக்கிறது. மறுபடி நாம் இந்த தேசத்தில் பயமில்லாத பிரஜைகளாகத் தலையை நிமிர்த்தி நடக்க வேண்டுமானால் க்ஷத்ர தர்மத்தை விருத்தி செய்ய வேண்டும். தனி மனிதர்கள் உறுதியும் ஆத்ம பலமும் கொண்டிருப்பது. அவர்கள் கட்டுப்பாட்டுடன் ஒன்றுகூடி ஐக்கியமாக உழைப்பது; தீமையையும் அடக்கு முறையையும் கண்டு அஞ்சாத நெஞ்சுறுதியுடன் போராடுவது, – இவையெல்லாம் இந்த தர்மத்தில் அடக்கம். லோக க்ஷேமம் ஒன்றே லட்சியமாகக் கொண்டு இந்த தர்மத்தை நடத்திக் காட்டினால் நாட்டின் ஒழுக்கம் மிக உயர்ந்த நிலை அடையும். அரசாங்கத்தின் தரமும் தானாகவே உயரும்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.



# அன்புள்ள அருண் கண்மணி,

சிட்டுக் குருவி செத்துப் போனது பெரிய 'டிராஜடி'தான். ஆனால் அதுக்கு மூளை இல்லைன்னு அதைக் கோபிச்சுக்கறதுலே பயன் கிடையாது. ஏன்னா, எல்லாப் பறவைகளுக்குமே அதுகளோட உடம்பு அளவைப் பார்க்க, மூளையினோட 'சைஸ்' ரொம்ப ரொம்பக் குட்டி! அப்படியிருந்தும் பறவைகள் எத்தனையோ அதிசயமான காரியங்களைப் பண்ணும் :

மழை, பனிக் காலத்தில் வெயில் பிரதேசத்தைத் தேடி ஆயிரக்கணக்கான மைல்கள் பறந்து போகும். ஒரு தடவை கூட வழி தவறி தொலைஞ்சு போகாது!

தையல் குருவியும் தூக்கணாங்குருவியும் கட்டின கூடுகளைப் பார்த்திருக்கியா? தையல் குருவி இரண்டு மூணு இலைகளைச் சேர்த்து, தின்னம் மாதிரி தைக்கும். மெத்துனு பஞ்சு மாதிரி பொருளைக் கொண்டு வந்து அதுக்குள்ளே பரப்பி விட்டு, அழகாய் பட்டாணி சைஸில் முட்டையிடும்!

மூளை ரொம்பக் குறைவாய் இருந்தாலும் பறவைகளுக்கு உள்ளுணர்வு ரொம்ப அதிகம். அந்த உள்ளுணர்வு தூண்டி விடறதால், தங்களையும் தங்கள் இனத்தையும் காப்பாத்திக்கப் பறவைகள் செய்யற காரியங்களைக் கூடப் பிறந்த இயல்புகள்னு (Innate behaviour) விஞ்ஞானிகள் சொல்றாங்க. சிட்டுக் குருவிகள் புழுதியில குளிக்கறதும் அதே உடன்பிறந்த உணர்வியல்புகளில் சேர்த்தி. வேறு பல பறவைகளும் இது போல் செய்யும். ஏன் தெரியுமோ...? பட்டு மாதிரி இருக்குன்னு எழுதினியே அந்த உடம்பின் சிறகுகளை நல்லபடியா பாதுகாக்கத்தான்!

'அதுக்காகப் புழுதியிலே புரள்றதா...?'ன்னு கேட்கறே. அப்படி புரள்றதாலே குருவியினுடைய உடம்புல இயற்கையா சுரக்கற எண்ணெய் உடல் முழுக்க பரவுது. அந்த எண்ணெய்ப் பசைதான் சிறகுகளைப் பளபளப்பாக்குது; மழையில் நனைஞ்சாலும் குருவியின் உடம்புல ஈரம் ஒட்டாமல் தடுக்கறது...

இதை விட ரொம்ப ரொம்ப அதிசயமா ஒரு விஷயம் இருக்கு - பறவைகள் பற்றி... அதை நான் எழுதணும்னா ஒரு கண்டிஷன்: சிட்டுக் குருவி மண்ணில் குளிச்ச மாதிரி வேற மூணு பறவைகள் செய்யற காரியங்களை பப்லுவும் நீயும் கவனிச்சுப் பார்த்து எனக்கு எழுதணும்.

எழுதுவியா...?

பிரியமுள்ள,

அன்பு அத்தை



# தண்டுவடம் தரும்

முப்பத்தைந்து வயது * மிருணாளினிக்குப் படிப்படியாக ஒரே வார இடைவெளியில் இரு கால்களிலும் வலி கூடிக் கொண்டே போய், குனியவோ, நடக்கவோ முடியாமல் படுத்த படுக்கையானாள்.

எழும்பூரில் ஒரு நர்சிங் ஹோமில் சேர்ந்து எலும்பியல் துறை நிபுணர் மேற்பார்வையில் பரிசோதனை. கால்களை மேல்தூக்காக வைத்துப் பளுக்கல் கட்டி சிகிச்சை; அவ்வப்போது Ultrasonic கதிர் செலுத்துதல், பிஸியோதெரபி, எக்ஸ்ரே... தண்டுவடத்திலிருந்து திரவம் எடுத்துப் பரிசோதனை என்று எல்லா முயற்சிகளுக்குப் பின்னரும் புரிபடாத நோய்.

ஸ்கேன் எடுக்கப்பட்டது. முதுகுத் தண்டில் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும் என்றனர். ஏற்கெனவே ஏகப்பட்ட பணம் செலவு. இன்னும் செலவு செய்யத் தாங்குமா...!

மற்றொரு எலும்பியல் நிபுணரிடம் காட்டி இரண்டாவது அபிப்ராயம் பெறலாம் என்று முடிவெடுத்து, பிரபலமான மருத்துவமனையில் அவளைச் சேர்த்தனர். அங்கு மறுபடியும் எல்லா பரிசோதனைகளும் செய்யப்பட்டன.

முதுகுத்தண்டில் பிரச்னை இல்லை... அறுவைச் சிகிச்சை அவசியமில்லை கால் மூட்டுகளில்தான் பிரச்னை என்று கூறினார். விலையுயர்ந்த மருந்து ஒன்றை கால் மூட்டுகளில் நாலு நாள் இடைவெளி விட்டுச் செலுத்தினர். Ultrasonic கதிர்கள், பிஸியோதெரபி தொடர்ந்தது. அறுவை சிகிச்சை இல்லாமலே(!) இரண்டு மாதங்களில் அவள் குணமானாள். இப்போது உதவியின்றி நடந்து, சுயமாக வீட்டு வேலைகளைச் செய்து கொள்ள முடிகிறது அவளால்!

* டாக்டர் ஸ்ரீகுமார்.



இப்படிப்பட்ட கோளாறுகள் இள வயதினருக்குக் கூட காரணமில்லாமல் வருகின்றதே! சரியாகக் கணிக்காமல் போனால் சாதாரணமாகக் குணமாகக் கூடிய கோளாறு கூட அறுவைச் சிகிச்சையில் முடியக் கூடிய அபாயம் உள்ளதே! பணத்தை அடிப்படையாகக் கொண்டு சின்னக் கோளாறுகள் கூட பூதாகாரப்படுத்தப் படுகின்றனவா?

சென்னை வடபழனி சூர்யா மருத்துவமனை தலைமை மருத்துவரும், எலும்பியல் துறை அறுவை சிகிச்சையில் லண்டனில் முதுநிலை பட்டப் படிப்பு படித்தவருமான டாக்டர் ஸ்ரீகுமாரைச் சந்தித்து விளக்கங்களைக் கேட்டோம். அவர் கூறினார் :

பல வட்ட வடிவ எலும்புகளின் சங்கிலிச் சேர்க்கைதான் முதுகுத்தண்டு. முக்கியமாகக் கழுத்துப் பாகத்தில் ஏழு, நடு முதுகில் பன்னிரண்டு, கீழ் முதுகில் ஐந்து வளையங்கள் உள்ளன.


தண்டுவடம் (நரம்புக் கற்றை) இந்த முதுகுத்தண்டினுள் பாதுகாப்பாக உள்ளது. முதுகுத்தண்டு கவசமானது, தண்டுவடம் அதனுள் மிகச்சரியாகப் பொருந்தக் கூடிய அளவு அகலம்தான் உள்ளது. இதனால்தான் முதுகுத்தண்டில் ஏதேனும் ஓர் எலும்பில் கோளாறு நேர்ந்தாலும் தண்டுவடம் பாதிக்கப்படுகிறது. மூளையின் கட்டளைப்படி உடலின் பல பாகங்களை இயங்கச் செய்யும் நரம்புகள், தண்டுவடம் மூலம்தான் மின் அலைகளைப் பெறுகின்றன.

முதுகுத் தண்டின் கோளாறால், தண்டுவடத்தின் எந்தப் பாகத்தில் பாதிப்பு நேர்கிறதோ, அதற்கேற்ப நரம்புகளிலும் பாதிப்பு உண்டாகி, அந்த நரம்பின் தொடர்பில் தடை ஏற்பட்டதால் அவதியுறும் கால் அல்லது கை அல்லது கழுத்து போன்ற உடல் உறுப்பில் வலியும் இயக்கம் இன்மையும் ஏற்படுகிறது.

முதுகுத்தண்டு எலும்புகளின் தேய்வினாலோ, ஒரு வட்டமும் இன்னொன்றும் இணையுமிடத்தில் உள்ள Disc prolapse (இணைப்பு வழுவிழப்பது) ஆவதினாலோ, உள்வட்டத்தில் நேரக்கூடிய கூடு

* பெயர் கற்பனை

# திருகுவலிகள்




தல் வளர்ச்சியினாலோ (Tumor) தண்டு வடம் பாதிக்கப்படுகிறது.

எலும்புத் தேய்வும், Disc prolapse ம் நேர பல காரணங்கள் உண்டு. சராசரி உடல் இயக்கத்தால், வயோதிகத்தால் பெரும்பாலும் தேய்வு நேரக்கூடும். திடீரென வேகமாகக் குனிவதாலோ, நிமிர்வதாலோ, சக்திக்கு மீறி பளு தூக்குவதாலோ, குதிப்பதாலோ அளவுக்கு அதிகமாக டூ வீலர் ஓட்டுவதாலோ கூட இது நிகழலாம்.

கழுத்துப் பகுதியில் நேரும் தேய்வை Cervical Spondylitis என்றும், கீழ் முதுகுப் பகுதியில் நேரும் தேய்வை Lumbar Spondylitis என்றும் கூறுகிறோம். இவை யிரண்டும்தான் வரும் நோயாளிகளில் பெரும்பாலோருக்கு இருக்கும் கோளாறுகளாகும்.

முதுகுத்தண்டு கோளாறினால் நேரும் வலிகளை அறுவைச் சிகிச்சை மூலம்தான் குணப்படுத்த முடியும் என்பது தவறு. Ultrasonic Rays, பிஸியோதெரபி (மருத்துவ ரீதியிலான உடற் பயிற்சி) கொடுத்து குணப்படுத்த முயலுவோம்... இம்முறைகள் மூலம் ஐம்பது சதவிகிதம் நோயாளிகள் குணமாகிவிடுவர்.

மைலோகிராம் எனப்படும் முறை மூலம் தண்டுவடத்தில் கலர் திரவத்தைச் செலுத்தி எக்ஸ்ரே எடுத்துச் சோதனை, MRI ஸ்கேன், தண்டுவடத்திலிருந்து திரவம் எடுத்து நோய்த்தொற்று உள்ளதா என்று சோதனை ஆகிய முறைகளில் இறங்குவோம்.

கழுத்துப்பட்டை, இடுப்புப்பட்டை என்று நோயாளிகளை 'பெல்ட்' அணியச் செய்து குணமாக்க முயல்வோம். வேறு வழியில்லை என்றால்தான் அறுவைச் சிகிச்சை.

ஒரே நோயாளி குறித்து இரண்டு மருத்துவர்கள் மாறுபட்ட முடிவுகளுக்கு வருவது என்பது நேரக்கூடியதுதான். இதற்கு அடிப்படைக் காரணம் போதிய அனுபவமின்மை.

தவறான கணிப்பால் நோயாளியின் நிலைமை மேலும் சீர் குலைய வாய்ப்புண்டு என்பதால் அனுபவமும், தொழிலில் முதிர்ச்சியும், இத்துறைக்குத் தேவையான படிப்பும் உள்ள மருத்துவ நிபுணரைத் தேர்ந்தெடுத்து ஆலோசனை கேட்பது நல்லது. எலும்பியல், நரம்பியல் நிபுணர்கள் இருவரும் உள்ள நல்ல மருத்துவ மனையைத் தேர்ந்தெடுக்கலாம்.

அறுவைச் சிகிச்சை தேவைப்படாத கோளாறுகளை பிஸியோதெரபி மூலம் குணமாக்கி விடலாம். ஒரு தடவை பிஸியோதெரபி சிகிச்சை பெற ரூ. 30/- செலுத்தும்படி இருக்கும். நாலைந்து முறைகள் மருத்துவமனையில் இச்சிகிச்சை எடுத்துக் கொண்டால், புத்திசாலியான நோயாளி அதே முறையில் செலவின்றி தானே வீட்டில் செய்து குணமடைய முடியும்!

எலும்பியல் கோளாறுகள் நேர்ந்தால் அது இன்னதென்று நிர்ணயிக்கவும் பின்னர் சிகிச்சைக்கும் பணம் செலவாகத்தான் செய்யும்.

இதய, சிறுநீரகக் கோளாறுகளை மிகவும் சீரியஸ் என்று கருதுவதால் அதற்காகும் செலவுகள் பெரிதாகத் தெரியவில்லை. முதுகு வலிக்கு இவ்வளவு செலவா என்று அங்கலாய்க்கிறோம். உண்மையில் சர்வ அங்கங்களையும் கட்டுப்படுத்தும் தண்டு, வடமும் அதற்குக் கவசமான முதுகுத் தண்டும் உடம்பின் பிரதான உறுப்புக்கள். மருத்துவச் செலவைத் தவிர்க்க வேண்டுமானால் அசைவுகளையும் இயக்கங்களையும் ஜாக்கிரதையாகச் செய்யலாம். மீறி நோய் வந்தால் மருத்துவ இன்ஷுரன்ஸ் கை கொடுக்கும்.

பேட்டி : நாயகன்

# சிவகாமியின் சபதம்

## நாற்பத்தெட்டாம் அத்தியாயம்
## குளக்கரைப் பேச்சு

தை மாதத்தின் பிற்பகுதியில் ஒருநாள் காலை நேரத்தில் வானம் மப்பும் மந்தாரமுமாயிருந்தது.

அந்த வருஷம் ஐப்பசி, கார்த்திகையில் நல்ல மழை பெய்திருந்தபடியால், தாமரைக் குளம் நிரம்பிக் கரையைத் தொட்டுக் கொண்டு தண்ணீர் ததும்பிற்று. காலைச் சூரியனை மேகங்கள் மூடியிருந்த போதிலும் குளத்தில் செந்தாமரைப் புஷ்பங்கள் நன்றாக மலர்ந்து இனிய நறுமணத்தை நானா திசையிலும் பரப்பிக் கொண்டிருந்தன.

இறகுகளில் சிவப்பு வரியுடன் கூடிய நீலநிற வண்டுகள், மலர்ந்த செந்தாமரைப் பூக்களை வலம் வந்து இசைபாடி மகிழ்ந்தன.

பளிங்கு போலத் தெளிந்திருந்த தடாகத்தின் தண்ணீரில் பெரிய பெரிய கயல் மீன்கள் மந்தை மந்தையாக நீந்தி விளையாடிக் கொண்டிருந்தன.

பச்சைப் பசுங் குடைகளைப் போலத் தண்ணீரிலிருந்து கம்பீரமாக எழுந்து தலை நிமிர்ந்து நின்ற தாமரை இலைகளில் முத்து நீர்த் துளிகள் அங்குமிங்கும் தவழ்ந்து விளையாடின.

தாமரைக் குளத்தைச் சுற்றிலும் வானோங்கி வளர்ந்திருந்த விருட்சங்கள் கப்பும் கிளைகளும், இலைகளும், தளிர்களுமாய்த் தழைத்துப் படர்ந்து சில இடங்களில் குளத்தின் தண்ணீர் மீது கவிந்து கருநிழல் பரப்பிக் கொண்டிருந்தன.

பச்சைக் கிளிகளும் பல வர்ணக் குருவிகளும் இன்னிசைக் குயில்களும் இனிய கீதம் பாடும் மைனாக்களும் குளிர்ந்த தழைகளுக்கிடையில் உட்கார்ந்து இளந்தளிர்களைக் கோதிக் கொண்டும் மலர்களின் மகரந்தங்களை உதிர்த்துக் கொண்டும் ஆனந்தமாக ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் கிளைக்குக் கிளை தாவிக் கொண்டும் வசந்த காலத்துக்கு வரவேற்புக் கூறிக் கொண்டிருந்தன.

இவ்விதம் இயற்கைத் தேவி பூர்ண எழிலுடன் கொலுவீற்றிருந்த இடத்தில், ஜீவராசிகள் எல்லாம் ஆனந்தத் திருவிழாக் கொண்டாடிக் கொண்டிருந்த சமயத்தில், மானிட ஜன்மம் எடுத்த அபலைப் பெண் ஒருத்தி மட்டும் அந்தக் குளக்கரையில் சோகமே உருக்கொண்டது போல் உட்கார்ந்திருந்தாள்.

அவள் ஆயனச் சிற்பியாரின் செல்வத் திருமகளும், வீராதி வீரரான மாமல்ல சக்கரவர்த்தியின் உள்ளங் கவர்ந்த காதலியும் நடனக் கலைத் தெய்வத்தின் பரிபூரண அருள் பெற்ற கலைராணியுமான சிவகாமி தேவிதான்.

அந்தத் தாமரைக் குளத்தின் காட்சியானது சிவகாமிக்கு எத்தனை எத்தனையோ பூர்வ ஞாபகங்களை உண்டாக்கிக் கொண்டிருந்தது.

அந்தத் தடாகக் கரை ஓரத்தில் பத்து வருஷங்களுக்கு முன்னால் அவள் இதே மாதிரி எவ்வளவோ தடவை உட்கார்ந்து தெளிந்த தண்ணீரில் பிரதிபலித்த தன் அழகிய உருவத்தைப் பார்த்துக் கொண்டிருந்திருக்கிறாள்.

சென்ற பத்து வருஷ காலத்தில் அவளுடைய உருவத் தோற்றத்தில் எந்தவிதமான மாறுதலும் ஏற்பட்டிருக்கவில்லை.

ஆனால், அவளுடைய உள்ளம் அந்தப் பத்து வருஷத்திலே எவ்வளவு மாறுதல் அடைந்து விட்டது!

அழகிய தாமரை மலரையும் அதைச் சுற்றி வரும் நீலநிற வண்டுகளையும் பார்க்கும் போது முன்னாளில் அவள் உள்ளம்

அடைந்த குதூகலம் இப்போது ஏன் அடையவில்லை?

தண்ணீரிலே பிரதிபலித்த அவளுடைய பொன் மேனியின் சௌந்தரியத்தையும் ஆடை ஆபரண அலங்காரத்தையும் பார்த்த போது அவள் அடைந்த பெருமிதமும் இன்பமும் இப்போது எங்கே போய் விட்டன?

அந்தக் காலத்தில் அதே தாமரைக் குளக் கரையில் தன்னந்தனியாக உட்கார்ந்து மனோராஜ்யம் செய்து கொண்டிருப்பதில் சிவகாமி எவ்வளவோ இன்பத்தை அனுபவித்தாள். தனிமையிலே அவள் கண்ட அந்த இனிமை இப்போது எங்கே?

சிவகாமிக்குச் சில சமயம் தனது சென்ற கால வாழ்க்கையெல்லாம் ஒரு நெடிய இந்திரஜாலக் கனவு போலத் தோன்றியது. தான் அத் தாமரைக் குளக்கரையில் உட்கார்ந்திருப்பதும் தன்னைச் சுற்றிலும் காணப்படும் அழகிய இயற்கைக் காட்சிகளும் உண்மைதானா அல்லது வாதாபி நகரத்துச் சிறை வீட்டில் உட்கார்ந்தபடி காணும் பகற்கனவா என்று அடிக்கடி சந்தேகம் ஏற்பட்டது.

இவ்விதம் நெடுநேரம் ஏதோ உருவமில்லாத சிந்தனைகளில் சிவகாமி ஆழ்ந்திருந்தாள். வானத்தை மூடியிருந்த மேகப் படலங்கள் சிறிது விலகி சூரியன் வெளித் தோன்றி அவள் மீது சுளீர் என்று வெயில் உறைத்த பிறகு எழுந்திருந்தாள். ஆயனரின் அரண்யச் சிற்ப வீட்டை நோக்கி நடந்தாள்.

குதிரைக் குளம்படியின் சப்தம் திடீரென்று கேட்டதும், அந்த அடி ஒவ்வொன்றும் தன் நெஞ்சின் மேல் படுவது போன்ற வேதனை அவளுக்கு உண்டாயிற்று. அந்தக் குளக்கரையைத் தேடி அவளுடைய காதலர் மாமல்லர் குதிரை மீது எத்தனையோ தடவை வந்திருப்பது சிவகாமிக்கு நினைவு வந்தது. இப்போது வருவது யார்? ஒரு வேளை அவர்தானா? - ஆஹா! அவரை எப்படிச் சந்திப்பது? அவருடைய தீக்ஷண்யமான பார்வையை - 'அடி பாதகி! உன்னால் என்னென்ன வினைகள் எல்லாம் வந்தன? என்று குற்றம் சாட்டும் கண்களை எப்படித் தான் ஏறிட்டுப் பார்ப்பது?

ஒரு குதிரையல்ல - இரண்டு குதிரைகள் வருகின்றன. இரண்டு குதிரைகள் மீதும் இரண்டு பேர் வீற்றிருக்கிறார்கள். தனியாக அவரைச் சந்திப்பதே முடியாத காரியம் என்றால், இன்னொருவரின் முன்னால் அவரைப் பார்ப்பது பற்றிக் கேட்க வேண்டியதில்லை. குளக்கரையின் சமீபத்தில் அடர்த்தியாக மண்டி வளர்ந்திருந்த புதர் ஒன்றின் பின்னால் சிவகாமி மறைந்து கொண்டாள்.

குதிரைகள் இரண்டும் சமீபத்தில் வந்தன. முன்னால் வரும் குதிரையின் மீது மாமல்லர்தான் வந்தார். அம்மா! அவர் முகத்திலேதான் இப்போது என்ன கடூரம்? அன்பு கனிந்து ஆர்வம் ததும்பிக் கள்ளங் கபடமற்ற உள்ளத்தைக் காட்டிய பால்வடியும் முகத்துக்கும் இந்தக் கடுகடுத்த முகத்துக்கும் எத்தனை வித்தியாசம்?

அவருக்குப் பின்னால் மற்றொரு குதிரையின் மேல் வந்தவர் பரஞ்சோதியாகத் தானிருக்க வேண்டுமென்று எண்ணிச் சிவகாமி பார்த்தாள். இல்லை; பரஞ்சோதி இல்லை! அந்த மனிதரை இதுவரையில் சிவகாமி பார்த்தது கிடையாது. ஆ! பத்து வருஷத்துக்குள் எத்தனையோ புதுச் சிநேகிதம் அவருக்கு ஏற்பட்டிருக்கும்!

குதிரைகள் இரண்டும் குளக்கரையில் வந்து நின்றன. இருவரும் இறங்கினார்கள். அந்தப் பழைய விருட்சத்தின் அடியில் மாமல்லரின் கவிதையழகு வாய்ந்த காதல் ஓலைகளை எந்த மரத்தின் பொந்திலே தான் ஒளித்து வைத்திருப்பது வழக்கமோ, அதே மரத்தினடியில் - இருவரும் நின்றார்கள். மாமல்லரின் பேச்சு அவள் காதிலே விழுந்தது. ஆம்! தன்னைப் பற்றித்தான் அவர் பேசுகிறார்.

மாமல்லரின் குரலில் பின்வரும் வார்த்தைகள் வருவதைச் சிவகாமி கேட்டாள் : "ஒரு காலத்தில் இந்தத் தாமரைக் குளத்தைப் பார்க்கும் போது எனக்கு எத்தனை குதூகலமாயிருந்தது! எத்தனை தடவை இந்தக் குளத்தைத் தேடி ஆர்வத்துடன் ஓடி வந்திருக்கிறேன்? என் அருமைத் தந்தையிடம் கூட என் உள்ளத்தை ஒளித்து இங்கே கள்ளத்தனமாக எத்தனை முறை வந்திருக்கிறேன்? இதன் அருகில் வரும் போது, சிவகாமி இங்கே இருப்பாளோ, மாட்டாளோ என்ற எண்ணத்தினால் எப்படி என் நெஞ்சம் துடித்துக் கொண்டிருக்கும்? அவள் இந்த மரத்தடியில் உள்ள பலகையில் தங்க விக்ரகத்தைப் போல் தனியாக அமர்ந்திருப்பதைப் பார்த்ததும் எப்படி என் உள்ளம் மகிழ்ச்சி ததும்பித் துள்ளிக் குதிக்கும்? அப்படிப்பட்ட சிவகாமியை இன்று ஏறிட்டுப் பார்க்கவே என் மனம் துணியவில்லை. வீட்டின் வாசல் வரைக்கும் வந்து விட்டு, உள்ளே போகத் தயங்கி ஒதுங்கி வந்து விட்டேன். இந்தத் தாமரைக் குளம் அந்தக் காலத்தில் இருந்ததைக் காட்டிலும் அதிக வனப்புடனேதான் இன்று விளங்குகிறது. ஆயினும் இதைப் பார்ப்பதில் எனக்கு மகிழ்ச்சி உண்டாகவில்லை - மானவன்மரே! இதோ

அமரர் கல்கி

இந்த மரத்தடிப் பலகையைப் பாருங்கள்! இந்தப் பலகையின் மேல் நாங்கள் கை கோர்த்துக் கொண்டு உட்கார்ந்து எத்தனையோ நாள் சொர்க்க இன்பத்தை அநுபவித்திருக்கிறோம். அந்தப் பலகை இன்று எப்படி வெயிலிலே உலர்ந்து மழையிலே நனைந்து துண்டு துண்டாய்ப் பிளந்து கிடக்கிறது! இளவரசே! என்னுடைய சிதைந்து போன வாழ்க்கைக்கு இந்தப் பலகையே சரியான சின்னமாக விளங்குகிறது....''

மானவன்மர் என்று அழைக்கப்பட்ட மனிதர் ஏதோ சொன்னார். அது சிவகாமியின் காதில் விழவில்லை.

மாமல்லர் அவருக்குக் கூறிய மறுமொழி மட்டும் கேட்டது.

''ஆ மானவன்மரே! என்னால் அது நினைக்கவும் முடியாத காரியம். செடியிலிருந்து கீழே உதிர்ந்த பூ உதிர்ந்து போனது தான். மறுபடியும் அதைச் செடியிலே பொருத்த முடியுமா? என்னுடைய தந்தை மகேந்திர பல்லவர் ஒரு சமயம் கூறியது எனக்கு நினைவு வருகிறது. 'சிவகாமியும் அவளுடைய அற்புதக் கலையும் கடவுளுக்கு அர்ப்பணம் ஆக வேண்டியவை. கேவலம் மனிதர்களுக்கு உரியவை அல்ல' என்று அவர் கூறினார். மகேந்திர பல்லவரின் வாக்கு ஒருபோதும் வீண்போவதில்லை!''

இவ்விதம் சொல்லிக் கொண்டே மாமல்லர் தம் சிநேகிதருடன் மெல்ல நடந்து தாமரைத் தடாகத்தின் நீர்க்கரை ஓரம் வரையில் இறங்கிச் சென்றார். இருவரும் சிறிது நேரத்துக்கெல்லாம் திரும்பி வந்து தத்தம் குதிரைகளின் மீது ஏறிச் சென்றார்கள்.

சிவகாமி தன்னுடைய வீட்டை நோக்கிக் காட்டு வழியே சென்ற போது அவளுடைய உள்ளத்தில் பெருங் கிளர்ச்சி குடிகொண்டிருந்தது. அந்தக் கிளர்ச்சியில் இன்பமும் வேதனையும் சமமாகக் கலந்திருந்தன.

மாமல்லர் தன்னை மறந்து போய் விடவில்லையென்பதையும் தன்னிடம் அவரது அன்பு குறைந்து விடவில்லையென்பதையும் அவளுடைய உள்ளம் நன்கு தெரிந்து கொண்டிருந்தது. ஆயினும் அவர்கள் இருவருக்கும் இடையில் ஏதோ ஒரு பெரிய தடை,- கடக்க முடியாத அகாதமான பள்ளம் இருப்பதாகவும் அவளுடைய உள்ளுணர்ச்சி கூறியது. அந்தத் தடை எத்தகையது, அந்தப் பள்ளம் எப்படி ஏற்பட்டது என்பதை அவள் எவ்வளவு யோசித்தும் தெரிந்து கொள்ள முடியவில்லை.

எப்படியும் மாமல்லரைக் கூடிய சீக்கிரத்தில் ஒருநாள் பார்க்க வேணும். பார்த்துத் தனது உள்ளம் அவர் விஷயத்தில் முன் போலவேதான் இருக்கிறது என்பதைத் தெரியப்படுத்த வேணும் என்று தீர்மானித்துக் கொண்டாள். என்றென்றைக்கும் தான் அவருடைய அடியாள், அவர் நிராகரித்துத் தள்ளினாலும் அகன்று போக முடியாதவள் என்று உறுதி கூற எண்ணினாள்.

அன்று மத்தியானம் சிவகாமி ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து உட்கார்ந்திருப்பதைப் பார்த்து ஆயனர், தயங்கித் தயங்கி அவளுடன் பேச்சுக் கொடுக்க முயன்றார்.

''குழந்தாய்! எனக்கென்னவோ இப்போது இந்த நடுக் காட்டிலே வசிப்பது அவ்வளவாகப் பிடிக்கவில்லை. காஞ்சியில் நமக்கு ஒரு வீடு இருக்கிறதல்லவா! அங்கேயே போய் விடலாம் என்று பார்க்கிறேன். உன்னுடைய விருப்பம் என்ன?'' என்று கேட்டார்.

''அப்பா! அதிசயமாயிருக்கிறதே? என் மனத்தில் இருப்பதையே நீங்களும் சொல்லுகிறீர்கள். எனக்கும் இந்தக் காட்டில் தனியாயிருக்க இப்போது அவ்வளவு பிரியமாயில்லை. நாலு பேரைப் பார்க்க வேண்டும், பேச வேண்டும் என்றிருக்கிறது. காஞ்சிக்குப் போனால் கமலி அக்காளுடனாவது பேசிப் பொழுது போக்கலாம்; நாளைக்குப் புறப்படலாமா, அப்பா?'' என்றாள் சிவகாமி.

''நாளைக்குப் புறப்படலாம் என்று எண்ணித்தான் நானும் பல்லக்கு அனுப்பி வைக்கும்படி சொல்லியிருக்கிறேன். நாளைய தினம் காஞ்சி நகரில் பெரிய கோலாகலமாயிருக்கும்.''

''நாளைக்குக் காஞ்சி நகரில் என்ன விசேஷம், அப்பா?'' என்று சிவகாமி கேட்டாள்.

''நாளைக்குச் சக்கரவர்த்தியின் பட்டணப் பிரவேச ஊர்வலம் நடக்கப் போகிறதாம்! சளுக்கர்களை முறியடித்து உலகம் காணாத மகத்தான வெற்றியுடன் மாமல்லர் திரும்பி வந்திருக்கிறார் அல்லவா?''

''சக்கரவர்த்தி திரும்பி வந்து விட்டாரா?'' என்று சிவகாமி கேட்ட போது, அவளுடைய வாழ்க்கையில் கடைசி முறையாகக் கபட வார்த்தையைக் கூறினாள்.

''ஆம் குழந்தாய்! முந்தா நாள் பல்லவ சைனியம் வந்து சேர்ந்தது. சக்கரவர்த்தியும் வந்து விட்டார். எல்லாரும் வடக்குக் கோட்டை வாசலுக்கு அருகில் தண்டு இறங்கியிருக்கிறார்களாம். பட்டணப் பிரவேசத்துக்கு நாளைய தினம் நல்ல நாள் குறிப்பிட்டிருக்கிறார்களாம்.... ஒரு விஷயம் கேட்டாயா, சிவகாமி! எனக்கு வயதாகி விட்டதோடு, அறிவும் தளர்ந்து வருகிறது என்று தோன்றுகிறது. இல்லாத பிரமைகள் எல்லாம் ஏற்படுகின்றன. இன்று காலை ஏதோ குதிரை வரும் சப்தம் கேட்டது போலிருந்தது. சக்கரவர்த்திதான் அந்த நாளிலே வந்ததைப் போல் இந்த ஏழைச் சிற்பியின் வீட்டைத் தேடி வருகிறாரோ என்று நினைத்தேன். வாசலில் வந்து பார்த்தால் ஒருவரையும் காணவில்லை.''

சிவகாமியின் கண்க ளில் கண்ணீர் துளிர்த்தது. சக்கரவர்த்தி வந்தது உண்மைதான் என்பதைச் சொல்லலாமா என்று நினைத்தாள். அதற்குத் தைரியம் வரவில்லை.

சிவகாமி கண்களில் கண்ணீரைப் பார்த்த ஆயனர் சற்று நேரம் வேறு எங்கேயோ பார்த்துக் கொண்டு மௌனமாயிருந்தார். பிறகு சிவகாமியை நோக்கி கனிவு மிகுந்த குரலில், "அம்மா, குழந்தாய்! உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும் என்றிருக்கிறேன்" என்றார்.

"என்ன அப்பா, அது? சொல்லுங்களேன்!" என்றாள் சிவகாமி.

"உலகத்திலே உள்ள எல்லாப் பெண்களையும் போல நீயும் யாராவது ஒரு நல்ல கணவனை மணந்து கொண்டு சந்தான பாக்கியத்தை அடைய வேண்டும். குழந்தாய்! இந்த வயதான காலத்தில் இத்தனை நாள் இல்லாத ஆசை எனக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. பேரன் பேத்திகளோடு கொஞ்சி விளையாட வேண்டுமென்று விருப்பமாயிருக்கிறது..."

"அப்பா! நான் ஒருத்தி பெண் பிறந்து உங்கள் எல்லோருக்கும் கொடுத்த துன்பம் போதாதா, இன்னும் வேறு வேணுமா?" என்று நெஞ்சைப் பிளக்கும் குரலில் சிவகாமி கூறினாள்.



* ஆயனர்

"சிவகாமி, இதென்ன வார்த்தை? நீ யாருக்கு என்ன துன்பம் செய்தாய், அம்மா?" என்றார் ஆயனர்.

"தங்களுடைய கால் ஊனமடைவதற்கு நான் காரணமாயிருந்தேன். கமலி அக்கா கணவனை இழப்பதற்குக் காரணமானேன்...."

"விதியின் விளைவுக்கு நீ என்ன செய்வாய், சிவகாமி! கண்ணபிரான் தலையில் அவ்விதம் எழுதியிருந்தது. அவன் அகால மரணம் அடைந்தாலும், அவனுடைய குலம் விளங்குவதற்குச் சின்னக் கண்ணன் இருக்கிறான். என்னுடைய குலமும் அந்த மாதிரி விளங்க வேண்டாமா? உன்னைத் தவிர எனக்கு வேறு யார்?"

"அப்பா! இராஜ குலத்தில் பிறந்தவர்கள் தங்களுக்குப் பிறகு சிம்மாசனம் ஏறவும் அரசாட்சி செய்யவும் சந்ததி வேண்டுமென்று கவலைப்பட வேண்டும். நம்மைப் போன்ற ஏழை எளியவர்களுக்குச் சந்ததியைப் பற்றி என்ன கவலை?" என்றாள் சிவகாமி.

(தொடரும்)

# மேதைகளும்

ஒரு சோம்பலான ஞாயிற்று கிழமை. பொழுது போகாமல், அந்த வாரப் பத்திரிகையைப் பிரித்த அரவிந்தனுக்கு, ஆச்சரியம்! குழந்தைக் கலைஞர்களைப் பற்றிப் போட்டிருந்தார்கள். பேட்டி காணப்பட்ட அந்தப் பிறவி மேதைகளின் மேதமைக்கும், அவர்கள் பெற்றோர்களின் 'ஹாபி'க்கும் சரி... தொழிலுக்கும் சரி... துளிக்கூட சம்பந்தமில்லை! அப்படியானால் ......

சங்கீத ஞானம் இல்லாத பரம்பரையில் வந்த அரவிந்தன் என்ற 'பாங்க் கிளார்க்'கின் செல்ல குட்டி மூன்றாவது வயதிலேயே ராகம் பாட ஆரம்பித்து விடுவாளோ?

அந்த நினைப்பே பரவசப்படுத்தியது அவனை!

'வாவ்...' என்ற சந்தோஷத்துடன் ''ஆனந்தி!'' என்று அலறினான். அவனுக்குக் கோபம் வந்தாலும் தாங்காது. சந்தோஷம் வந்தாலும் தாங்காது.

''என்ன?'' என்று சமையல் உள்ளிலிருந்து வந்தாள் ஆனந்தி. உற்சாகத்துடன் அவன் சொன்னதை இடைமறித்து, ''போறுமே! உங்க பொண்ணு 'லயா' பாடற பாட்டை, நீங்களும், நானும் தான் கேட்கணும்'' என்று 'லயா'வில் ஒரு அழுத்தம் கொடுத்து உள்ளே சென்று விட்டாள்.

வாஸ்தவத்தில் 'லயா' என்ற பெயர் அவளுக்குப் பிடிக்கவே இல்லை. ஆசையா 'நியூமராலஜிஸ்'டிடம் கேட்டு 'வர்ஷா' என்று பெயர் வைக்கலாம் என்று நினைத்தவளை ஒரேடியாக அடக்கி விட்டான், அரவிந்தன். ''வர்ஷா ஹர்ஷான்னு நர்ஸரி ரைம் மாதிரி பேரா....!''

''வேண்டாங்க... 'ஜெய லக்ஷ்மி'ன்னு பேர் வைச்சு 'ஜெயா'ன்னு கூப்பிடலாங்க. இந்த 'லயா'ங்கற பேர் வேண்டாம். என்னவோ போல இருக்கு'' என்றவளை,

''உனக்கு என்ன தெரியும்? எங்க 'சீனியர் மேனேஜரோட பொண்ணு பேரு லயா. 'லயா'ன்னா என்னன்னு நினைச்சே? பூமா தேவின்னு அர்த்தம். லயாங்கிறது 'ப்யூர்', 'சான்ஸ்க்ரிட்' நேம்'' என்றான் பூரிப்புடன்.

'போய்யா, நீயுமாச்சு, உன் பேருமாச்சு' என்று அப்போது விட்டு விட்டாலும், ஆனந்திக்கு அந்தப் பெயர் பிடிக்கவே இல்லை.

கற்பனைக் குதிரையைத் தட்டி விட்டான், அரவிந்தன். அந்த அலங்கார மேடையில், விஸ்தாரமாக ஒரு ராகத்தைப் பாடியபடி அவன் பெண். சென்னையில் பிரபல சங்கீத சபா ஏற்பாடு செய்த அந்த நிகழ்ச்சியில், ஜாம்பவான்களெல்லாம் அதிசயிக்க, அவளைப் பேட்டி கண்டார்கள் பத்திரிகை நிருபர்கள்.

''உங்கள் பெயர்?''

சொன்னாள்.

''செய்யும் தொழில்?''

சொன்னாள்.

'''லயா' என்பது முன்கூட்டியே தீர்மானம் செய்த பெயரா?'' என்று கேட்டதற்கு 'லயா'வின் பெயர்க் காரணம் சொன்னாள்.

''லயாவுக்குத் தங்கை பாப்பா உண்டா?'' என்று குறும்புடன் கேட்ட ஒரு நிருபருக்கு,

''பிறக்கப் போகிறது. 'ஸ்ருதி' என்று பெயர் வைக்கப் போகிறோம். அந்தக் குழந்தைக்கும், நன்கு பயிற்சி கொடுத்து, ஸ்ருதி, லயா இருவரும் சங்கீத உலகின் கண்கள் என்று சங்கீத விமரிசகர்கள் கூறப் போகி





றார்கள். அதுவே சங்கீத தேவதைக்கு, ஏழை, என்னால் முடிந்த சிறு காணிக்கை'' என்று உணர்ச்சிவசப்பட்டு பேட்டி கொடுத்த அவன் வயிற்றில் 'லொட்'டென்று காலைத் தூக்கிப் போட்டாள் லயா!

வேறொரு சமயமாயிருந்தால், அந்தக் காலை வேகமாக வீசி எறிந்திருப்பான். ''செல்லக் குட்டி, லயா குட்டி'' என்று கொஞ்சிக் கொண்டு, நச்சு நச்சென்று முத்தங்களை வாரி, வாரி வழங்கினான், இப்போது..

''ஊ....ம்'' என்று செல்ல சிணுங்கலோடு, குப்புறப் படுத்துக் கொண்டது, லயா!

அடுத்து வந்த நாட்கள், லயாவுக்குப் போதாத காலம் என்றுதான் சொல்ல வேண்டும்.

'குழந்தை வளர்ப்புக் கலை' புத்தகங்களை வாங்கிப் படிக்க ஆரம்பித்தான், அரவிந்தன். அதிசயமாகப் பார்த்த ஆனந்தியை அதட்டி, 'டயட் டைம் டேபிள்' போட்டு, குழந்தைக்கு வேளா வேளைக்கு இன்னின்ன ஆகாரம் கொடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தினான்.

'சங்கீத பால பாட' 'கேசட்டுகளை' வாங்கி, குழந்தை வீறிட்டு அழும் வரை 'டேப்' போட்டான். ''அப்பா ப்ளீஸ் போரடிக்குதப்பா'' என்று கெஞ்சிய குழந்தை முதுகில் நாலு போடும் போட்டான்!

இளமையான மியூசிக் டீச்சரிடம் குழந்தை சலுகை எடுத்துக் கொண்டு விடும் என்று பயந்து, பல்லு போன கிழவர் ஒருத்தரைப் பாட்டு வாத்யாராக நியமித்தான்.

# தரன்

வாத்தியாரைப் பார்த்ததும், பாட்டு வரவில்லை, லயாவிற்கு. பயம்தான் வந்தது.

''குழந்தையைச் சிரமப்படுத்தாதீர்கள், சார்'' என்று வாய்வரை வந்த வார்த்தைகளை ரொம்பவும் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டார், அந்த முதியவர். எவன், அவருக்குச் சுளையாக மாதம் நூற்றைம்பது ரூபாய் தரப் போகிறான்?

ஆயிற்று இன்றுடன், சரளி வரிசை 'ஓவர்'. பிறகு ஜண்டை வரிசை. அதற்குப் பிறகு அலங்காரம்... அப்புறம் கீதம்... அலங்கார மேடை.... பத்திரிகை நிருபர்கள்.

சந்தோஷத்துடன் ஆபிசிலிருந்து வந்தவனுக்கு அதிர்ச்சி காத்துக் கொண்டிருந்தது.

'ராக்கம்மா கையைத் தட்டு' என்று ஒரு வாண்டு கீச்சுக் குரலில் பாட, 'பாட்டு க்ளாஸ்' என்றாலே வேப்பங்காயாய் நினைக்கும், லயா, இடுப்பை அசைத்து, உடம்பைக் குலுக்கி டான்ஸ் ஆட, சுற்றி நின்ற குழந்தைகள் கும்மி அடித்துக் கும்மாளம் போட...

தன் முயற்சிகள் அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராகப் போன நிலையில்....

ஆத்திரத்தில் கையை ஓங்கிய அரவிந்தன், ஒரு நொடி யோசித்தான்.

ஒரு நொடிதான்....

'விளக்கு உள்ளுக்குள் சுயமாக எரிய வேண்டும். அது சுடர் விட்டு எரியத்தான் தூண்டல் வேண்டும், என்பது அவனுக்கு அப்பொழுதுதான் புரிந்தது.

# பேதைகளும்






## 12

''எலேய்!''

புறப்படுகிற நேரம் சிவாஜி கணேசன் அழைக்கிறார்.

''ஒழுங்காயிருக்கணும். தெரிஞ்சுதா?''

ஒற்றை விரல் உயர்ந்திருக்கிற சரித்திரப் பிரசித்தி பெற்ற அந்த புகைப்படம் பெரிய தாக்கப்பட்டு, தங்க நிறத்தில் சட்டம் போட்டு வரவேற்பறையில் நுழைந்ததுமே கம்பீரமாய் மாட்டப்பட்டிருக்கிறது.

லக்ஷ்மிநாராயணன் நான்கடி பின்னால் நகர்ந்து புகைப்படத்தை ரசித்துக் கொண்டிருக்கிறான். வரவேற்பறையில் மாமனார் நுழைந்து அவன் அருகில் நிற்கிறார்.

''என்ன?''

''நல்லபடியா சீமந்தம் முடிஞ்சு சாயங்காலம் டில்லி கிளம்பறோம். நீங்க நேரா ஸ்டேஷனுக்கு வர்றேளா?''

''இல்லை.''

லக்ஷ்மிநாராயணன் தலையை ஆட்டுகிறான். மாலையில் நாடக ஒத்திகை இருக்கிறது. ஏற்கெனவே நிறைய ஒத்திகைகள் விட்டுப் போய் விட்டன. நிலமை இப்படியே தொடர்ந்தால் அகில இந்திய நாடகப் போட்டிக்கு அவன் கல்கத்தா போவதே பெரிய கேள்விக்குறியாகி விடும். எனவே அவர்கள் அவனை எதிர்பார்க்க வேண்டாம். ஸ்டேஷனுக்கு அவன் வருவதற்கில்லை.

சமையலறையில் யாருமில்லாத சொற்ப நேரத்தில் நுழைந்து லக்ஷ்மிநாராயணன் அவன் வழக்கப்படி விஜயலக்ஷ்மியிடம் விடை பெற்று வாயிற்படியில் சைக்கிள் தடதடத்து இறங்கி அலுவலகம் புறப்பட்டுப் போகிறான்.

''என்ன மாப்பிள்ளையோ போ! அமெரிக்காவிலே அவனவன் பிரசவ நேரத்துல டாக்டர் கிட்டே பர்மிஷன் வாங்கி ஒரு ஆறுதலுக்குப் பெண்டாட்டி கூடவேயிருக்கணும்னு இருக்காங்க. நமக்கு வாய்ச்சது எல்லாமே தனி தினுசாத்தான் இருக்கு. பாய்ஸ் கம்பெனிலேர்ந்து தப்பிச்சு வந்த பையன் மாதிரி ரிஹர்சலாம் ரிஹர்சல். ஊருக்குப் போறியேன்னு ஸ்டேஷனுக்கு வரத் தோணலை உன் வீட்டுக்காரனுக்கு!''

''இன்னும் கொஞ்சம் ரசம்?''

எதிரே விஜயலக்ஷ்மி சிரித்துக் கொண்டே கேட்கிறாள். மாமனாருக்கு அடிவயிற்றிலிருந்து பற்றிக் கொண்டு வருகிறது.

பவகல் பார்க் வெங்கடேசா கல்யாண மண்டபம். அடுத்த வாரம் கல்கத்தா போகிற ஜூரியில் ஒத்திகை நடக்கிறது. கப்ர பாதம், டெலிபோன் பெல், சவமேளம்,



# பாப்கார்ன் கனவுகள்

ம.வே.சிவகுமார்

விமானம் இறங்குவது, கார் கதவு மூடுவது, பாரதப் பிரதமர் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் ஒரு பகுதி என்று கலவையான பதிவுகள் கொண்ட டேப் ரெக்கார்டர். ஒவ்வொரு தடவையும் சில பல நொடிகள் தாமதித்தே லக்ஷ்மிநாராயணன் ஒலிகளை எழுப்ப, ஒரு வழியாய் ஒத்திகை முடிகிறது.

''மாமா!''

ராஜாமணி திரும்புகிறான். லக்ஷ்மிநாராயணன் கொடுக்கிற பாக்கு பொட்டலங்களை இடது கையில் வாங்கி பத்திரப்படுத்துகிறான்.

''என்ன விஷயம்?''

''ஒரு மணி நேரம் வெளியிலே வேலை இருக்கு. படு அர்ஜண்ட் விஷயம். விவரம் வந்து சொல்றேன். கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கணும்.''

''லக்ஷ்மி!''

குரல் கேட்டு லக்ஷ்மிநாராயணன் திரும்புகிறான்.

''வ ரு ம் போது ரெண்டு பாக்கெட்....''

ராஜாமணியின் கையில் பாக்கு பொட்டலம் ஆடுகிறது.

**கு**தாபாத்திரம் சென்னை வந்ததும் காட்டப்படுகிற சென்ட்ரல் ஸ்டேஷன். ஆட்டோவில் இறங்கியதும் படியேறி லக்ஷ்மிநாராயணன் ஓடுகிறான். புது டில்லி போகிற கிராண்ட் ட்ரங்க் எக்ஸ்பிரஸ் இன்னும் சில நிமிடங்களில் முதல் பிளாட்பாரத்திலிருந்து புறப்பட இருக்கிறது. லக்ஷ்மிநாராயணன் எதிரே ஆட்களை இடித்தபடி ஓடுகிறான். விஜயலக்ஷ்மி. விஜயலக்ஷ்மி. விஜயலக்ஷ்மி! சார்ட் பேப்பரில் பெயர் தேடுகிறான். கடவுளே. இன்னும் ஐந்தே நிமிடங்கள். லக்ஷ்மிநாராயணன் வேகமாய் வந்த டிராலி இடித்து விழுந்து, எழுந்து ஓடுகிறான்.

''மாப்பிள்ளை சார்!''

எதேச்சையாய் வெளியே பார்த்து மாமனார் கை தட்டுகிறார். வாழ்நாளில் ஒரு போதும் அவர் குரல் இவ்வளவு இனிமையாய் ஒலித்ததில்லை. லக்ஷ்மிநாராயணன் திரும்புகிறான். விஜயலக்ஷ்மி. சிரித்து சிரித்து என்னைச் சிறையிலிட்டாய். உன்னைப் பார்க்காமல் எப்படி இருக்கப் போகிறேன்? ஜன்னலில் லக்ஷ்மிநாராயணன் விரல்களில் பேசுகிறான். விஜயலக்ஷ்மி பூரித்த முகத்தில் தகப்பனைப் பார்க்கிறாள். காலையில் ரசம் பரிமாறும் போது அவர் கேட்ட கேள்விக்கு அவள் பார்வையில் பதில் இருக்கிறது. பச்சை விளக்கு எரிந்து, நகர்வது தெரியாமல் வண்டி நகர்கிறது. மூச்சிரைக்க அதன் கூடவே நகர்ந்து பிளாட்பார விளிம்பில் லக்ஷ்மிநாராயணன் நிற்கிறான். அவன் தெரிகிறதாக நினைக்கிற வரைக்கும் விஜயலக்ஷ்மியும் பதிலுக்குக் கையை ஆட்டிக் கொண்டிருக்கிறாள்.

கல்யாண மண்டபத்தின் முன் சொன்னபடி ஒரு மணி நேரத்துக்குள் லக்ஷ்மிநாராயணன் இறங்கிய போது, உள்ளே முன்னதாக ஒத்திகை நடந்து கொண்டிருந்த சுவடே இல்லை. நோக்கும் திசைகளில் யாரையுமே காணவில்லை. அனைவரும் போய் விட்டதாக மண்டபத்துச் சாவிகள் சுமந்து கூன் விழுந்த வாட்ச்மேன் கூறுகிறான். பெட்டிக் கடையில் சோடாவில் கொப்பளித்து ராஜாமணி திரும்புகிறான். கல்கத்தா நாடகப் போட்டியின் தேதி இரண்டு மாதங்கள் தள்ளிப் போய் விட்டது.

''ரெண்டு மாசமா?''

லக்ஷ்மிநாராயணன் வாய் பிளக்கிறான்.

''அதனாலென்ன? நிமிஷமாய் ஓடிப் போயிடும்.''

**யா**ருக்கும் நிற்காத காலம் ராஜாமணி சொன்னது போலவே நிமிஷமாய் ஓடுகிறது. லக்ஷ்மிநாராயணன் டில்லியிலிருந்து வந்த தந்தியில் ஒரு ஆண் குழந்தைக்குத் தகப்பனாகிறான். தாய், சேய் நலம். எந்த நேரத்திலும் ஒத்திகை மீண்டும் துவங்கப் படலாம் என்ற நிலையில் உடனடியாய்

டில்லிக்கும் புறப்பட முடிவதில்லை. கடைசியில் பத்து நாட்கள் மட்டும் ஒத்திகை நடந்து இரண்டு மாதம் முடிகிறது. சென்ட்ரல் ஸ்டேஷன். நாடகக் குழுவினர் தோளில் ஏர்பேக் மாட்டி கல்கத்தா புறப்படுகிறார்கள்.

சீட்டுக்கட்டு, குவார்ட்டர் பாட்டில் என்று அவரவர் முன்யோசனையும் பையிலிருந்து வெளிப்படுகிறது. பலவித பட்சணங்கள் மாமா ராஜாமணியின் வீட்டிலிருந்து வந்திருக்கின்றன. காரமாய் கடிப்பதற்கும் விஷயங்கள் இருக்கின்றன. உற்சாகத்தில் குழுவினர் ராஜாமணியை வாழ்த்தியெழுப்புகிற கோஷங்களுக்கிடையே வெளியே பிளாட்பாரம் நகர்கிறது.

அன்றாட அலுவலக அயர்ச்சிகளிலிருந்து விடுதலை. இனி பதினைந்து நாட்களுக்குக் கல்கத்தா நாடகப் போட்டி. ஜன்னலுக்கு வெளியே உலகத்தைக் காட்டி வண்டி நிதானமாய்ப் போகிறது. எத்தனையோ நாட்களாய்ப் பார்த்திராத வானம் கண்ணில் படுகிறது. மரங்களில் பச்சை நகர்கிறது. தடங் தடங் என்று பாலம் வருகிறது. கீழே படகில் மீனவன் வலைவீசுகிறான். மழை பெய்து தேங்கிய தண்ணீர். பாதியில் இறங்கி நீரைத் தொட்டுப் பறக்கும் பறவை. கூடவே வானத்தில் தொடரும் அந்தியில் சிவந்த சூரியன். உலகம் எப்போதும் அழகாய்த்தான் இருக்கிறது. பழகி விட்ட பெண்டாட்டி போல், அதைக் கவனித்துப் பார்ப்பதற்குத்தான் யாருக்கும் நேரம் இருக்கிறதில்லை.

கல்கத்தா ஸ்டேஷன். பிளாட்பாரத்தில் வண்டி நுழைகிற போதே பெங்காலி இளைஞர்கள் சென்னைக் குழுவினரை வரவேற்று பேனர் பிடித்து நிற்கிறார்கள். கல்கத்தா. இந்திய கலாசார தலைநகரம். தாகூரின் வெள்ளைத் தாடி. ராமகிருஷ்ண பரமஹம்சர். ராணுவ வீரர் சுபாஷ் சந்திரர். கன்னத்தில் விரல் வைத்த சத்யஜித் ரே. ஏகப்பட்ட எதிர்பார்ப்பில் சென்னைக் குழுவினர் வெளியே வருகிறார்கள்.

முதல் பார்வையில் நகரத்தின் பழைமை தாக்குகிறது. புழுதியில் சிவந்த பிரிட்டிஷ் காலத்துக் கட்டடங்கள். வீச்சமடிக்கிற குதிரைப் புழுக்கை நெடி. ஸ்டேஷனுக்கு எதிரே மறைவில் கள்ளச் சாராயம். தொப்பியில் மட்டும் வேறுபட்டு போலீஸ்காரர் மாமூல் வாங்கிப் போகிறார். அருகில் நாடகக் குழுவினர் வேனுக்குக் காத்திருக்கிறார்கள். பாவம் பெங்காலி இளைஞர்கள். இன்னொரு வேன் ஹௌரா பாலத்துப் போக்குவரத்து நெருக்கடியில் மாட்டிக் கொண்டு விட்டது. ஜெய்ப்பூர் குழுவினர் வருகிறார்கள். அவர்களையும் அடைத்துக் கொண்டு வேன்கள் நகருக்கு வெளியே புதியதாய்க் கட்டிய பெரிய ஃபுட்பால் ஸ்டேடியத்தின் முன் நிற்கிறது. அதன் கீழே கட்டப்பட்ட அறைகளில் அனைவரும் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஷாமியானா பந்தல் போட்டு டீ கொடுக்கிறார்கள். முதல் நாள் உணவில் அரிசியில்லை. சமையலில் கடுகெண்ணெய் நாற்றம். போட்டியாளர்களை வயிற்றிலடித்துப் பரிசு பெற வேண்டும் என்று முடிவு செய்தவர்கள் போல் சிரித்த பெங்காலி முகத்தில் பணிவு காட்டி, மீண்டும் அதே கடுகெண்ணெய்! அரிசிச் சோறு இல்லாமல் குழுவினர் மெலியத் தொடங்கிய இரண்டாம் நாள், அகில இந்திய நாடகப் போட்டி துவங்குகிறது.

இரவு ஒன்பது மணிக்கு முதல் நாடகம். பூனே குழுவினரின் ''மந்திரி வருகிறார்''. நகைச்சுவை மிளிர்ந்த அரசியல் அங்கதம். தயாரிப்பு ரீதியில் அசத்தி விடுகிறார்கள். மேடையில் ஹெலிகாப்டர் இறங்கிய போது சென்னைக் குழுவினர் ஆடிப் போய் விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அடுத்து லக்னௌ குழுவினரின் ''ஒரு பிடி சோறு''. கடுகாட்டு வெட்டியான் ஒருவனின் கதை. யதார்த்தமான ஒளியமைப்பு. மனத்தை நெருடிய பின்னணி இசை. நல்ல ஆழமான கதை. நெஞ்சை உலுக்குகிற முடிவு. நள்ளிரவில் மூன்றாவது நாடகம். ஜெய்ப்பூர் அணியினரின் ''ஸாரே ஜஹான் சே அச்சா''. அசைவுகளில் பிரமிப்பூட்டிய நாட்டிய நாடகம். முஹிந்திரா வேனில் ஃபுட் பால் ஸ்டேடியம் திரும்புகிற வழியில் சென்னைக் குழுவினர் வாயடைத்து இருக்கிறார்கள்.

''பேசாம ஹேமநாத பாகவதர் மாதிரி ராவோட ராவா மெட்ராஸ் போயிடலாமா?''

''மடையா!''

திட்டி விட்டு லக்ஷ்மிநாராயணன் தொடர்கிறான்.

''தமிழன் தோக்கலாமாடா? இன்னும் ஆறு நாள் டைம் இருக்கு. அதுக்கு அடுத்த நாள் கடைசி டிராமாதான் நம்மளுது. அது வரைக்கும் விடாம ரிகர்சல் பண்ணி நாமளும் அசத்திடுவோம்.''

நாடகப் போட்டியின் கடைசி நாள். சென்னைக் குழுவினர் கல்கத்தா ஆஸ்பத்திரி முன் நிற்கிறார்கள். தமிழ் நாடகத்தில் முக்கிய வேடத்திற்குத் தயார் செய்யப்பட்டிருக்கிற சாமிதுரை கடுகெண்ணெயில் உடல் நலம் கெட்டு உள்ளே 'ட்ரிப்'பில் இருக்கிறான். இன்று இரவு கடைசி நாடகம். குழுவினர் கலக்கமுற்று நிற்கிறார்கள். இப்போது சாமிதுரை வேடத்திற்கு

அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?

''மாமா!''

ராஜாமணி திரும்புகிறான். லக்ஷ்மிநாராயணன். கையில் இரண்டு பாக்கு பாக்கெட்டுகள்.

''என்ன?''

''சாமிதுரை ரோல்ல நான் நடிக்கிறேனே. எனக்கு எல்லார் வசனமும் மனப்பாடம்.''

''டேப் ரெக்கார்டர்?''

''அதுவும் நானே பாத்துக்கறேன்.''

''சரி.''

வேறு வழி புலப்படாத நிலையில் ராஜாமணியின் தலை அரை மனத்தில் அசைகிறது.

இரவு ஒன்பது மணி. பொது மக்கள் ஆவலோடு எதிர்பார்த்த கல்கத்தா நாடகம். அடுத்தது அகமதாபாத். கடைசியில் சென்னைக் குழுவினரின் ''இவர்களும் இந்தியரே''. அதுவரை போட்டிக்காக நடந்த நாடகங்களில் அதிக கைத்தட்டலை சென்னை நாடகமே பெறுகிறது. மொட்டை மாடியில் ரஸகுல்லா உள்பட்ட நள்ளிரவு விருந்து. பரிசளிக்க வங்கியின் சேர்மன் வந்திருக்கிறார். நீதிபதிகள் தங்களுக்குள் கலந்தாலோசித்து முடிவுகளைத் தீர்மானிக்கிறார்கள். அவர்களில் மூத்தவரும், முக்கியஸ்தருமான சேட்டர்ஜி மைக்கருகில் போகிறார்.

சென்னை சென்ட்ரல் ஸ்டேஷன். டாக்ஸிக்காரனிடம் சண்டை போட்டு மாமனார் ஏறிக் கொள்கிறார். புதுடில்லியில் ரிடையராகி விட்டார். வீட்டுச் சொந்தக்கார நவகோடி அம்மாளிடம் சொல்லி வைத்து வாடகைக்கு எதிர் வீட்டைப் பிடித்தாயிற்று. மாப்பிள்ளை லக்ஷ்மிநாராயணன். அவனை ஆபிஸ் பரீட்சை எழுத வைத்துப் பெரிய ஆபிசராய் ஆக்கிக் காட்டுவதே அவரது எதிர்காலத் திட்டமாய் இருக்கும். அவன் உள்ளூரில் தோற்கிறவன். அகில இந்தியப் போட்டியில் அவன் என்ன செய்து விடப் போகிறான்?

செம்மண் மேடு ஏறி டாக்ஸி நிற்கிறது. வழக்கம் போல் நவகோடி அம்மாள் ஆரத்தி கரைத்து வர ஓடுகிறாள். கையில் குழந்தையுடன் விஜயலக்ஷ்மியின் சிவந்த பாதங்கள் தரையைத் தொடுகின்றன. செம்மண் மேடு ஏறி ஆட்டோ ஒன்று திரும்பி நிற்கிறது. அகில இந்திய நாடகப் போட்டியில் தன் நடிப்புக்காக முதல் பரிசு பெற்ற மாப்பிள்ளை லக்ஷ்மிநாராயணன் கையில் வெள்ளிக் கோப்பையுடன் இறங்குகிறான்.

(இடைவேளை)


**பொன்மலர்**

ஜனவரி 1993

★ காந்தர்வ வேதம்
- காஞ்சி பரமாசார்ய சுவாமிகள்

★ பொங்கல் பண்டிகை
- ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

★ காரைக்காலம்மையார் பற்றிய தொடர்
- பாலகுமாரன்

★ ஆன்மிகச் சிறுகதை
- ஸ்ரீ வேணுகோபாலன்

**கணையாழி**

ஜனவரி 1993
பொங்கல் சிறப்பிதழ்

★ இந்திரா பார்த்தசாரதி : நானும் என் எழுத்தும்

★ ஷண்முக சுப்பையா : இலக்கியச் சுற்றுலா

★ என்.எஸ்.ஜெ : அயோத்தி - அசம்பாவிதமும் அதிதீவிரமும்

★ சுஜாதா : பி.பி.ஸி.யில் விடுதலைப்புலிகள்

★ எம்.வி.வி. - சந்திப்பு

இவ்விரு இதழ்களும் கல்கி ஏஜெண்டுகளிடம் கிடைக்கும்



# “மாப்பிள்ளை பற்றி விசாரிக்கப்போகு...”

கமலா கந்தசாமி

பிடித்திருந்தது. எல்லாமே பிடித்திருந்தது. மைதிலி அழகாய் இருந்தாள். அம்சமாய்த் தெரிந்தாள். தனியார் கம்பெனியில் வேலைக்குப் போகிறாள்.

''அப்புறம்... நீ என்னப்பா சொல்றே? பெண் பிடிச்சிருக்கு இல்லே?''

மகனைப் பார்த்து ராமநாதன் கேட்க...

''உங்களுக்குப் பிடிச்சிருந்தா சரிதான்'' வைத்த கண்ணை எடுக்காது பார்வையில் மைதிலியை விழுங்கிக் கொண்டிருந்த சிவராமன் அடக்கமாய்க் கூறினான்.

அந்தப் பதிலில் ஒரு புதிய பெருமிதம் வந்தது போல் நிமிர்ந்து உட்கார்ந்தார் ராமநாதன்.

''சரிம்மா.. உள்ளே போய் உட்காரு'' சிவராமனின் அப்பா குரலில் கலந்த கனிவு மைதிலிக்கு இதமாய் இருந்தது.

''எங்களுக்கு இன்னும் இரண்டு பொண்ணு இருக்கு. எங்களால அதிகம் செய்ய முடியாது...''

மைதிலியின் அப்பா குரலில் கண்டிப்பு தெரிந்தது.

''அதனால் என்னங்க? எங்களுக்குப் பொண்ணை ரொம்பப் பிடிக்கப் போச்சு. பொண்ணு வேலைக்குப் போறா. ரெண்டு பேர் சம்பளத்துல அவங்க எதிர்காலம் நல்லா இருக்கும்.''

''எங்களுக்குப் பவுன் முக்கியமில்ல. நல்ல இடம்தாங்க முக்கியம்.'' - கணவனை வழிமொழிந்தாள் பார்வதி.

'இந்தக் காலத்தில் இப்படி ஒரு சம்பந்தி அம்மாவா?' ஆச்சரியப்பட்டாள் மைதிலியின் அம்மா செண்பகம்.

''அப்புறம் என்ன நிச்சயதார்த்தத்திற்கு டேட் வச்சிட வேண்டியதுதானே?'' - தரகர் இடையில் குறுக்கிட்டார். தான் பேசிய வரன் முடிந்த சந்தோஷம் அவர் முகத்தில் தெரிந்தது.

''வருகிற ஞாயிற்றுக் கிழமையே நல்ல நாள்தான். அதுல நிச்சயம் பண்ணிடலாம். கார்த்திகையிலே முகூர்த்தம் வச்சிடலாம்'' என்றார் ராமநாதன்.

சிவராமன் குடும்பத்தார் கிளம்பினர்.

வாசல் வரை வந்து வழி அனுப்பினார் ரங்கநாதன். மாப்பிள்ளை வீட்டார் சென்றதும்...

''என்னம்மா மைதிலி. உனக்கு இஷ்டம்தானே?'' மகளைப் பார்த்து ரங்கநாதன் கேட்டார்.

''உங்க இஷ்டம்ப்பா'' என்றாள் மைதிலி.

''நோ. இப்படி பொதுவாச் சொன்னா எப்படி? மனசு விட்டுச் சொல்லும்மா? பையனைப் பிடிச்சிருக்கா?'' மறுபடியும் ரங்கநாதன் கேட்க...

''ரொம்ப நல்ல குடும்பமாய்த் தெரியுது. அதிகம் எதிர்பார்க்கலே. இந்தக் காலத்துல இது போதாதா...'' என்றாள் மைதிலி.

''பையன் அழகா இருக்கான். சம்பந்தியம்மா கூட கர்வம் காட்டாம கனிவா இருக்காங்க...'' என்றாள் செண்பகம்.

**ம**றுநாள்...

அலுவலகம் முடிந்து மைதிலி வீடு திரும்பிய போது ஆச்சரியப்பட்டாள்.

வீடு நிசப்தமாய் இருந்தது.

கூடத்தில் அப்பா சோகமாய் இருந்தார். அவர் கால்மாட்டில் அம்மா.

''என்னப்பா... என்ன விஷயம்?'' மைதிலி பதறிப் போய்க் கேட்க,

''இல்லே மைதிலி. இந்த இடம் வேண்டாம்.''

ரங்கநாதன் குரலில் சோகம் கலந்த கசப்பு இருந்தது.

''ஒண்ணும் செய்ய வேண்டாம்னு அவங்க அவசரப்பட்ட உடனே உன் மனசில் ஒரு சந்தேகம் இருந்தது...'' - செண்பகம் உடைந்த குரலில் சொன்னாள்.

''என்னப்பா... புரியும்படி சொல்லுங்க...''

ஒரே இரவில் மனத்தில் தங்கிய சிவராமன் பற்றிய நினைவை அழிக்க முடியாமல் மைதிலி கேட்க...

''அந்தப் பையன் நடத்தை சரி இல்லையாம்மா.... அவங்க ஆபீஸ்ல வேலை பார்த்த பெண்ணோட வெளியில் அடிக்கடி சுத்துவானாம். சிகரெட் குடிப்பானாம். சமயத்துல ட்ரிங்க்ஸ் கூட சாப்பிட்டிருக்கானாம்... விசாரித்துப் பார்த்துட்டேன்'' தீர்மானமாய் ஒலித்தது ரங்கநாதனின் குரல்.

''நல்லவேளை. நிச்சயதார்த்தத்திற்கு முன்னரே தெரிந்தது...'' செண்பகம் நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

''செய்தி கேள்விப்பட்டதுமே... போன் பண்ணி, பிறகு பார்க்கலாம். நிச்சயதார்த்தம் இப்போ வேண்டாம்னு சொல்லிட்டேன்.''



''சரிப்பா....'' என்று சுரத்தில்லாமல் தன் அறைக்குள் நுழைந்தாள் மைதிலி.

சிவராமன் முகம் திரும்பத் திரும்ப மனதில் தோன்றியது.

''இவரா இப்படி?'' நம்ப முடியாது கேட்டுக் கொண்டாள்.

''மைதிலி... உனக்கு போன்...''

ஆபீஸில் மானேஜர் கூப்பிட்டதும் 'யாராய் இருக்கும்?' என்ற குழப்பத்துடன் போய் ரிஸீவர் வாங்கி,

''ஹலோ...'' என்றாள்.

''நான் சிவராமன் பேசறேன்.''

மறுமுனையில் இருந்து கேட்டதும் ஸ்தம்பித்தாள்.

''மைதிலி....''

''ம்....''

''நான் உங்க கூட கொஞ்சம் பேசணும்.''

''சொல்லுங்க....''

''போனில் இல்லே. நேரில். ஒரு பத்து நிமிடம். ப்ளீஸ்...''

''..............''

''சாயந்திரம் ஆபீஸ் விடற நேரம் வரட்டுமா?''

கொஞ்சம் தயக்கத்திற்குப் பின், ''சரி'' என்றாள் மைதிலி.

சரியாய் மாலை ஐந்து மணிக்கு மைதிலி வாசலுக்கு வந்ததும் வாசலில் காத்திருந்தான் சிவராமன்.

''குட் ஈவினிங்...'' களங்கமில்லாது சிரித்தான் சிவராமன்.

'இவனா?' நம்ப முடியாது அவன் முகத்தை ஏறிட்டாள் மைதிலி.

''ஒரு காப்பி சாப்பிட்டுக் கொண்டே பேசலாம்.''

''சரி....''

பக்கத்து ரெஸ்டாரெண்ட் மூலையில் அமர்ந்து, ''ரெண்டு காப்பி'' என்றான் சிவராமன்.

பின் மைதிலியை ஏறிட்டான். அவன் விழிகளைச் சந்திக்க முடியாதவளாய்த் தலைகுனிந்தாள் மைதிலி.

''நிச்சயதார்த்தம் வேண்டாம்னு உங்க வீட்ல சொல்லிட்டாங்க'' என்றான் சிவராமன்.

அதற்கு என்ன பதில் சொல்வது என்று புரியாது ''ம்...'' என்றாள் மைதிலி.

''நான் சிகரெட் குடிக்கிறது உண்டு...''

''உடல்நலத்தைப் பாதிக்கும் என்பது தவிர இது ஒன்றும் பெரிய தவறில்லையே...?'' என்றாள் மைதிலி.

''தாங்க்ஸ். இரண்டு மூன்று முறை ப்ரண்ட்ஸ்களோடு கொஞ்சமாய் விஸ்கி சாப்பிட்டிருக்கேன்...''

''இல்லாம இருக்க முடியாதுங்கற அளவுக்கு அடிமை ஆயிட்டா கஷ்டம்.''

பொதுப்படையாய் விமர்சனம் போல மைதிலி சொல்ல...

''மொத்தமே மூன்று தடவைதான். அதுவும் கொஞ்சமா. நிச்சயமா அந்த வாசனை எனக்குப் பிடிக்கல்லே.''

தப்பு செய்த பையன் ஆசிரியரிடம் மன்னிப்புக் கேட்பது போல சிவராமன் சொன்னதும் மைதிலிக்கு மனத்திற்குள் இலேசாய்ச் சிரிப்பு வந்தது.

''அது கூட முக்கியமில்லே. நீங்க... யாரோ ஒரு பெண்ணோட... அப்பாவோட ப்ரண்ட்ஸ் சொல்லியிருக்காங்க. எங்க அப்பா ரொம்ப கண்டிப்பானவர். அது தான்...'' மைதிலி சொன்னதும்,

''எஸ். இப்படி ஏதோ ஒரு தவறான அனுமானத்தில்தான் அவசரமாய் போன் செய்திருக்கணும்னு நெனைச்சேன்.''

சர்வர் காப்பி கொண்டு வந்து வைக்க... ஒரு கப்பைக் கையில் எடுத்துக் கொண்ட சிவராமன், மற்றதை மைதிலி பக்கம் நகர்த்தி வைத்தான். காப்பியை உறிஞ்சிக் கொண்டே பேச ஆரம்பித்தான்.

''எஸ். எங்க ஆபீஸ்ல டைப்பிஸ்ட். ரேவதின்னு பெயர். அழகா இருக்காங்க. நல்ல குணம். நான் அவங்களை நேசித்தேன். அவங்களும் என்னை விரும்பினாங்க...''

''அப்புறம் அவங்களையே கல்யாணம் பண்ணிக்கலாமே?'' மைதிலி அவசரமாய்க் குறுக்கிட்டாள்.

''சொல்றேன்'' என்றபடி மீதமிருந்த காப்பியை உறிஞ்சி விட்டு கோப்பையைக் கீழே வைத்தான்.

''அவங்க வேற ஜாதி. அவர்களுக்கு இன்னும் இரண்டு மூன்று சிஸ்டர்ஸ் இருக்காங்க. ரொம்ப ஆசாரமான குடும்பம். அவங்க அப்பா, அம்மா சம்மதிக்கலை. ரேவதிக்கு வேற இடத்துல கல்யாணம் நிச்சயம் பண்ணிட்டாங்க. அதுக்குப் பிறகுதான் நான் உங்களைப் பார்க்க வந்தேன். நான் செய்தது தவறுன்னா... ஐ ஆம் ஸாரி...''

சர்வர் பில் கொண்டு வந்து வைத்தான். சிவராமன் அதை எடுக்க கைநீட்டினான்.

''இல்லே. என்னைத் தேடி நீங்கதான் வந்தீங்க. நீங்கதான் 'கெஸ்ட்.' பில் பணம் நான்தான் கொடுப்பேன்'' என்றபடி பணத்தைக் கொடுத்து விட்டு எழுந்தாள்.

வாசலுக்கு வந்த போது சிவராமன் தயங்கி நிற்க...

''நிச்சயம் இந்தத் திருமணம் நடக்கும்...''

திடமாய்ச் சொல்லி விட்டு மைதிலி பஸ் ஸ்டாப் நோக்கி நடந்தாள்.



எலிசபெத் டெய்லர் தமது சமையற்காரரை வேலை நீக்கம் செய்து விட்டார். அதற்கு அவர் சொல்லும் காரணம்: "அவர் மிக நன்றாகச் சமைப்பதால், நன்றாகச் சாப்பிட்டு உடல் எடை எக்கச்சக்கமாக அதிகரித்து விட்டது!"

- கிருஷ்ணவேணி ரங்கநாதன்

உங்கள் சின்னஞ்சிறு செல்விக்கு மற்றும் உங்கள் எதிர்கால மருமகனுக்கு இப்போது ஒரு தனிச்சிறப்பான பாதுகாப்புத் திட்டத்தை எல்ஐசி வழங்குகிறது.



# ஜீவன் சுகன்யா

## 20 வயது வரை ப்ரீமியம் செலுத்தி
## 50 வயது வரை இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்பைப் பெறுதல்.

ஒரு வயதிலிருந்து 12 வயது வரையுள்ள பெண் குழந்தைகளுக்கென இந்த தனிச்சிறப்பான இன்ஷ்யூரன்ஸ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி இன்ஷ்யூரன்ஸ் செய்த பெண் தன் 20 வது வயதில் இன்ஷ்யூர் செய்யப்பட்ட முழுத் தொகையைப் பெறுவதோடல்லாமல், தன்னுடைய 50 வது வயது வரை இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்பையும் பெறுகிறாள்.

- திருமணம் செய்து கொண்டதும் கூடுதல் கட்டணமின்றி இந்த பாதுகாப்பு கணவருக்கும் நீடிக்கப்படுகிறது.
- 20 வயது வரையே ப்ரீமியம் தொகை செலுத்த வேண்டும்.
- முழுக்காலவரைக்கு உரித்தான போனஸ் தொகையை அவள் 50 வயதை அடைந்ததும் கொடுக்கப்படும்.

***மேற்கொண்டு விவரங்களுக்கு உங்கள் அருகாமையிலுள்ள எல்ஐசி அலுவலகத்தையோ அல்லது எல்ஐசி முகவரையோ அணுகவும்.***

**இன்ஷ்யூர் செய்யுங்கள் பத்திரமாக இருங்கள்.**

**லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா**

# கனவு காணுங்கள்! ஆனைக்கு நல்லது!

**பி**ச்சை என்பவரின் கனவில் விநாயகர், தோன்றி, அவரது வீட்டில் புதையல் இருப்பதாகக் கூறினார். அந்தக் கனவை நம்பி புதையலுக்காக அவர் வெட்டிய சுரங்கம் அவரது வீட்டு எல்லையையும் கடந்து அடுத்த வீட்டின் கீழ் சுமார் 80 அடி வரை நீண்ட போதிலும் புதையல் கிடைக்கவில்லை. ஆனால், அடுத்த வீட்டுக்காரர் தந்த புகாரின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டு இப்பொழுது சிறையில் இருக்கிறார். இது கதையல்ல - சமீபத்தில் சிவகங்கையில் நடந்த உண்மைச் சம்பவம்!

கனவுகளை நம்புவதற்கில்லை என்பது இதிலிருந்து நிரூபணமாகும். எனினும் கனவுகள் தெய்வீகமானவை என்றும், வரும் பொருள் உரைப்பவை என்றும் சாக்ரடீஸ் கூட நம்பி கூறியிருக்கிறார்! ஆனால் அரிஸ்டாட்டில் மூளை இயக்கத்தின் இயல்பான வெளிப்பாடே கனவுகள் எனச் சரியாகவே குறிப்பிடுகிறார். ''நிறைவேறாத ஆசைகளும், உணர்ச்சிகளுமே கனவுகளில் பிரதிபலிக்கப்படுகின்றன'' எனக் கூறுகிறார் சிக்மண்ட் ஃப்ராய்டு. ஆசைகள் கனவுகளாக வடிவெடுக்க, அக்கனவுகளே வாழ்வின் மெய்யான நிகழ்ச்சியாக மாறிய அற்புதங்களும், பலிக்காமல் போய் ஏமாற்றமளித்த அனுபவங்களும் நிறைய உண்டு.

**தூ**க்கம் என்பது ஐந்து நிலைகளைக் கொண்டது. முதல் நான்கு நிலைகளை



'நான்-ரெம்' தூக்கம் (Non-REM sleep) என்றும், ஐந்தாம் நிலையை 'ரெம்' தூக்கம் (REM sleep) என்றும் அழைப்பர். தூக்கம், ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என ஒவ்வொரு நிலையாக நான்கு நிலைகளைக் கடந்த பின்னர், மறுபடியும் இவைகளைத் தலைகீழ் வரிசையாகக் கடந்து செல்கின்றது. அதன் பின் 'ரெம்' தூக்கம் எனும் ஐந்தாம் நிலை வருகின்றது. இந்நிலையில் கண்கள் வேகமாக அசைகின்றன; கனவுகளும் தோன்றுகின்றன. எட்டு மணி நேரம் தூங்கும் ஆரோக்கியமான நபர் சுமார் இரண்டு மணி நேரத்தை 'ரெம்' தூக்கத்திலும், மீதி நேரத்தை 'நான்-ரெம்' தூக்கத்திலும் செலவிடுகிறார்.

தூக்கமில்லாமல் இருப்பது எப்படிச் சாத்தியமில்லையோ அதுபோல கனவு காணாமல் இருப்பதும் சாத்தியமில்லை. கைக் குழந்தைகளும், ஏன், தாயின் வயிற்றுக்குள் வளரும் குழந்தைகளும் கூடக் கனவு காண்பதாகச் சொல்கிறார்கள். ஒரு மனிதனின் சராசரி ஆயுள் 70 ஆண்டுகள் எனில், அதில் சுமார் 7 ஆண்டுகள் அவன் கனவுலகில் சஞ்சரிக்கிறான்!

கனவுகள் ஒரு சில நிமிடங்கள் முதல் ஒரு மணி நேரம் வரை நீடிக்கலாம். ஒரே இரவில் ஒருவர் சுமார் ஆறு கனவுகள் வரை காண முடியும் - சமீபத்திய கனவாராய்ச்சியில், கனவுகள் தொடர்ந்து நிகழ்வதையும், 'ரெம்' கனவுகள் விழித்தெழுந்த பிறகு நன்றாக ஞாபகமிருப்பதையும் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

**க**னவுகள் பகுத்தறிவற்றவை, சிக்கலானவை. அவற்றுக்குக் குறிப்பிட்ட அர்த்தங்கள் ஏதும் கிடையாது. கனவுகள் கருப்பு-வெள்ளை நிறத்தில்தான் அமைகின்றன; வண்ணக் கனவுகள் தோன்றுவது கிடையாது. 'பல நிறங்களுடன் கூடிய கனவுகளைக் கண்டேன்' என்று ஒருவர் கூறுவது உண்மையில் பிரமையினால்தான்! ஒரு சிலர் தூக்கத்தில் எழுந்து கொஞ்ச தூரம் நடப்பதைப் பார்க்கிறோம். இது ஒரு விதமான கனவு நிலையே. தூக்கத்தில் நடப்பதற்கும், நடப்பவர் அந்தக் கனவில்




கே. விஸ்வநாதன்



காண்கின்ற கனவுக்கும் தொடர்பு உண்டு.


பிறவிக்குருடர்கள் பிம்பவடிவக் கனவுகளைக் காண முடியாது; இவர்களின் கனவுகள் ஒலி வடிவத்திலிருக்கும். அதே போல, பிறவிச் செவிடர்கள் ஒலிவடிவக் கனவுகளைக் காண முடியாது; இவர்களின் கனவுகள் பிம்பவடிவத்திலிருக்கும்.

கனவு காணத் தேவையான ஞாபக சக்தியும், கற்பனைத் திறனும் உயர்விலங்குகளுக்கு இருப்பதால், அவைகளும் மனிதர்களைப் போல கனவுகள் காண்கின்றன! நாய்கள், பூனைகள், குதிரைகள், மற்ற பாலூட்டிகள் ஏன் பறவைகள் கூடக் கனவுகள் காண்கின்றன.

கனவுகளை இயற்கைக் கனவுகள், செயற்கைக் கனவுகள் என இருவகைகளாகப் பிரிக்கலாம். மனநிலை பாதிக்கப்பட்டவர்களில் ஒரு சிலருக்குக் கனவு வராது! மருத்துவ ரீதியில் அவர்களுக்குக் கனவுகள் செயற்கையாகத் தூண்டப்படுவதைச் செயற்கைக் கனவுகள் என்கிறோம். பொதுவாகக் கனவுகள் ஐந்து வகைப் படுகின்றன; விழுகிற கனவு, யாராவது நம்மைத் துரத்துகிற கனவு; ஒரு காரியத்தைத் திரும்பத் திரும்பச் செய்ய முயற்சி செய்து தோற்றுப் போகிற கனவு; தொழில் அல்லது படிப்பு சம்பந்தமான அன்றாட வாழ்க்கைக் கனவு; பாலுணர்வுக் கனவு என ஐந்து வகைகளாகப் பிரிப்பர்.

கனவுகள் தோன்றக் காரணங்கள் பற்பல, நமது மூளையின் நடுப்பகுதியிலிருந்து, கிளம்புகின்ற சிறிய மின்னலைகளை 'கார்ட்டெக்ஸ்' பகுதி புரிந்தும் புரியாமலும் தொகுத்துக் கொடுக்கக் கனவுகள் வருகின்றன. சிந்தனை சம்பந்தப்பட்ட அனைத்து காரியங்களும் 'கார்ட்டெக்ஸ்' பகுதியில் நிகழ்கிறது; எனவே, இங்குதான் கனவுகளும் ஆரம்பிக்கின்றன! பெரும்பாலும், நமது உள் மனத்தில் இருக்கும் ஆசைகள், ஏக்கங்கள், பயங்கள், ஏமாற்றங்கள், சுகம், துக்கம், பாலுணர்வு, போன்றவைகளின் பிரதிபலிப்புகளாகக் கனவுகள் அமைகின்றன. புறத்தூண்டல்கள் அல்லது உடலுக்குள் ஏற்படும் உட்தூண்டல்கள் கனவுகளை உண்டாக்கலாம்.

கனவுகளின் பயன்கள்தான் என்ன? அன்றாட இயந்திர வாழ்க்கையிலிருந்து நம்மைச் சிறிது நேரம் விடுவிக்க சுகமான கனவுகள் உதவுகின்றன. ஒரு சிலருக்கு நாளை நடக்கப் போகும் சம்பவங்கள் இன்றே கனவாகத் தெரிகின்றது; மூளையினுடைய ஆற்றலை வைத்துப் பார்த்தால் இந்தச் சக்தியும் அதற்கு இருக்கலாம். சிலருக்குக் கனவுகளின் மூலம், தீராத ஒரு சில பிரச்னைகளுக்கு விடை கிடைத்து விடுகின்றது! உதாரணமாக, ரஷ்ய நாட்டு விஞ்ஞானி மெண்டலீப் 1869 - ல் மூலகங்களின் அட்டவணையைக் கனவில்தான் கண்டு பிடித்தார் எனக் கூறுவர்.



கனவுகளுக்கு ஒரு பாதுகாப்புப் பணி இருப்பதாக சிக்மண்ட் ப்ராய்டு குறிப்பிடுகிறார். நமது மூளைக்குத் தினசரி கனவுலகில் சிறிது நேரம் சஞ்சரிப்பது தேவைப்படுகின்றது. மேலும், கனவுகள் மூளையைப் புதுப்பிக்கின்றன என்றும் சொல்கிறார்கள். எனவே, பொதுப்படையாகப் பார்த்தால், கனவுகள் மனத்திற்கும், உடல் நலத்திற்கும் ஏதோ ஒரு வகையில் உதவுகின்றன என்பதை மறுக்க முடியாது!

'கனவுகளின் பலன்கள்' பற்றிய புத்தகங்கள் கடைகளில் ஏராளம்! எனவே, கனவுகள் பலிக்குமா, கனவுகளை நம்பலாமா போன்ற கேள்விகள் எழுவது இயற்கையே! இக்கேள்விகளுக்கு விஞ்ஞான ரீதியான பதில்கள் இன்றளவும் இல்லை. இப்போதைக்கு முற்றிலும் கற்பனை என்று கனவை ஒதுக்கிவிட முடியாது! முற்றிலும் உண்மை எனக் கனவை நம்பி விடவும் முடியாது!!

இரா. பார்த்திபன்

> **கடந்த காலம் ஒரு கனவு;**
> **வருங்காலம் ஒரு பெருமூச்சு!**
>
> - அராபியப் பழமொழி

வாடிக்கையாளருக்கு **சேரனி**ன் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்



# இந்த ஆண்டு புத்தாண்டையும் பொங்கலையும் சேரனின் சீட்டு சேமிப்பு விழாவுடன் சேர்த்து கொண்டாடுங்கள்.

## சேரன் சிட் பண்ட்ஸ்

சேரன் குருப் நிறுவனங்களின் ஒரு அங்கம். சேரன் குருப் பைனான்ஸ், ரேடியேட்டர் & ஆயில் கூலர் உற்பத்தி, மருந்துகள் மற்றும் தேயிலை உற்பத்தி, அடுக்குமாடி வணிக மற்றும் குடியிருப்புக் கட்டிடங்கள், நூல் உற்பத்தி போன்ற பல்வேறு தொழில்களில் அனுபவ தொழில் திறமையுள்ளவர்களின் நிர்வாகத்தில் செயலாற்றி வருகிறது. ஆயிரமாயிரம் வாடிக்கையாளர்களின் பெருமதிப்பை பெற்ற இந்த குருப் நிறுவனங்களின் முன்னேற்றத்தில் நீங்களும் பங்கு பெறுங்கள். எங்கள் வளத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ள உங்களை அழைக்கிறோம்.

**சேரனின் சிறப்பு சீட்டு சேமிப்பு விழா 01.01.1993 முதல் 31.01.1993 வரை மட்டுமே.**

| வ.எண் | சீட்டின் மதிப்பு | | | | உறுப்பினர்களுக்கு | அறிமுகப்படுத்துவோருக்கு |
|---|---|---|---|---|---|---|
| 1. | 25 | × | 400 | 10,000 | எவர்சில்வர் ஆப்பிள் டிஷ் | எவர்சில்வர் ஆப்பிள் தட்டு |
| 2. | 30 | × | 500 | 15,000 | எவர்சில்வர் அல்வா பாத் | எவர்சில்வர் பத்மினி தட்டு |
| 3. | 25 | × | 1,000 | | எவர்சில்வர் கல்யாண் | எவர்சில்வர் |
| | 40 | × | 625 | 25,000 | பாகம் | டிபன் பாக்ஸ் |
| | 50 | × | 500 | | | |
| 4. | 25 | × | 2,000 | | மூன்று பாத்திரங்களுடன் | எவர்சில்வர் டிஷ் |
| | 40 | × | 1,250 | 50,000 | கூடிய சேர்மன் | |
| | 50 | × | 1,000 | | லஞ்ச் பேக் | |
| 5. | 25 | × | 4,000 | | ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் | கூல் என் கூல் |
| | 40 | × | 2,500 | 1,00,000 | ஹாட் பேக் 2,000 மி | 650 மி |
| | 50 | × | 2,000 | | | |
| 6. | 25 | × | 8,000 | | பிரஸ்டீஜ் பிரஷர் | ஹாட் பேக் 500 மி |
| | 40 | × | 5,000 | 2,00,000 | குக்கர் 7½ லிட்டர் | |
| | 50 | × | 4,000 | | | |
| 7. | 40 | × | 7,500 | 3,00,000 | 2 கிராம் தங்க நாணயம் | கிஸ் ஜூஸர் |
| | 50 | × | 6,000 | 3,00,000 | | பிளாஸ்க், டி.பே.க.மக். |
| 8. | 50 | × | 10,000 | 5,00,000 | 4 கிராம் தங்க நாணயம் | கூல் கண்டெய்னர் 8 லிட்டர் |
| 9. | 50 | × | 20,000 | 10,00,000 | 8 கிராம் தங்க நாணயம் | ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் டின்னர் செட் |

சீட்டு விவரங்களை அறிய எங்கள் அலுவலகத்துக்கு வருவோருக்கு ஒரு இனிய பரிசு காத்திருக்கிறது.

P S.O.NO.: 755/92, 754/92, 752/92, 434/92, 438/92, 618/92, 1134/92, 1508/91, 197/91



பதிவு மற்றும் தலைமை அலுவலகம்

**சேரன் சிட் பண்ட்ஸ் (பி) லிமிடெட்**

"சேரன் டவர்ஸ்", 78-85, அரசு கலைக்கல்லூரி சாலை, கோயமுத்தூர் -641018.
தொலைபேசி : 217658, 216197, 217690 டெலக்ஸ் : 0855-538 CARE IN ஃபேக்ஸ் : 091 0422-210674

விவரங்களுக்கு :

சென்னை : எண். 15, 3-வது மாடி, ராஜா அண்ணாமலை பில்டிங்ஸ், 19, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், தொலைபேசி : 473538
மதுரை : 3-வது மாடி, KJR காம்ப்ளக்ஸ், 16 வடக்கு வெளி வீதி, தொலைபேசி : 37276
ஈரோடு : திருக்குமரன் பில்டிங்ஸ், 11-F மேட்டூர் ரோடு, தொலைபேசி : 77636
திருப்பூர் : முதல் மாடி, பிரிமியர் பிளாசா, பின்னி காம்பவுண்ட், குமரன் ரோடு, தொலைபேசி : 25000
நீலகிரி : திரு. கே.பி. ராஜு, ரெசிடெண்ட் மேனேஜர், கோபன கிராமம், கிலப் போஸ்ட், கோத்தகிரி.
கரூர் : திரு. ஆர். ராமச்சந்திரன், ரெசிடெண்ட் மானேஜர், (Bata Shop) 963-E கோயமுத்தூர் ரோடு, தொலைபேசி : 22020.




# டைரி கணக்கு

"புது வருஷம் பிறந்து விட்டது. எனக்குப் பால் கணக்கு எழுத ஒரு டைரி வேணும். பஜனை கிளாஸ் பாட்டு எழுத ஒன்று வேணும். இன்னொன்று, சலவைக்குப் போடுகிற துணிக் கணக்கு எழுத. இப்போதைக்கு மூன்று டைரிகள் போதும்!" என்றாள் மனைவி.

தூக்கிவாரிப் போட்டது எனக்கு. "பால் கணக்கு எழுத ஏதானும் காலண்டரில் குறித்து வைத்தால் போதாதா? தனி டைரியா வேணும்?"

"ஆமாம். சுவரில் காலண்டரை கைக் கெட்டுகிற தூரத்தில் மாட்ட மாட்டீர்கள். அண்ணாந்து, கழுத்துச் சுளுக்கிக் கொள்ளு கிற மாதிரி பார்க்கணும். தேதி மாற்றிக் கணக்கு எழுதினால், எல்லாம் சுந்தர கோளம்தான். மூணாம் வருஷம் ஸ்டூலைப் போட்டுக் கொண்டு எட்டி எட்டி எழுதித் தான் கீழே விழுந்து வலது கால் ஃப்ராக்சர் ஆச்சு."

"இந்த வருஷம் இடதுகால் ஆகட்டுமே?" என்று சொல்ல வாயெடுத்தேன். அப்புறம் எனக்குக் கை, கால் எல்லாமே ஃப்ராக்சர் ஆகிவிடும் அபாயம், ஜோசியம் எதுவும் பார்க்காமலே தெரிந்ததால், "ஒரு நாற்காலியைப் போட்டுக் கொண்டு ஏறி நின்று எழுதலாமே?" என்றேன். "அதிலும் என்ன எழுதப் போகிறாய்? வெறுமனே லிட்டர் 1, $1\frac{1}{2}$, 2 என்றுதானே?"

"நினைச்சேன். நான் காலண்டர் முழுக்க கால், அரை, முக்கால் என்று எழுத, யாரானும் என்ன அது என்று கேட்டால் என்ன சொல்லுவீர்கள்? 16 ஆம் தேதி ஒரு லிட்டர் பால் வாங்கினோம். பதினேழாம் தேதி அரை லிட்டர்தான் என்று நம் வீட்டுப் பால் கணக்கை வருகிறவர் போகிறவரிடம் எல்லாம் சொல்லிக் கொண்டிருப்பீர்களாக் கும்?"

"நான் ஏன் சொல்லுகிறேன்? அவர் களுக்கே தெரியாதா என்ன? உங்கள் காலண்டரில் மட்டும் $16\frac{1}{2}$ தேதி, $18\frac{3}{4}$ தேதி என்றெல்லாம் போட்டிருக்கிறதே என்று நிச்சயம் கேட்க மாட்டார்கள். பயப் படாதே!"

"சரி, அப்படியானால் பால் கணக்கு எழுத ஒரு காலண்டர் தாருங்கள். என் கைக்கு எட்டுகிற உயரத்தில் மாட்டிக் கொள் ளுகிறேன். ஒரு டைரியை வேணுமானால் குறைத்துக் கொள்ளுங்கள்."

# தர்மபுரிக்கு வருகிறோம்!

## மாதம் ஒரு நகரம்

பாண்டிச்சேரி சிறப்பிதழில், கல்கியின் அடுத்த நகர விசிட் பற்றிய அறிவிப்பு ஏதும் வெளியாகாததால், ''மாதம் ஒரு நகரம்'' விசிட் அவ்வளவு தானா? எங்கள் நகரங்களுக்கெல்லாம் வரப்போவதில்லையா?'' என்று ஏகப்பட்ட கேள்விகள். தர்மபுரியிலிருந்து டெலிபோனில் கேள்வி!

எனவே, அடுத்த நகரமாகத் தர்மபுரி நகருக்கு விசிட் செய்யத் தீர்மானித்து விட்டோம்.

அப்புறமென்ன! தர்மபுரியிலுள்ள அனைவரும் தங்கள் நகரில் நடந்துள்ள சாதனைகள், சாதனையாளர்கள் மற்றும் இளைஞர் அமைப்புகளின் செயல்பாடுகள் ஆகியவற்றோடு அரசின் குறைநிறைகளையும் எங்களுக்கு உடனடியாக எழுதியனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். வழக்கமான குறைகளோடு புதிய குறைகள் ஏதும் இருப்பின் அவற்றையும் எழுத வேண்டுகிறோம்.

தர்மபுரிவாசிகளின் கடிதங்கள் கல்கி அலுவலகத்திற்கு வந்துசேர வேண்டிய கடைசித் தேதி : 30.1.93

உறையின்மேல் 'மாதம் ஒரு நகரம் - தர்மபுரி' என்று குறிப்பிட்டு உடனடியாக எழுதியனுப்புங்கள்.

- ஆசிரியர்



''வரட்டும்; தருகிறேன். இப்போதானே ஜனவரி பிறந்திருக்கிறது. இன்னும் பதினோரு மாசம் இருக்கிறதே?''

''ஓசியில் வரும் என்று காத்துக் கொண்டிருந்தால் டைரி கிடைத்தாற் போல்தான்! காசு கொடுத்து இரண்டு டைரி வாங்கி வாருங்கள். காலண்டர் பெரிய பெரிய எண் போட்டதாக இருக்கட்டும். படம் மட்டும் பெரிசாகப் போட்டு, இக்கினி இக்கினியாகப் பன்னிரண்டு மாசமும் போட்ட காலண்டர் மட்டும் வேண்டாம். அதில் எழுதினால் பால் கணக்குப் பார்ப்பதற்குள் பைத்தியம்தான் பிடிக்கும் - மாசக் கடைசியில்!''

''மாசக் கடைசியில்தானே பிடிக்கும்?''

''இப்போ டைரி வாங்கி வரப்போகிறீர்களா, இல்லையா?'' என்று ஒரு சத்தம் போட்டாள் மனைவி.

''டைரி வாங்கி வரச் சொல்லியிருக்கிறாள் மனைவி!'' என்று நண்பனிடம், போகிற வழியில், சொன்ன போது விழுந்து விழுந்து சிரித்தான். ''உனக்குப் பைத்தியம் தான் பிடித்திருக்கிறது!''

''மாசக் கடைசியில்தானே பிடிக்கும் என்றாள் மனைவி?''

''யாராவது காசு கொடுத்து டைரி வாங்குவார்களா? அசடு!''

ஒரு தப்பாசையில் ஒரு வாரம் காத்திருந்தும் ஓசி டைரி எதுவும் கைக்கு வரவில்லை. யாரோ ஒரு தடிப்பயல் குஷ்பு காலண்டர் ஒன்று கொடுத்தான். காலண்டர் முழுக்க குஷ்புதான். தேதியைத் தேடித்தான் கண்டுபிடிக்கணும். இதைப் போய் மனைவியிடம் கொடுத்து...

''ஒரு யோசனை தோன்றுகிறது. பால்காரரை நிறுத்திவிட்டு ஆவின் பால் கார்டு வாங்கிவிட்டால், காலண்டரில் எழுதுகிறது, காலை ஒடித்துக் கொள்ளுகிறது எதுவும் இருக்காது. அதேபோல, பெட்ஷீட் என்று சலவைக்காரர் சொல்ல நீ கர்ச்சிப் என்று எழுதி, தலையைப் பிய்த்துக் கொள்ளுகிறது எதுவும் வேண்டாம். பேசாமல் லாண்டிரியில் கொடுத்து பில் வாங்கிக் கொள்ளலாம்!'' என்றேன்.

உஷ்ணமாய் ஒரு பார்வை பார்த்தாள் மனைவி.

''இதை ஜனவரி பிறந்த போதே சொல்லியிருக்கலாமில்லையா? சரி. அதோ துணி மூட்டை இருக்கிறது. லாண்டிரியில் போட்டுவிட்டு பில் வாங்கி வாருங்கள். அப்படியே பால் கார்டு வாங்க இப்பவே ஆளைப் பிடியுங்கள். அப்போதான் அடுத்த வருஷமாவது கிடைக்கும்!''

எதற்கு வம்பு?

''இதோ பார். மூணு டைரிதானே கேட்டாய்? வாங்கி வந்துவிடுகிறேன்!'' என்று புறப்பட்டேன்.

- சித்தார்த்

# தெய்வத்திற்கு உணவை



## நைவேத்தியமாகப் படைப்பது, ஏன் ?



மிக அண்மையில் தோன்றியவரும் ஆலய வழிபாடு செய்துவந்தவருமான ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர் இதற்குச் சாட்சி ஆகிறார்.

தூய அன்புடனும் பூரண விசுவாசத்துடனும் தெய்வத்துக படைக்கப்படும் நைவேத்தியத்தை மூர்த்தியினிடமிருந்து அருட்ஜோதி ஒன்று கிளம்பி வந்து ஸ்பரிசிக்கிறது.

அத்தகைய அருள் ஸ்பர்சம் ஆன பின்பே, அது பிரசாதமாகின்றது. ஈசுவரப்பிரசாதமாக அன்பன் அதை ஏற்றுக் கொள்கின்ற பொழுது அவனுடைய அந்தக்கரண சுத்திக்கு அது பேர் உதவிபுரிகின்றது.

ஆதாரம் : தர்மசக்கரம்




ஸ்வீட்களில் சிறந்தது
கிராண்ட் ஸ்வீட்ஸ்

திருமண
வைபவங்களுக்கு:-

சீர்முறுக்கு, சீர் அதிரசம், முள்ளுத்தேன்குழல், பருப்புத் தேங்காய் வகைகள், திரட்டுப்பால், அப்பம் முதலியன.

**தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்**

24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை - 600 020
போன்: 412557



நெல் அவிக்கிற தினங்களில் வேலை இடுப்பொடிக்கும். களத்தில் சதா ஒரு ஆள் காவல் இருக்க வேண்டும். பாழாய்ப் போன காக்கை. கண் சிமிட்டுகிற நேரத்தில் ஆழாக்கு நெல்லை அள்ளிக் கொண்டு போகும்.

முத்துராகவிடம் நாலு நாளாய்ச் சொன்னதில் நேற்றுத்தான் ஒரு காக்கையைப் பிடித்துக் கொண்டு வந்தான். காலில் கட்டிய கயிறைக் கொல்லையின் தட்டிக் கதவோடு முடிச்சிட்டு வைக்க, பறந்து பறந்து தப்பிக்கப் பார்த்து நெஞ்சரி கண்டு சோர்ந்து போய் நின்றது. கொஞ்ச நேரம்தான். மறுபடி புதுசாய் சங்கல்பம் எடுத்தது போல கத்தி கத்திப் போய் 'ஜிவ்' வென்று எழுந்து, முடியாது இறக்கையடிக்கத் தரையில் விழுந்தது.

தன்னுடைய இனம் பண்ணுகிற அக்கிரமத்துக்காய் அனுபவிக்கட்டும் அவஸ்தையை, கண்ணில் பரிதாபம் பொங்க பாவமாய் நிற்கிற, காக்கையை அவிழ்த்து விட்டால் நாளைக் காலையில் 'சரு.... சரு' எனக் கத்தி விரட்டித் தொண்டை புண்ணாகிப் போகும்.

சின்னப் பையன் இத்தனூண்டு சோறும், சின்ன அலுமினியத் தட்டில் தண்ணீரையும் கொண்டு போய் வைத்தான். ஆவலாய் ஒரு பருக்கையை விழுங்கி விட்டு, எதுவோ நினைத்துக் கொண்டு தள்ளிப் போனது. சண்டைக்காரன் வீட்டில் சாப்பிடக் கூடாதில்லையா?

களத்தில் அவித்த நெல்லைப் போட்டு, துழாவி விட்டு உட்கார்ந்தால், சிவேகிதன் கயிற்றில் அல்லல்படுவது கண்டு காக்கைக் கூட்டம் ஒதுங்கி நிற்கும். முருங்கை மரக் கொப்பில் உட்கார்ந்து கொண்டு 'காகா' வென இரையும். 'கர்ர்' என்று தொண்டையால் பயமுறுத்தும்.

துணிந்த துக்கிரிகள் தலையைத் தட்டிப் பறந்து போகும். ஆனால் சிறைப்பட்டதை விடுவிக்கிற புத்தி அவற்றுக்கு இல்லை. என்ன செய்யலாம்...? சமரசம் பேசலாமா என்று யோசிக்கிற சமயோசிதம் இல்லை. பாவப்பட்ட ஜீவன்கள். ஆனாலும் அதிகம் இரக்கப்படக் கூடாது. உண்ட வீட்டுக்கே ரெண்டகம் பண்ணிப் போகும்.


முனியாண்டித் தாத்தனுக்குக் குறளி வந்து நிழலாடியிருக்கும் போல, இல்லாவிட்டால் இத்தனை பெரிய களத்தைக் கட்டிப் போடுவானா? அவனிடத்தில் திசை தொட்டு வியாபித்த அத்தனை நிலமெல்லாம் இல்லை. கஞ்சி குடிக்க நெல் வருகிற அளவே காணி நிலம். களமும் வேண்டாம். குதிரும் வேண்டாம். இதென்னவோ வேறு எந்தக் காரணத்துக்கோ வளைத்துப் போட்டது போல.

அவன் உசிரோடு இருக்கிற சமயங்களில் பகலில் யார் வீட்டு நெல்லாவது காயும். அனுமதி இலவசம். ராத்திரிக்கு ஒரு ஆள் சொந்தங் கொண்டாட முடியாது. கயிற்றுக் கட்டிலை வெளியே எடுத்துப் போட்டுக் கொண்டு மல்லாந்து வானம் பார்த்துக் கிடப்பான். குஷியாயிருந்தால் பாட்டு வேறு அள்ளிக் கொண்டு வரும்.

'வாடே மாசிக் குளிரு புள்ளே
வாசலிலே ஏனத் தனிரு -
சோடியாக நின்னா - ஒரு
சாடை பேசும் ஊரு....'

வெயிலானாலும், பனியானாலும் அது நிரந்தரம். கருட்டுப் புகை நெடியோடு காற்று மண்டலத்தை எச்சரிக்கை பண்ணும். இருந்தவரைக்கும் அனுபவித்துப் போய் விட்டான். அவனுக்குப் பிறகு காளியம்மாள்தான் சூட்டோடு சூடாகச் சுவீகரித்துக் கொண்டாள். அரிசி வியாபாரம். மாசத்துக்குப் பத்து நாள் நெல் அவியல் இருக்கும். ஊருக்குள் புழுங்கலரிசிக்கு ஒரு 'டிமாண்டும்' இல்லை. டவுனில்தான் ஒன்றுக்கு நாலாய்க் கடைகள். எங்காவது தள்ளி விடலாம். கை மேல் ரொக்கமாய்க் காசு கிட்டும். மில்லில் அவித்து அரைத்து வருகிற அரிசியை விட காளியம்மாள் தருகிற அரிசிக்குத் தனி மவுசு உண்டு. பாடுதான் வதைக்கும். அதைப் பார்க்காவிட்டால் பலனில் ஒன்றும் குறைச்சல் இல்லை.

காளியம்மாளுக்குப் புருஷன் இல்லை. மகள் இருக்கிறாள். மகளுக்குக் கட்டிய மருமகன் இருக்கிறான். பிள்ளைகள் நண்டும் சிண்டுமாய் இரண்டு மூன்று நிற்கின்றன. எல்லாம் அதுகளுக்குத்தான். நாற்பத்தியெட்டு வயசுக்கு மேலேயும் வெயில், ஓரம், வெளனும் பாராது படுவது மகளுக்கும், வாரிசுகளுக்கும் வேண்டித்தான். நெல் அவியலோடு நிற்காது. கறவைக்கு எருமைகள் உண்டு. முட்டைக் கோழிகள் பத்து உண்டு. சின்ன வயது முதலே






ரத்தத்தில் ஊறிப் போன ஆசை. காசுக்காய்க் கஷ்டப்பட்டு, உழைத்துத் தேய்ந்து போனது யார்? முன்னெல்லாம் ஆளுக்காள் நாலையும் பேசுவார்கள். அவளையும் முனியாண்டித் தாத்தனையும் கூட சேர்த்து வைத்துப் பேசிய கண் அவிஞ்ச மனிதர்கள். அவளுக்கு அதெல்லாம் ஒரு பொருட்டே இல்லை. மற்றவள் நல்லாயிருக்கிறதைப் பொறுக்காத மனசுகள். இப்போது அதெல்லாம் குறைந்திருக்கிறது.

'சடசட' வென்று சப்தம் கேட்க, தூக்கிவாரிப் போட்டது. இறக்கை அடித்து எழுந்த காக்கை மறுபடி தரையில் விழுந்தது. காலை நொண்டிக் கொண்டு, சிவப்பேறிப் போன கண்களால் உறுத்துப் பார்த்தது. சுற்றமும் நட்பும் என்று துக்கம் விசாரித்துப் போக வந்த மற்ற காக்கைகள் எல்லாம் சொந்தக் காரியம் நோக்கப் போய் விட்டிருக்க, தனிமை கொன்றிருக்க வேண்டும். எல்லா உயிர்களுக்கும் வயிறும் பசியும் சாசுவதமாய் இருக்க, மற்றவர் வேதனை இரண்டாம் பட்சம்.

காளியம்மா கூட நினைத்தாள், அவிழ்த்து விடலாமா என்று. உச்சியிலிருந்து சூரியன் கொஞ்சம் இறங்கிய பின்னால் மறுபடி கூட்டமாய் வரும் காக்கைகள். அவஸ்தைப்படுகிறதுக்காய் இரக்கப்பட்டால் அனுபவிக்க வேண்டியது வரும். இப்படியே விட்டாலும் பாவம் - தூங்கிப் போய் நின்று, முதுகு கிடத்தி, வயிறு காட்டிச் செத்துப் போகும்! செத்த காக்கையைக் கட்டி வைத்து 'ஷோ' பண்ணுவதெல்லாம் நடக்காத காரியம். ஏமாறாது இன்றைய காக்கைகள்.

வழக்கமாய் நாலரைக்கு வருகிற கறவை மாடுகளை இன்னும் காணோம். காய்ந்திருந்த நெல்லை ஓலைப் பெட்டியில் அள்ளி வைத்து விட்டு நிமிர்ந்தால் பால் பீய்ச்சச் சரியாயிருக்கும் என்று நினைத்திருந்தவளுக்கு மேய்ச்சலுக்காய்ப் போன மாடுகள் வராதது யோசனையாக இருந்தது.

முத்துராசுவையும் காணோம். அவன்




கூட காரியவாதியாகிப் போனான். சினிமாவுக்குப் போகக் காசு வேண்டுமென்றால் இங்கேயே சுற்றிச் சுற்றி வருவான். இல்லையென்றால் தலை தெரியாது.

இடேரி எருமையை ஒரு வகையில் சேர்க்க முடியாது போக்கிரி! பருவம் வேறு. எங்கேயாவது சுற்றிக் கொண்டு இஷ்டம் போல வரும். பெரியதுகள் ரெண்டும் அந்த மாதிரி இல்லை. ஏன் இத்தனை தாமதிக்கிறது? மனசு இருப்புக் கொள்ளாமல் தவித்தது.

பேரன் சின்னவனைக் கூட்டிக் கொண்டு கோவில் குளம் பக்கம் போய் வரலாமென்று தோன்றியது காளியம்மாளுக்கு.

"இன்னாசி..... அடேய் இன்னாசி" - பாட்டியின் அலறலுக்குப் பறந்து வந்தான் பையன்.

"மேயப் போன மாட்டைக் காணாம்டா.... போய்ப் பார்த்துட்டு வந்துடலாமா? உங்கம்மாக்காரிட்டே சொல்லிட்டு ஓடியா...."

அரக்க பரக்க இன்னாசியையும் இழுத்துக் கொண்டு நடந்தவளுக்கு மூச்சிரைத்தது. ஒருநாளும் இது போல் ஆனதில்லை. வேண்டாத தொந்தரவுகளை இழுத்துப் போட்டுக் கொண்டு சீரழிவது இத்தோடு போதும். கழுதைகளை விற்றுப் போட்டு விட்டு அக்கடா என்றிருக்க வேண்டியதுதான். போதும். இதுவரைக்கும் நாயாய் அலைந்தது போதும். காளியம்மாளுக்கு என்னவெல்லாமோ மனத்தில் ஓடியது.

கோவில் குளத்தைச் சுற்றிய நிலங்களில் கால் கடுக்க சுற்றித் திரிந்ததுதான் மிச்சம், மாடுகள் எதையும் காணோம். இன்னாசி வேறு முரண்டு பண்ணினான். பச்சைப் பிள்ளையை எத்தனை தூரத்துக்கு இழுத்தடிப்பது? அவள் மேலேயே அவளுக்கு வெறுப்பாய் வந்தது. சனியன்கள் எக்கேடோ கெட்டுப் போகட்டும். வீடு போய்ச் சேரலாம் என்று புறப்பட்டவளுக்கு உள்ளுக்குள் இனந் தெரியாத சோகம் அழுத்தியது.

ஒப்புக்காய் ஒரு பக்கம் உதறினாலும் இத்தனை காலமும், ஒண்டியாளாய்த் தவிடு வைத்து, பிண்ணாக்குக் கரைத்து, வைக்கோல் உருவிப் போட்டுப் பார்த்ததெல்லாம் வீணாய்ப் போகுமோ என்று பயமும் வந்தது. களவாணிப் பயல்கள் எவனும் ஓட்டிக் கொண்டு போயிருப்பான்களோ?

"இந்நேரத்துக்கு இவனையும் கூட்டிக்கிட்டு எங்க போயிட்டு வர்றே நீ.... முத்துராசு மூணுவாட்டித் தேடி வந்துட்டான்.... அம்பலக்காரர் வூட்டு வயல்ல எறங்கி மேஞ்சதுக்காக மாடுங்களைப் புடிச்சிட்டுப்

போய்க் கொல்லை வூட்டுல கட்டியிருக் காங்களாம்... அவன் எதையும் சொல்ற துக்குப் பயப்படுறான்..... நீ வரணும் இல்லாட்டி இன்னாசி அப்பாவ வரச் சொல்லுங் கன்னு..... இந்த மனுஷன் பொழுது முச்சூடுக்கும் வூட்ல இருக்கிற ஆளா... கேட்டதும் அனுப்புறதுக்கு.... வெரசாக் கிளம்பு... முத்துராசு காத்துக் கிட்டிருப்பான் அம்பலக்காரர் வூட்டுக்கு முன்னாடி...'' - மகள் சொல்லச் சொல்ல கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது காளியம் மாளுக்கு.

'மூதேவிங்க.... எவ்வளோ இடம் இருக்க அம்பலக்காரர்வூட்டு வயல்லேயா போய் எறங்கணும்....? வீம்பு புடிச்ச ஆளு அவரு.... ஒண்ணுக்குப் பத்துப் பேசுவார்... அந்தாளுக்கு முன்னால கைகட்டிக் கிட்டு நிக்கணும்... இனிமே இப்படியாவாதுங் கன்னு மன்னிப்புக் கேட்கணும்... நாக்கு மேல பல்லைப் போட்டு ஒரு வார்த்தை கேட்கக் கூசிப் போறவங்களுக்கு முன்னால, காளியம்மாவுக்கு இப்படியொரு கழுத்தறுப்பைச் செஞ்சுட்டுதுங்களே.... வாயில்லாச் சீவனாச்சேன்னு போகட்டும்னு வெரட்டி வுடாம.... கட்டிப் போட்டு நுரை தள்ள அடிச்சிருப்பாங்க... அப்பிடியாவது புத்தி வரணுமே...? எல்லாம் என் நேரம்... பொல்லா விதி...., முனகிக் கொண்டே அயர்வாய் வெளியேறி யவளையே பார்த்துக் கொண்டிருந்தாள் மகள்.

அம்பலக்காரரிடம் கெஞ்சிக் கூத்தாடி மாடுகளை வீட்டுக்கு ஓட்டி வர ஒன்பது மணியாகிப் போனது. காளியம்மாள் பிரமை பிடித்தவள் போல இருந்தாள். முத்துராசுதான் மாடுகளுக்குத் தண்ணீர் காட்டி விட்டு, வைக்கோல் கோதிப் போட்டுப் போனான்.

''ஒரு வாய் துன்னுட்டுப் படேன்'' - மகள் கூப்பிட்டதுக்குக் காளியம்மாவிட மிருந்து பதில் இல்லை.

எல்லோரும் உறங்கின பிறகும் அவளுக்கு உறக்கம் வரவில்லை. எதுவோ நினைத்துக் கொண்டவள் போல சந்தடி செய்யாமல் எழுந்து நெல் காயப் போடும் களத்துக்குப் போனாள். மூலை யோரமாய்க் குன்னிப் போய் நின்றிருந்த காக்கையைப் பார்த்தாள். படபடவென்று கால் கயிறு அவிழ்க்க, நம்பாமல் பார்த்து, கொஞ்ச தூரம் தத்தி 'ஜிவ்' வெனப் பறந்தது காக்கை. கொட்டுகிற நிலவொளியில் காளியம்மாள் நிம்மதிப் பெருமூச்சுடன் நின்று கொண் டிருந்தாள்.

ESTD : 1896 Phone : 71314

திருமணம் ஆகாத பெண்களுக்கு விரைவில் திருமணம் கைகூடும்; நினைத்த சுபகாரியங்கள் கைகூடப் பெறு கிறார்கள்.

தினமும் பாராயணம் செய்யுங்கள்
ஸ்ரீ சித்தர் சிதம்பர சுவாமிகள் அருளியது
ஸ்ரீ மீனாட்சி கலிவெண்பா
(ஸ்ரீ ச்யாமளா த்ரிசதி)
அனந்தன் அவர்களின் உரையுடன்
கூடியது விலை ரூ. 25.00 மட்டும்.

தெரிந்த கோயில்கள்
தெரியாத விஷயங்கள்
வசந்தா சரவணபவன்
எழுதியது ரூ. 25.00

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திரர் பதில்கள்
(பாகம் I & II)
அன்றாட வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் பலவித சந்தேகங்களைப் போக்கி அருளியுள்ளார்.
விலை - பாகம் I ரூ. 15.00
பாகம் II ரூ. 15.00

தெய்வத்தின் அருள்வாக்கு
- விலை ரூ. 12.00
பிள்ளையாரை வணங்கும் முறை, நிலையான இன்பம், பெண்களுக்கான பணிகள், புராணங்கள் கேட்பதின் பயன்; போன்ற 67 வெவ்வேறு விஷயங்களை அருளி தெறிப்படுத்துகிறார் காஞ்சி முனிவர். அவசியம் படிக்க வேண்டிய நூல்.

தென்னாட்டுக் கோயில்கள் :
(பாகம் II ரூ. 25/- பாகம் III
ரூ. 25/- & பாகம் IV ரூ. 25/-)
ம. ராதாகிருஷ்ண பிள்ளை எழுதியது.
அரிய நூல்.
மேலும் பல ஆன்மீக நூல்களுக்கு,

அல்லயன்ஸ் கம்பெனி




244, ராமகிருஷ்ணா
மடம் சாலை,
(குளம் எதிரில்)
தபால் பெட்டி நெ. 617,
மயிலாப்பூர்,
சென்னை - 600 004.

# எம்.ஜி.ஆர்.ரசிகர்கள் மன்னிக்கமாட்டார்கள்!



* சோமாலிய எலும்புக் கூடுகள்

● சென்னை தொலைக்காட்சி நிலையம், தன் தமிழ் இலக்கிய சேவையைக் கொஞ்ச நாள் நிறுத்தி வைப்பது உத்தமம். இரண்டாவது சேனலில் இடம்பெற்ற சி.வி. சேஷாத்ரி மற்றும் சாரதா நம்பிஆரூரனின் திருப்பாவை, திருவெம்பாவையில் அறிவியல் தாக்கம் பற்றியதான பேச்சைச் செவிமடுத்தவர்கள் யாவரும் கண்டிப்பாய் என் கூற்றை வழி மொழிவர். ஆண்டாள் ஏதோ பக்திப் பரவசத்தில் பாடப் போக, இவர்கள் அதில் அறிவியல் இருக்கிறதா, உயிரியல் இருக்கிறதா என்று கிளறி... தேவையற்ற ஆராய்ச்சிகள்!

● முத்தமிழ் மன்றத்தில் அ. கந்தசாமி என்பவரின் 'கருவூர்த்தேவர்' பற்றிய 'கோனார்' தமிழ் உரை. 'தேமே' என்று ஒப்பித்தார். இடையிடையே நிலையத்தார் நேரமாகி விட்டதை அறிவுறுத்த, மூச்சைப் பிடித்துக் கொண்டு அவசர அவசரமாகப் பேசி முடித்ததைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

● இசை விழா நிகழ்ச்சிகளை, தினம் மாலை ஐந்து மணிக்கு ½ மணி நேரம் ஒளிபரப்புகிறார்கள். ஷாம்பூ மாதிரி சங்கீதத்தையும் 'சாஷே'யில் அடைக்கிறார்களே என்று வருத்தம் வந்தாலும் ரசிக்கவே செய்கிறோம். மாண்டலின் ஸ்ரீனிவாஸ் முன்பு ஸ்ரீகாந்த் ஸ்பீடில் வாசித்தவர் இப்போது சாஸ்திரி ஸ்பீட். ஆயினும் வாசிப்பில், வழிநெடுக நளினம். டெக்னிகலாகப் பல புதுமைகளை ஆங்காங்கே தெளித்துச் செல்கிறார். வித்தை காட்டும் விரல்களுக்குச் சுற்றிப் போடச் சொல்லுங்கள்.

● ஒளியும், ஒலியும் ஆரம்பிப்பதற்குப் பத்து நிமிடம் முன்பாக வாரம் ஒருவர் திருக்குறள் பற்றிப் பேசுகிறார்கள். இந்த வாரம் தமிழண்ணல். மிக எளிய தமிழில், துல்லியமான, கருத்துச் செறிவோடு அமைந்த உரை சிந்தனைக்கு விருந்து. ஆயினும் நிகழ்ச்சி முழுவதும் அவரையேவா பார்த்துக் கொண்டிருப்பது? ஒரு வள்ளுவர் பொம்மை... ஒரு திருக்குறள் புத்தகம்.... அல்லது காட்சிகளுக்கேற்ற சித்திரங்கள்... கொஞ்சமாவது விஷுவலைஸ் பண்ணினால் குறைந்தா போய் விடுவார்கள்?



* ரசிகர்கள் மன்னிக்க மாட்டார்கள்

● பைபிள் சூடு பிடித்திருக்கிறது. இந்த வாரம் காமெரா புகுந்து விளையாடி விட்டது. ராட்சஸ கப்பல், பிரளயக் காட்சிகளில் சிரத்தை தெரிகிறது. இசை பரம சுகம்.

● 'எங்க வீட்டுப் பிள்ளை. மற்றுமொரு ஃபார்முலா படம். வார்த்தைகளின் இடைவெளியிலெல்லாம் 'எடிட்' பண்ணி, படத்தைச் சின்னாபின்னப்படுத்தி, எம்.ஜி.ஆருக்கு மகத்தான துரோகம் புரிந்து விட்டார்கள். இந்த ஜன்மத்தில் எம்.ஜி.ஆர். ரசிகர்கள் டி.வி.யை மன்னிக்கப் போவதில்லை.

● பி.பி.ஸி.யில் போன புதன் காலை - சோமாலிய எலும்புக் கூடுகள். ஒருபுறம் மூட்டை மூட்டையாய் இறங்கும் உணவுப் பொருட்கள். மறுபுறம் கண்ணில் பசி காட்டும் பிரேத மனிதர்கள். பிறிதொருபுறம் ஏ.சி.ரூமில் நொறுக்குத் தீனி கொறித்தபடி, 'இங்கு ஆட்சியே முதலில் இல்லை. அரசு அமைந்தால்தானே பிரச்னைகளுக்கு முடிவு கிடைக்கும்?' என்று 'கமெண்ட்ரி' சொல்லும் 'சாணக்ய' சிந்தனையாளர்கள். அத்தனையையும் பார்த்துக் கொண்டு 'உச்சு'க் கொட்டும் நான்!



* வித்தை காட்டும் விரல்கள்

● தப்பித் தவறி உங்கள் குழந்தைகள் முன்னிலையில் மியூஸிக் டி.வி. பார்க்காதீர்கள்! இருபத்து நாலு மணி நேரமும் அம்மணியர், அரை அம்மணமாய்க் குதிக்கிறார்கள். உற்சாக மிதப்பில் ஊளையிடுகிறார்கள். அதிரும் ட்ரம்களில் காது பணால்! மியூஸிக் டிவியில் - மியூஸிக் இரண்டாம் பட்சம்தான்!

- கிச்சா

## விமர்சனம்




# கேரா தமிழகம் வருகை

## இல்லத் துணைவிகளே! இதோ ஓர் நற்செய்தி!

பரிசுத்தமாய் ஒரு தேங்காய் எண்ணெய் கடைசியாய் வந்துவிட்டது உங்கள் கடைகளில். கேரா ஓர் சுத்தமான தேங்காய் எண்ணெய். கேராவின் அசல் நறுமணம் என்றும் மாறா வண்ணம் இருப்பதன் காரணம் இது கடுமையான தரப் பரிசோதனையின் கீழ் தயாரிக்கப்படுவதே. கேராவின் பரிசுத்தம் இருநிலை வடிகட்டும் முறையின் மகத்துவம். இன்றைய நவீன தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப்பட்டு உங்களுக்காக கேராவை வழங்குவது கேரள மாநிலத்தில் கூட்டுறவுத் துறையின் கீழ் இயங்கும் நிறுவனமான கேரா ஃபெட். இதன் ஆலை நாட்டிலேயே மிக நவீனமயமானது என்பதால் இங்கு மேற்கொள்ளப்படும் சுகாதார முறையின் தரத்திற்கு ஈடு இணையில்லை.

*1 கிலோ, 500 கிராம் மற்றும் 200 கிராம் சீல் செய்யப்பட்ட பாட்டில்களிலும், 15 கிலோ டின்களிலும் கேரா தேங்காய் எண்ணெய் கிடைக்கிறது.*

**KERA**
FROM KERAFED
2 stage filtered coconut oil

**கேரா**
KERAFED வழங்குகிறது இருநிலை வடிகட்டிய தேங்காய் எண்ணெய்

**கேரா — உங்கள் இதயம் போல் இதுவும் சுத்தமானது**

வியாபார விசாரணைக்கு தொடர்பு கொள்ள தமிழக ஏஜெண்டை அணுகுங்கள்.

**பட்டாட் ஏஜென்ஸீஸ்**

127, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-600 001. போன்: 589800/587678/582555

# குஷிப்படுத்த ஒரு குஷ்வந்த் சிங்!



எந்தப் புத்தகக் கடையிலும் விறுவிறுப்பாய் விற்பனையாகும் புத்தகம் குஷ்வந்த் சிங் ஜோக்ஸ். இதுவரை மூன்று தொகுதிகள் ஒவ்வொன்றும் பல பதிப்புகள் வெளியாகி விட்டன. இத்தனைக்கும் இவற்றை அவரே எழுதுவது கிடையாது. இந்தியாவெங்குமுள்ள சர்தாரின் ரசிகர்கள் அவருக்கு அனுப்ப, அவரால் தேர்ந்தெடுக்கப்படுபவைதாம். ஆனால் ஒன்று. புத்தகத்தில் இடம்பெறும் கூப்பனை இணைத்துத்தான் உங்கள் நகைச்சுவை அனுபவத்தை அல்லது ஜோக்கை எழுதி அனுப்ப வேண்டும்!

குஷ்வந்த் சிங் ஜோக்குகளைத் தமிழில் மொழிபெயர்த்துக் கண்ணதாசன் பதிப்பகம் வெளியிட்டு வருகிறது.

லேட்டஸ்ட் தொகுதியில் இடம்பெறும் குஷ்வந்த் சிங் ஜோக்குகள் சில :

கணவன் : ஆண்டவனே! என் மனைவியின் பிடுங்கலிலிருந்து, என்னைக் கூப்பிட்டுக் கொள்வாயா!

மனைவி : கடவுளே! என் கணவன் தொல்லையில் இருந்து என்னை மீட்டு, அழைத்துக் கொள்வாயா!

கணவன் : கடவுளே! என் மனைவியின் பிரார்த்தனையை நிறைவேற்றி விடு. நான் என் வேண்டுகோளை வாபஸ் வாங்கிக்கிறேன்!

*****

பண்டா சிங், சக மாணவி ஒருத்தியைக் காதலித்தான். ஆனால் அதை நேரிடையாய் அவளிடம் தெரிவிக்க அவனுக்குத் தயக்கம். ஒருநாள் மெதுவாக, "சுஜாதா! என் குழந்தைகளுக்குத் தாயாக உனக்கு விருப்பமா?" என்றான் தயங்கித் தயங்கி.

சுஜாதா கேட்டாள் : "உனக்கு எத்தனை குழந்தைகள்?"

*****

எட்டாவது மாடி சர்தார்ஜி, இரண்டாவது மாடி சர்தார்ஜியை முட்டாளாக்க எண்ணினார். ஒருநாள், இரண்டாம் மாடி சர்தார்ஜியை இரவு எட்டு மணிக்கு விருந்துக்கு வருமாறு அழைத்தார். அவரும் வந்தார். ஆனால் வீடு பூட்டியிருந்தது. வெளியில் ஒரு போர்டு : "விருந்துமில்லை; ஒன்றுமில்லை. நன்றாய் ஏமாந்தாயா?"

விருந்துக்கு வந்த சர்தார்ஜிக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. பழி வாங்கிவிட வேண்டும் என்று தீர்மானித்தார். போர்டைத் திருப்பி, "நான் ஒன்றும் ஏமாறவில்லை; காரணம் நான் இங்கே வரவே இல்லையே!" என்று எழுதி வைத்து விட்டு, மடமடவென்று தம் வீட்டுக்குப் படியிறங்கிப் போய் விட்டார்!



*****

ஓர் அரசியல்வாதி ஓர் இளம் நடிகையை மிகவும் விரும்பினார். அவளுடன் ஊர் சுற்றிக் கொண்டு ஜாலியாய் இருந்தார். அவள்

திருமணம் பற்றிப் பேச ஆரம்பித்ததும், அரசியல்வாதி ஒரு துப்பறியும் நபரை அணுகி, நடிகையின் பின்னணி விவகாரம் முழுக்கக் கண்டுபிடித்துத் தரும்படி கேட்டார். ஒரே வாரத்தில் ரிப்போர்ட் வந்தது: "நடிகை மிகவும் நல்ல மாதிரி. கெட்ட சகவாசம் எதுவும் கிடையாது. சமீப காலமாகத்தான் ஓர் உதவாக்கரை ஆளுடன் சுற்றிக் கொண்டிருக்கிறாள்; அந்த ஆசாமி படு அயோக்கியன் என்பது பாவம், அவளுக்குத் தெரியவில்லை!"

*****




"காலி வயிற்றில் உன்னால் எத்தனை ரொட்டி சாப்பிட முடியும்?"

"நாலு!"

"முட்டாளே! முதல் ரொட்டியைச் சாப்பிட்டபின் வயிறு எப்படி 'காலி'யாய் இருக்கும்?"

தாம் முட்டாள்தனமாய்ப் பதில் சொன்னதை உணர்ந்த சர்தார்ஜி வேகமாய்த் தம் வீட்டுக்கு வந்தார்.

"காலி வயிற்றில் உன்னால் எத்தனை ரொட்டி சாப்பிட முடியும்?" என்று மனைவியிடம் கேட்டார். சர்தாரிணி, "மூன்று ரொட்டி சாப்பிட முடியும்" என்றாள்.

"உடனே சர்தார்ஜி, "ஐயோ! நாலு ரொட்டி என்று சொல்லியிருக்கக் கூடாதா? அருமையான ஜோக் அடித்திருப்பேனே!" என்று அங்கலாய்த்தார்.

தொகுப்பு : எஸ். சந்திரமௌலி



* ஜார்ஜ் ஹால்
(படம் உதவி : [illegible])

சார்லஸ் - டயானா மணமுறிவு பரபரப்பான செய்தியாகிக் கொண்டிருக்கும் இதே ஆண்டில்தான் அரசி எலிசபெத் தமது 45 வது திருமணதின விழாவைக் கொண்டாடினார். அந்த தினத்தை அவர் மறக்க முடியாதபடி செய்துவிட்டது வின்ட்ஸர் அரண்மனையில் அன்று நேர்ந்த தீ விபத்து! விலைமதிப்பற்ற பல கலைப் பொருட்கள் அழிந்ததோடு அற்புதமான மர வேலைப்பாடுகள் நிறைந்த ஜார்ஜ் ஹாலின் உத்தரம் கருகிப் போனது!

அரசி எலிசபெத்துக்கு மிகவும் பிடித்தமான இடம் வின்ட்ஸர் அரண்மனை. நஷ்டத்தின் மதிப்பே முன்னூறு கோடி ரூபாய் என்னும் போது, இதனை முற்றும் செப்பனிட்டுப் பழைய நிலைக்குக் கொண்டு வர ஏராளமாகச் செலவாகும், அவ்வளவு செலவுக்கும் வரிப் பணம்தான் வாரி விடப்படும் என்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் எழுதப் போக, பொது மக்கள் புனருத்தாரண திட்டத்தை எதிர்க்க ஆரம்பித்து விட்டனர்!

விதிர் விதிர்த்துப் போன எலிசபெத் அரசி, தமது வருமான வரிக்கணக்குகளைச் சரி பார்க்க ஏற்பாடுகள் செய்து வருகிறார். இனி வரிகட்டப் போவதாக அறிவித்திருக்கிறார்!

– என். சி.

## பிரியங்காவுக்காகப் புடைவை!

மயிலாடுதுறை தொகுதியில் தயாராகும் புடைவைகள், கலைப் பொருட்களை டெல்லிவாசிகளுக்கு அறிமுகப்படுத்த தமது வீட்டிலேயே ஒரு கண்காட்சி ஏற்பாடு செய்தார் மணிசங்கர அய்யர். திருப்புவனம் சேலைகள், சுவாமிமலையிலிருந்து கைவினைப் பொருட்கள், தாராசுரத்தில் தயாரிக்கப்படும் மர, உலோக கலைப்பொருட்கள், பாய் வகைகள் என்று பல ஐட்டங்கள் இடம்பெற்றன. கண்காட்சிக்கு வந்திருந்த சோனியா காந்தி, மகள் பிரியங்காவுக்காக திருப்புவனம் புடைவையும், சில கலைப் பொருட்களும் வாங்கிச் சென்றார்.



– மௌஷ்மி

# நேர்மை வறட்சிக்கு நிவாரணம் எது?

கேரளத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளைப் பார்வையிட அண்மையில் வந்திருந்தார் மத்திய விவசாயத் துறை அமைச்சர் பல்ராம் ஜாக்கர். அவருடன் ஓர் அதிகாரிகள் குழுவும் வந்தது. இவர்கள் டெல்லி திரும்பு முன் வழங்குவதற்கென உள்ளூர் அதிகாரிகள் பத்து சூட்கேஸ்களும் அவற்றுக்குள் வைப்பதற்குக் கணிசமான அளவு முந்திரி, ஏலம், மிளகு, தேயிலை, நேந்திரங்காய் வறுவல் போன்ற ஐட்டங்களையும்



● பல்ராம் ஜாக்கர்

வாங்கினார்கள். ஒவ்வொரு சூட்கேஸும் சுமார் 900 ரூபாய் விலை; அதன் உள் வைக்கப்பட்ட பொருள்களின் மதிப்பு சுமார் ஆயிரம் ரூபாய். ஆக, பத்து பெட்டிகள், உள்ளடக்கப் பொருள்களுக்கான மொத்தச் செலவு சுமார் இருபதாயிரம் ரூபாய்.

அமைச்சர் தங்கிய தைக்காடு கெஸ்ட் ஹவுசுக்குப் பத்து பரிசுப் பெட்டிகளும் வந்தன. மத்திய அதிகாரிகளிடம் தகவல் தெரிவித்து விட்டு, அவர்கள் புறப்படும் சமயத்தில் அவை அனைத்தையும் விமான நிலையத்துக்கு அனுப்ப ஏற்பாடுகளும் செய்யப்பட்டது.

டெல்லி போய்ச் சேர்ந்த மத்திய அதிகாரிகள் ஐந்து பெட்டிகளே தங்களுடன் வந்து சேர்ந்ததாகவும் மற்ற ஐந்தும் எங்கே என்றும் 'அன்அஃபிஷியல்' (அதிகாரபூர்வமில்லாத) கேள்வி எழுப்பினார்கள். விமான நிலையத்தினர் ஐந்து பெட்டிகளே தங்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகக் கூற, மற்ற ஐந்தும் திருவனந்தபுரத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டது தெரிய வந்தது!

மத்திய அரசு அதிகாரிகளை இவ்வாறு 'கவனிப்பது' பிரிட்டிஷ் அரசாட்சி காலத்திலிருந்தே நிலவி வரும் வழக்கம் என்கிறார்கள்! தங்களுக்கும் இதில் ஆதாயம் இருப்பதால் லோகல் அதிகாரிகள் இப் பழக்கத்தைத் தொடர்கிறார்கள். சாதாரணமாகக் காதும் காதும் வைத்த மாதிரி நடக்கும் இந்த 'சம்பிரதாயச் சடங்கு' இம்முறை ஐந்து பெட்டிகள் காணாமற் போனதால் அம்பலத்துக்கு வந்து விட்டது!

கேரள முதல்வர் கருணாகரன் இப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை என மறுத்துள்ளார்! ஆனால் பத்து சூட்கேஸ்கள் தைக்காடு கெஸ்ட் ஹவுஸுக்கு வந்திறங்கியதைப் பார்த்ததாகப் பத்திரிகையாளர்கள் கூறுகிறார்கள். அது மட்டுமல்ல; அவை வாங்கப்பட்ட கடையின் பெயர், அவற்றுக்கான பில் எண் என எல்லா விவரங்களும் கூறுகிறார்கள்!

எல்லாவற்றுக்கும் மேலான கொடுமை : இந்த சூட்கேஸ் பரிசுகளுக்கான பணம், வறட்சி நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டிருக்கிறது எனத் தெரியவந்துள்ளது! நேர்மை வறட்சிக்கு நிவாரணம் எது?

– எஸ். எஸ். மணி

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி, பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் : ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

# கல்கி

**146 - வது**
**தியாகராஜ**
**ஆராதனை**
**சிறப்பு மடல்**



# திருவையாற்றிலே தியாகப்பிரம்மம்

சோழன் போக்குவரத்துக் கழகம்......

அம்பாசிடர், பியட், மாருதிகள்.....

அதன் காரணமாகப் புழுதிப் படலம்.........

ஜனசந்தடி...............

இவை எல்லாவற்றையும் மறந்தால், அங்கு திருவையாறு தெரிகிறது. புனித காவேரி தெரிகிறது. ஆன்மீகம் தெரிகிறது. அழகுச் கலையுணர்வு புரிகிறது. கர்நாடக சங்கீதத்தின் மணம் வீசுகிறது. அங்கே சமாதி நிலையில் தியாகேசன்! அவரது இசையின் ஜீவஸ்வரங்கள் இயற்கை அன்னையோடு கலந்து ஓங்காரமாய் விளங்குகிறது. திருமஞ்சன வீதி. அவர் வாழ்ந்த வீடு. அவர் நடந்து சென்ற தெருக்கள். அவர் ஸ்நானம் செய்த படித் துறை; இவைகளை பௌதீக முறையில் உணரும் போது மீண்டும் மீண்டும் புல்லரிக்கிறது. இருக்காதா? இது ராம ஸ்மரண பூமியாயிற்றே! சதா ஸர்வ காலமும் ஸ்ரீராமனே கதி என்று இருந்த வராயிற்றே தியாகப்பிரம்மம்!!


ஸ்ரீ தியாகராஜப் பெருமான் சொல்கிறார், ''முரிபெமு கலிகெ கதா ராம'' என்ற கிருதியில், ''ஓ ராமா, உனக்கு இந்த இடம், இந்த பஞ்சநதி க்ஷேத்ரம் ரொம்பவும் பிடித்திருக்கிறது போலும். புனிதமும், அழகும் நிறைந்த இடம் ராமா. இங்கு ஈடில்லாத தென்றல் வீசுகிறது; மாடங்கள் உப்பரிகைகள் உள்ள வீடுகள் செல்வச் செழிப்பை உணர்த்துகின்றன; மறையவர் வேத கோஷம் செய்கின்றனர்; சிவபெருமான் தாமே உவந்து கோயில் கொண்ட இடம்; எப்பேர்ப்பட்ட உயர்ந்த ஸ்தலம் இது!'' என்று பக்தி பரவசத்துடன் பார்க்கிறார். ''இந்தச் சோழ நாட்டிலே குயில்கள் கூவும் அழகான தோட்டங்களில் வாசனைப் பூக்களும் அநேகமாக உள்ளன'' என்று சொல்லிக் கொண்டே போகிறார். ''உலகிலேயே அழகு மிகுந்த சோழ நாடு'' என்றும் கூறுகிறார்.

அப்பேர்ப்பட்ட புனித இடத்தை நாம் சரியாகப் பேணிக் காப்பாற்ற வேண்டாமா? தியாகபிரும்மத்துக்கு நமது மரியாதையை உரிய முறையில் செலுத்த வேண்டாமா? பீதோவன், மொஸார்ட் போன்ற இசை மேதைகளுக்கு எல்லாம் உலகம் வியக்கும் அளவுக்கு, நினைவாலயம் இருக்கும் போது, நாதப்பிரம்மமாக விளங்கிய ஸ்ரீ தியாகப்பிரம்மத்திற்கு ஒரு சிறப்பான நினைவாலயம் திருவையாற்றிலே வேண்டாமா?

''கர்நாடக இசைக்காகப் பாடுபட்ட அந்த மகானுக்காக திருவையாறு ஸ்ரீ தியாகப்பிரம்ம சபையினர் கான்கிரீட்டாக என்ன செஞ்சிருக்காங்க?'' என்று சற்று கோபமாகவே நாம் கேட்டு விட்டோம். சபையின் காரியதரிசி குன்னக்குடி, அவரது வழக்கமான சிரிப்பின் மூலம் நமது கோபத்தை இருந்த இடம் தெரியாமல் அடித்து விட்டார். ''நீங்க நினைக்கிற மாதிரி கான்கிரீட்டாக (சற்று அழுத்தமாகவே) ப்ரம்மத்திற்குச் செய்து கொண்டு தான் இருக்கிறோம்'' என்று தமது இணைக் காரியதரிசி செக்கல் பாஸ்கரனைப் பார்த்தார். சபையின் மற்ற முக்கியஸ்தர்களான பஞ்சநதம், கணேசன், குமாரசாமி எல்லோரும் உடன்வர, குன்னக்குடி நம்மைச் சமாதிக்கு முன்புறம் அழைத்துச் சென்றார். அங்கே பெரிய கான்கிரீட் கட்டடம் உருவாகிக் கொண்டிருந்தது. அதுதான் திருவையாற்றிலே ஸ்ரீ தியாகப்பிரம்மத்திற்காகக் கட்டப்பட்டு வரும் மாபெரும் நினைவாலயம். சபைத் தலைவர் திரு. ஜி. கே. மூப்பனார் தலைமையில் இந்தப் பணி சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது.

''கர்நாடக இசைக் கலைஞர்களைப் போற்றி ஆதரித்து வரும் சேவையை காலங் காலமாகச் செய்து வரும் பெருமை மூப்பனார் குடும்பத்தைச் சாரும். அந்த வகையில் உலகம் வியக்கப் போகும் நினைவாலயத்திற்கு திரு ரங்கசாமி மூப்பனாரும் தம்மை

* நினைவாலயத்தின் தோற்றம்




இது ஒரு
லலிதா ஜுவல்லர்ஸ் வெளியீடு

முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்'' என்றார் குன்னக்குடி.

''போன வருடமே அடிக்கல் நாட்டி, கட்டடம் கட்டி, சென்ற உற்சவத்தின் போதே, முதல் கட்டமான அன்னதான மண்டபம் திறக்கப்பட்டு, அங்கு அனைவருக்கும் சாப்பாடும் போடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக எங்களுக்கு நன்கொடை வர வர, ஒவ்வொரு கட்டமாக இந்த மாபெரும் நினைவாலயத்தைக் கட்டி முடித்து விடுவோம்'' என்றார்.

ஸ்ரீ தியாகப்பிரம்மம் மறைந்து சரியாக 144 ஆண்டுகளுக்குப் பிறகு, அதாவது 12 மாமாங்கங்களுக்குப் பிறகு கட்டப்படும் இந்த ஸ்ரீ தியாகப் பிரம்ம நினைவாலயம் கர்நாடக இசை உலகத்துக்கு மட்டுமல்ல, நமது இந்திய மண்ணுக்கே பெருமை சேர்க்கும். ஒரு மாமாங்கமாகச் செயலாளராகப் புணிபுரிந்து வரும் குன்னக்குடியின் முயற்சிக்கும் இது பெருமைதான். சுற்றுலாப் பயணிகளுக்கு இது ஒரு முக்கிய இடமாக விளங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. உலகம் போற்றக்கூடிய அளவில் விளங்கப் போகும் இந்த நினைவாலயத்திற்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று இப்பொழுது கணிக்கப்பட்டிருக்கிறது.

இதன் முகப்பு தம்பூரா வடிவில் அமையப் பெற்றிருக்கும். ''சதா ஸர்வ காலமும் தம்பூரா துணையோடு பக்திபூர்வமாகப் பாடல்களை இயற்றியிருக்கும் ஸ்ரீ தியாகப்பிரம்மத்திற்கு இதைவிட நல்ல நினைவுச் சின்னம் அவருக்கு வேறு என்ன இருக்க முடியும் என்ற காரணத்தினாலேயே இப்படி கட்ட முடிவு செய்தோம்'' என்றார் குன்னக்குடி பக்தியுடன். கர்நாடக இசையில் சப்த ஸ்வரங்களைக் குறிக்கும் வகையில் சப்த ஸ்வர வாசல், ஓங்கார நாதத்தைக் குறிக்கும் வகையில் நாத தியான மண்டபம், ஸ்ரீ தியாகப்பிரம்மம் இயற்றிய பஞ்சரத்ன கீர்த்தனைகளைக் குறிக்கும் வகையில் பஞ்சரத்ன மண்டபம், அன்னதான மண்டபம் (இப்போது கட்டி முடிக்கப்பட்டுள்ளது), இசை நூலகம், (இது ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் அத்தனை கீர்த்தனைகளும் கிடைக்க வழிவகுக்கும்.) கல்யாண மகால், 35 தாளங்களைக் குறிக்கும் வகையில் படிக்கட்டுகள் என்று சங்கீதமயமாக அமையும் மண்டபம் இது.

''கர்நாடக இசையின் மிக முக்கியமான 72 மேளகர்த்தா ராகங்களை நினைவுபடுத்தும் வகையில் 72 அறைகளும் மண்டபத்தினுள் அமையும்'' என்றார் குன்னக்குடி.

''விழாக் காலங்களில் இசை அன்பர்களுக்கும், இசைக் கலைஞர்களுக்கும் இது மிகவும் பயன்படும்'' என்றார்கள் உடனிருந்த சபா முக்கியஸ்தர்கள்.

இப்படியாக ஸ்ரீ தியாகப்பிரம்ம சபையினர், புனித க்ஷேத்ரமாகிய திருவையாற்றிலே கர்நாடக இசைக்குச் சரித்திரம் படைக்க இருக்கிறார்கள். அவர்களது எண்ணம் கருங்கல், இரும்பு, சிமெண்ட், கலவை போல் கான்கிரீட்டாகத் தெரிகிறது. நிச்சயம் நிறைவேற்றுவார்கள். ஆனால் அதற்குத் தமிழ் மக்களின், இசை அன்பர்களின் ஒத்துழைப்பு வேண்டும். நன்கொடைகளை வாரி வழங்க வேண்டும். நன்கொடைகளுக்கு 80 ஜி-யில் வருமான வரிவிலக்கு உண்டு. ''உங்களை இருகரம் கூப்பிக் கேட்டுக் கொள்கிறோம். பெரிய மனதுடன் நன்கொடைகளை அளியுங்கள்'' என்கின்றனர் நிர்வாகிகள்.



* குன்னக்குடி

* சிக்கில் பாஸ்கரன்





* ரமணி


* சி. ஜி. குமரேசன்





* எம். ஆர். பஞ்சநதம்

* டி. குமாரசாமி





இது ஒரு
லலிதா ஜுவல்லர்ஸ் வெளியீடு

''ஸ்ரீ தியாகப்பிரம்ம மகோத்சவ சபா பில்டிங் ஃபண்ட், 31, திருமஞ்சன வீதி, திருவையாறு, தஞ்சை மாவட்டம், தமிழ்நாடு'' அல்லது ''செயலாளர், குன்னக்குடி வைத்தியநாதன், 5-ஏ ராஜா தெரு, மந்தவெளி, சென்னை - 600 028'' என்ற முகவரிக்குக் காசோலையாகவோ, டிராப்ட்டாகவோ க்ராஸ் செய்து அனுப்பலாம்.

**ஸ்ரீ தியாகப்பிரம்ம மகோத்சவ சபை, திருவையாறு**

**31, திருமஞ்சன வீதி, திருவையாறு**

**தலைவர் : திரு ஜி. கே. மூப்பனார்**
**உபதலைவர் : திரு வலங்கைமான் சண்முக சுந்தரம்**
**டிரஸ்டிகள் : திரு ரங்கசாமி மூப்பனார்**
**திருமதி வைஜயந்தி மாலா பாலி**
**திரு அன்பு வேதாசலம், பட்டுக்கோட்டை**
**திரு எஸ். கணேசன், பி.ஏ. பி.எல்., திருவையாறு**
**திரு ஜி. சம்மந்தம், பருத்திக்குடி**
**திரு ஆர். யக்ஞ ராமன் பி.ஏ.பி.எல்., சென்னை**
**திரு ஏ. கே. சி. நடராஜன், திருச்சி**
**திரு ஆர். பிச்சுமணி ஐயர், சென்னை**
**திரு என். ஏ. மாரிமுத்து, காரைக்குடி**
**திரு ஆர். சுவாமிநாதன், தஞ்சாவூர்**
**திரு வி. டி. சுவாமி, சென்னை**
**திரு உம்முடி ஸ்ரீதர், சென்னை.**
**செயலாளர்கள் : திரு குன்னக்குடி வைத்தியநாதன்**
**திரு சிக்கில் பாஸ்கரன்**
**பொருளாளர் : திரு டி. குமாரசாமி**
**துணைச் செயலாளர்கள் : திரு எம். ஆர். பஞ்சநதம்**
**திரு புல்லாங்குழல் ரமணி, சென்னை**
**திரு ஆலத்தூர் எஸ். தியாகராஜன், திருச்சி**
**திரு சி.ஜி. குமரேசன், சென்னை**
**திரு டி. ஜி. சுப்பிரமணியன், திருக்கருகாவூர்**

**- ராம்கி**

## ஸ்ரீ தியாகப்பிரும்ம ஆராதனை விழா இசை நிகழ்ச்சிகள்

### 7.1.1993 - வியாழக்கிழமை மாலை

*5.00 - 6.00 மணி :* நாமகிரிப்பேட்டை ஸ்ரீ கே. கிருஷ்ணன், நாமகிரிப்பேட்டை ஸ்ரீ கே. முருகன் - நாதஸ்வரம்; தெல்லவிக் கோட்டை ஸ்ரீ ஆர். மூவிரத்தினம், ஆலங்குடி ஸ்ரீ கே. ஆறுமுகம், சேந்தமங்கலம் ஸ்ரீ ஏ. மணிகண்டன் - தவில்

*6.00 - 7.00 மணி*

**146 வது ஆராதனை துவக்க விழா**

*7.00 - 7.30 மணி :* ஸ்ரீ கே. ஜே. யேசுதாஸ் - வாய்ப்பாட்டு; ஸ்ரீ தியாகராஜன் - வயலின்; ஸ்ரீ டி. கே. மூர்த்தி - மிருதங்கம்; ஸ்ரீ ஹரிகிருஷ்ணன் - கடம்

*7.30 - 8.00 மணி :* ஸ்ரீ சிட்டிபாபு - வீணை; ஸ்ரீ கே. வீரபத்ரராவ் - மிருதங்கம்; உமையாள்புரம் ஸ்ரீ கே. நாராயணசுவாமி - கடம்

*8.00 - 8.20 மணி :* டெல்லி சகோதரிகள் : ஸ்ரீமதி சாந்தி கிருஷ்ணராவ், ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி மூர்த்தி - வாய்ப் பாட்டு; ஸ்ரீமதி எஸ். ரத்னா - வயலின்; மேலக்காவேரி ஸ்ரீ கே. பாலாஜி - மிருதங்கம்

*8.20 - 8.40 மணி :* கதிரி ஸ்ரீ கோபால்நாத் - சாக்ஸபோன்; ஹரித்வாரமங்கலம் ஸ்ரீ ஏ. கே. பழனிவேல் - தவில்

*8.40 - 9.00 மணி :* மஹாராஜபுரம் ஸ்ரீ நாகராஜன் - வாய்ப்பாட்டு; ஸ்ரீ சி. தியாகராஜன் - வயலின்; ஸ்ரீ ஏ. எஸ். ரங்கநாதன் - மிருதங்கம்; ஸ்ரீ ஏ. எஸ். முரளி - கடம்

*9.00 - 9.15 மணி :* ஸ்ரீ பூர்ணசந்தர் - வாய்ப்பாட்டு; திருவாரூர் மங்கநாயகி - வயலின்; ஹரிஹரமங்கலம் ஸ்ரீ ஆர். ஜே. பூவராகன் - மிருதங்கம்

*9.15 - 9.35 : மணி :* ஸ்ரீ பி. வி. ராமன், ஸ்ரீ பி. வி. லக்ஷ்மணன் - வாய்ப்பாட்டு; ஆலப்பாக்கம்பட்டி ஸ்ரீ கணேசன் - வயலின்; ஸ்ரீ கே. ஆர். கணேஷ் - மிருதங்கம்; ஸ்ரீ ஹரிசங்கர் - கஞ்சிரா

*9.35 - 9.55 மணி :* ஸ்ரீமதி சுதா சுப்ரமணியம் - வாய்ப்பாட்டு; ஸ்ரீ வி. எஸ். கதிர்சன் - வயலின்; பாபநாசம் ஸ்ரீ குமார் - மிருதங்கம்

*9.55-10.15 மணி :* ஸ்ரீமதி டி. ஆர். நவநீதம் - புல்லாங்குழல்; மேலக்காவேரி தியாகராஜன் - வயலின்; ஸ்ரீ பால சங்கர் - மிருதங்கம்; ஸ்ரீ ஏ. எஸ். சங்கர் - கடம்

*10.15 - 10.35 மணி :* ஸ்ரீ ஷேக்சின்னமௌலானா, ஸ்ரீ எஸ். காசிம் - நாதஸ்வரம்; வலங்கைமான் ஸ்ரீ ஏ. சண்முகசுந்தரம் பிள்ளை, திருச்சேறை ஸ்ரீ டி. ஜி. முத்துக்குமாரசாமிப்பிள்ளை, மன்னார்கோட்டை ஸ்ரீ எஸ். சுப்பிரமணியம் - தவில்

*10.35 - 10.55 : மணி :* புதுச்சத்திரம் ஸ்ரீ பி. கே. முத்து வீருசாமி, ஸ்ரீ பி. கே. எம். நாராயணசாமி, ஸ்ரீ பி. கே. எம். பாலமுரளி கிருஷ்ணன் - நாதஸ்வரம்; திருவிடைமருதூர் ஸ்ரீ டி. வி. வெங்கடேசபிள்ளை, புதுச்சத்திரம் ஸ்ரீ பி. கே. எம். சண்முகசுந்தரம் - தவில்

*10.55 - 11.15 மணி :* திருவிடைமருதூர் ஸ்ரீ பி. எஸ். வி. ராஜா, ஸ்ரீ எஸ். செல்வம் - நாதஸ்வரம்; தஞ்சாவூர் ஸ்ரீ டி. ஆர். கோவிந்தராஜன், வேதாரண்யம் ஸ்ரீ வி. ஜி. பால சுப்பிரமணியன் - தவில்

*11.15 - 11.35 மணி :* சின்னமனூர் பிரதர்ஸ் ஸ்ரீ கே. எம். தக்ஷிணாமூர்த்தி, ஸ்ரீ கே. எம். உத்திராபதி - நாதஸ்வரம்; நெல்லை ஸ்ரீ எம். துரை, அம்பர்கோவில் ஸ்ரீ எஸ். சுப்பிரமணியன், திருவிடைமருதூர் ஸ்ரீ டி. வி. வெங்கடேசன் - தவில்

*11.35 - 11.55 மணி :* ஸ்ரீ மதுரைபாண்டி குழுவினர் - நாதஸ்வரம்

*11.55 - 12.15 மணி :* ஸ்ரீ டி. எம். பக்கிரிசாமி குழுவினர் - நாதஸ்வரம்

*12.15 - 12.35 மணி :* திருவிழிமிழலை ஸ்ரீ டி. எம். பார்த்திபன், திருமலை ஸ்ரீ டி. டி. மாதவன் - நாதஸ்வரம்; திருக்கண்டேஸ்வரம் ஸ்ரீ டி. ஜி. ரவிச்சந்திரன், திருவிழந்தூர் ஸ்ரீ டி. ஆர். கண்ண தாசன், ஸ்ரீ எஸ். குமரகுரு - தவில்

*12.35 - 12.55 மணி :* வடுவூர் ஸ்ரீ எஸ். என். ஆர். கிருஷ்ணமூர்த்தி, ஸ்ரீ எம். ஆர். வெங்கடேஷ் - நாதஸ்வரம்; திருக்காட்டுப்பள்ளி டி. ஆர் ராமநாதன், திருக்காட்டுப்பள்ளி டி. ஆர். கணேசன் - தவில்

### 8.1.93 - வெள்ளிக்கிழமை மாலை

*5.15 - 5.30 மணி :* ஸ்ரீமதி நிர்மலா ஸ்ரீநிவாசன் - வாய்ப்பாட்டு; ஸ்ரீமதி ராஜலக்ஷ்மீசன் - வயலின்; குழுமணி ஸ்ரீ ஜி. ராமகிருஷ்ணன் - மிருதங்கம்

இது ஒரு லலிதா ஜுவல்லர்ஸ் வெளியீடு

5.30 - 5.45 மணி : நாகை ஸ்ரீ முரளீதரன் - வயலின்; ஸ்ரீ ஹரிகுமார் - மிருதங்கம்; ஸ்ரீ நாராயணவேல் - கஞ்சிரா

5.45 - 6.00 மணி : ஸ்ரீமதி பிரேமா மல்லிகார்ஜுன் - வீணை; பிரபஞ்சம் ஸ்ரீ ரவீந்திரன் - மிருதங்கம்; ஸ்ரீ வி. பத்மநாபன் - கடம்

6.00 - 6.20 மணி : பம்பாய் ஸ்ரீமதி ஜெயஸ்ரீ - வாய்ப்பாட்டு; ஸ்ரீ மணிகண்டன் - வயலின்; நெய்வேலி ஸ்ரீ நாராயணன் - மிருதங்கம்

6.20 - 6.40 மணி : ஸ்ரீ கே. வி. கிருஷ்ணன் - வீணை; தஞ்சாவூர் ஸ்ரீ செல்வப்பிரகாசம் - மிருதங்கம்; உமையாள்புரம் ஸ்ரீ நாராயண சுவாமி - கடம்

6.40 - 7.00 மணி : வள்ளியூர் ஸ்ரீ குருமூர்த்தி - வாய்ப்பாட்டு; ஸ்ரீமதி ராதா நாராயணன் - வயலின்; ஸ்ரீ ஏ. எஸ். ரங்கநாதன் - மிருதங்கம்; ஸ்ரீ பத்மநாபன் - கடம்

7.00 - 7.20 மணி : ஸ்ரீமதி உமா சுப்பிரமணியம் - வாய்ப்பாட்டு; ஸ்ரீ எம். பாலகிருஷ்ணன் - வயலின்; மதுரை ஸ்ரீ தியாகராஜன் - மிருதங்கம்

7.20 - 7.40 மணி : ஸ்ரீமதி சந்திரிகா, ஸ்ரீமதி மங்களம் - வாய்ப்பாட்டு; ஸ்ரீ வி. டி. ராஜு - வயலின்; கும்பகோணம் ஸ்ரீ ஏ. சரவணன் - மிருதங்கம்; ஸ்ரீ ஏ. எஸ். முரளி - கடம்; திருக்கடையூர் ஸ்ரீ டி. டி. வைத்தியநாதன் - மோர்சிங்

7.40 - 8.00 மணி : நெய்வேலி ஸ்ரீ சந்தானகோபாலன் - வாய்ப்பாட்டு; ஸ்ரீ பூர்ணசந்தர் - வயலின்; திருச்சூர் ஸ்ரீ நரேந்திரன் - மிருதங்கம்; திருக்கண்ணபுரம் ஸ்ரீ சௌரி ராஜன் - மோர்சிங்

8.00 - 8.20 மணி : அம்பலம் ஸ்ரீ துர்காபிரசாத் - கோட்டு வாத்தியம்; மேலக்காவேரி ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி - மிருதங்கம்; ஸ்ரீ ஏ. எஸ். சங்கர் - கடம்

8.20 - 8.40 மணி : ஸ்ரீமதி செல்வா அனந்தலக்ஷ்மி - வாய்ப்பாட்டு; ஸ்ரீமதி எஸ். ரத்னா - வயலின்; காரைக்குறிச்சி ஸ்ரீ வேங்கட்ராம் - மிருதங்கம், மதராஸ் ஸ்ரீ கல்யாணராமன் - கடம்

8.40 - 9.00 மணி : ஸ்ரீமதி எஸ். கேசி - புல்லாங்குழல்; ஸ்ரீ வி. எஸ். சுதர்சன் - வயலின்; ஸ்ரீ எஸ். தியாகராஜன் - மிருதங்கம்; திருச்சி ஸ்ரீ முரளி - கடம்

9.00 - 9.15 மணி : ஸ்ரீ ஜி. குமரேசன் - வயோலா; நெய்தூர் ஸ்ரீ கோபாலகிருஷ்ணன் - வயலின்; ஸ்ரீ கே. ஆர். கணேஷ் - மிருதங்கம்; ஸ்ரீ ஜி. ஹரிசங்கர் - கஞ்சிரா; உமையாள்புரம் ஸ்ரீ நாராயணசுவாமி - கடம்; ஸ்ரீ ஏ. கிருஷ்ணன் - மோர்சிங்

9.15 - 9.35 மணி : ஸ்ரீமதி ஈ. காயத்ரி - வீணை; திருச்சி ஸ்ரீ நாராயணவேல் - மிருதங்கம்; திருச்சி ஸ்ரீ முரளி - கடம்

9.35 - 9.55 மணி : திருப்பூந்துருத்தி ஸ்ரீ வெங்கடேசன் - வாய்ப்பாட்டு; ஆனையாம்பட்டி ஸ்ரீ கணேசன் - வயலின்; மாதிரிமங்கலம் ஸ்ரீ ஸ்வாமிநாதன் - மிருதங்கம்; ஸ்ரீ ஹரிசங்கர் - கஞ்சிரா

9.55 - 10.15 மணி : ஸ்ரீ சஞ்சய் சுப்பிரமணியன் - வாய்ப்பாட்டு; ஸ்ரீ எம். பாலகிருஷ்ணன் - வயலின்; பிரபஞ்சம் ஸ்ரீ ரவீந்திரன் - மிருதங்கம்

10.15 - 10.35 மணி : சேஷம்பட்டி ஸ்ரீ டி. சிவலிங்கம் குழுவினர் - நாதஸ்வரம்

10.35 - 10.55 மணி : காஞ்சிபுரம் ஸ்ரீ டி. கே. சம்பப்பா, செய்யாறு ஸ்ரீ கணேசன் - நாதஸ்வரம்; வேலூர் ஸ்ரீ டி. எம். குட்டியப்பா - தவில்

10.55 - 11.15 மணி : கோட்டூர் ஸ்ரீ என். வீராசாமி, உடையார்கோவில் ஸ்ரீ பி. ஜெயராமன் - நாதஸ்வரம், திருராமேஸ்வரம் ஸ்ரீ ராதாகிருஷ்ணன் - தவில்

11.15 - 11.35 மணி : குறிஞ்சிப்பாடி ஸ்ரீ எஸ். பழனிவேல், குறிஞ்சிப்பாடி ஸ்ரீ எஸ். பி. தமிழ்செல்வம் - நாதஸ்வரம்; வடலூர் ஸ்ரீ எஸ். கோதண்டராமன், குறிஞ்சிப்பாடி ஸ்ரீ ஆர். செல்வராஜ - தவில்

11.35 - 11.55 மணி : என். கே. சின்னதம்பி பிள்ளை குழுவினர் - நாதஸ்வரம்

11.55 - 12.15 மணி : நாதஸ்வரம்

12.15 - 12.35 மணி : திருக்களர் ஸ்ரீ ஏ. ஷண்முகசுந்தரம் பிள்ளை, ஸ்ரீ துரை பாரதிதாசன் - நாதஸ்வரம்; திருராமேஸ்வரம் ஸ்ரீ டி. பி. ராதாகிருஷ்ணன், திருக்களர் ஸ்ரீ கே. விஸ்வநாதன் - தவில்

12.35 - 12.55 மணி : எண்கண் ஸ்ரீ வி. ஆர். சின்னையா, ஸ்ரீ அருணகிரி - நாதஸ்வரம்; சிதம்பரம் ஸ்ரீ சி. டி. கண்ணப்பன், நீடாமங்கலம் ஸ்ரீ எஸ். எஸ். காமாட்சி சுந்தரம் - தவில்

12.55 - 1.15 மணி : ஸ்ரீ என். ஆர். பி. ரவிச்சந்திரன், ஸ்ரீ கே. எஸ். எஸ். சுப்பிரமணியம் குழுவினர் - நாதஸ்வரம்

1.15 - 1.35 மணி : ஸ்ரீ ஈ. வெங்கடேஸ்வரன் குழுவினர் - நாதஸ்வரம்; ஸ்ரீ குப்பம்பட்டு முருகேசன் - தவில்

## 9.1.93 - சனி மாலை

5.30 - 5.45 மணி : ஸ்ரீமதி லலிதா தோராமன் - வாய்ப்பாட்டு; ஸ்ரீமதி ராதா சந்த்ரசேகர் - வயலின்; திருப்பூர் ஸ்ரீ ஸ்ரீதர்குமார் - மிருதங்கம்

5.45 - 6.00 மணி : ஸ்ரீமதி ஆர். ராணி - வீணை; ஸ்ரீ மதுசூதன் - மிருதங்கம்

6.00 - 6.20 மணி : ஸ்ரீ ஆர். பிச்சுமணி - வீணை; ஸ்ரீ பி. விஸ்வநாதன் - மிருதங்கம்

6.20 - 6.40 மணி : குளிக்கரை ஸ்ரீ விஸ்வலிங்கம் - வாய்ப்பாட்டு; த்வாரம் மங்கதாயாரு - வயலின்; மாதிரி மங்கலம் ஸ்ரீ சுவாமிநாதன் - மிருதங்கம்

6.40 - 7.00 மணி : ஸ்ரீமதி சுகந்தா காளமேகம் - வாய்ப்பாட்டு; மேலக்காவேரி ஸ்ரீ தியாகராஜன் - வயலின்; பல்லடம் ஸ்ரீ ராமச்சந்திரன் - மிருதங்கம்

7.00 - 7.20 மணி : ஸ்ரீமதி ராதா நாராயணன், ஸ்ரீமதி மீரா சிவராமகிருஷ்ணன் - வயலின்; ஸ்ரீ மதுசூதனன் - மிருதங்கம்; பல்லடம் ஸ்ரீ வி. கிருஷ்ணமூர்த்தி - கஞ்சிரா; ஸ்ரீ உ. டி. பாலசுப்பிரமணியன் - கடம்

7.20 - 7.40 மணி : ஹைதராபாத் சகோதரிகள் : ஸ்ரீமதி லலிதா, ஸ்ரீமதி ஹரிப்ரியா - வாய்ப்பாட்டு; பக்கல ஸ்ரீ ராமதாஸ் - வயலின்; பாபநாசம் ஸ்ரீ குமார் - மிருதங்கம்; திருப்பூர் ஸ்ரீ ஸ்ரீதர்குமார் - கஞ்சிரா

7.40 - 8.00 மணி : ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மி நடேசன் - வாய்ப்பாட்டு; ஸ்ரீ பி. வி. ராகவன் - வயலின்; தாராபுரம் ஸ்ரீ கணபதி - மிருதங்கம்; திருக்கடையூர் ஸ்ரீ டி. கே. தக்ஷிணாமூர்த்தி - கஞ்சிரா; மதராஸ் கல்யாணராமன் - கடம்; மாயவரம் ஸ்ரீ டி. எஸ். ராஜாராமன் - மோர்சிங்

8.00 - 8.20 மணி : ஐயங்கரை ஸ்ரீ சோமசுந்தரம் - வீணை; ஸ்ரீ டி. கே. ராமகிருஷ்ணன் - மிருதங்கம்; ஸ்ரீ டி. டி. பால கிருஷ்ணன் - கடம்

8.20 - 8.40 மணி : ஸ்ரீமதி கருணா புருஷோத்தமன் - வாய்ப்பாட்டு; ஸ்ரீமதி ராதா நாராயணன் - வயலின்; மேலக்காவேரி ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி - மிருதங்கம்; ஸ்ரீ காமாட்சிசுந்தரம் - கஞ்சிரா

8.40 - 9.00 மணி : ஸ்ரீமதி எஸ். டி. சௌந்தரவல்லி - வாய்ப்பாட்டு; ஸ்ரீ டி. கே. பத்மநாபன் - வயலின்; ஸ்ரீ சோமராஜு - மிருதங்கம்

9.00 - 9.15 மணி : செங்கம் ஸ்ரீ ஆர். பாஸ்கரன், செங்கம் ஸ்ரீ வி. பாலசுப்பிரமணியன் - வயலின்; ஸ்ரீ கே. ஆர். கணேஷ் - மிருதங்கம்; திருச்சி ஸ்ரீ நாராயணவேல் - கஞ்சிரா; ஸ்ரீ ஏ. எஸ். சங்கர் - கடம்; தஞ்சை நாக ரத்தினம் - மோர்சிங்

அகில பாரத நிகழ்ச்சி

9.15 - 9.30 மணி : அகில இந்திய ரேடியோ பாலன்சிங்

9.30 - 10.15 மணி : ஸ்ரீ கே. வி. நாராயணசுவாமி - வாய்ப்பாட்டு; ஸ்ரீமதி பத்மா நாராயணசுவாமி - துணை வாய்ப்பாட்டு; ஸ்ரீ வி. வி. சுப்பிரமணியம் - வயலின்; திருவாரூர் ஸ்ரீ பக்தவத்சலம் - மிருதங்கம்

10.15 - 11.00 மணி : அன்னவரப்பு ஸ்ரீ ராமசுவாமி - வயலின்; ஸ்ரீ கே. வி. பிரசாத் - மிருதங்கம்; ஸ்ரீ ஜி. ஹரிசங்கர் - கஞ்சிரா; உமையாள்புரம் ஸ்ரீ நாராயண சுவாமி - கடம்

11.00 - 11.20 மணி : பின்னர் அறிவிக்கப்படும்

இது ஒரு லலிதா ஜுவல்லர்ஸ் வெளியீடு

*11.20 - 11.40 மணி :* கொப்பம்பட்டி ஸ்ரீ எஸ். பாஸ்கரன், ஸ்ரீ பி. ஜெகன்னாதன் - நாதஸ்வரம்; திருவிடைமருதூர் ஸ்ரீ டி. வி. வெங்கடேசன், கொப்பம்பட்டி ஸ்ரீ முருகேசன் - தவில்

*11.40 - 12.00 மணி :* கோட்டையூர் ஸ்ரீ ஜி. கோடி சுந்தரம், ஸ்ரீ ஜி. கே. சக்கரபாணி - நாதஸ்வரம்; சுவாமிமலை ஸ்ரீ சேதுராமன், தாராசுரம் ஸ்ரீ எஸ் குமார் - தவில்

*12.00 - 12.20 மணி :* திருப்பாம்புரம் சகோதரர்கள் : ஸ்ரீ டி. கே. எஸ். சுவாமிநாதன், ஸ்ரீ டி. கே. எஸ். மீனாட்சி சுந்தரம் குழுவினர் - நாதஸ்வரம்

*12.20 - 12.40 மணி :* கடலூர் சகோதரர்கள் : ஸ்ரீ எம். பி. பாலசந்தர், ஸ்ரீ எம். பி. பாலமுருகன் - நாதஸ்வரம்; கடலூர் ஸ்ரீ பி. சுப்பிரமணியன், கடலூர் ஸ்ரீ பி. ராமநாதன் - தவில்

*12.40 - 1.00 மணி :* குளிக்கரை ஸ்ரீ எஸ். பி. அமரானந்தம் குழுவினர் - நாதஸ்வரம்

*1.00 - 1.20 மணி :* தேமுருக்கூர் ஸ்ரீ டி. வி. ஆறுமுகம், தம்பபுரம் ஸ்ரீ டி. சிவசுப்பிரமணியன் - நாதஸ்வரம்; மூவலூர் ஸ்ரீ எம். எஸ். கல்யாணசுந்தரம், ஸ்ரீ டி. எம். சந்திரசேகர் - தவில்

*1.20 - 1.40 மணி :* திருப்பதி ஸ்ரீ சத்தியநாராயணா - நாதஸ்வரம்; கொப்பம்பட்டி ஸ்ரீ முருகேசன் - தவில்

*1.40 - 2.00 மணி :* மன்னார்குடி ஸ்ரீ எம். எஸ். ஆர். தக்ஷிணாமூர்த்தி - நாதஸ்வரம்; மன்னார்குடி ஸ்ரீ எம். எஸ். ராஜகோபாலன், மன்னார்குடி ஸ்ரீ எம். எஸ். ஆர். கோவிந்தசுவாமி, ஸ்ரீ எம். எஸ். ஆர். சின்னராஜா - தவில்

## 10.1.93 ஞாயிறு மாலை

*5.15 - 5.30 மணி :* மஹாராஜபுரம் ஸ்ரீ ஸ்ரீனிவாசன் - வாய்ப்பாட்டு; ஸ்ரீ டி. கே. பத்மநாபன் - வயலின்; நெய்வேலி ஸ்ரீ நாராயணன் - மிருதங்கம்

*5.30 - 5.45 மணி :* மதுரை ஸ்ரீமதி சரஸ்வதி லக்ஷ்மணன் - வாய்ப்பாட்டு; ஸ்ரீமதி சாவித்ரி சத்தியமூர்த்தி - வயலின்; காரைக்குடி ஸ்ரீ ஜெயராமன் - மிருதங்கம்

*5.45 - 6.00 மணி :* ஸ்ரீமதி கீதா நாராயணன் - வாய்ப்பாட்டு; குடந்தை ஸ்ரீ பாலசுந்தரம் - வயலின்; ஸ்ரீ டி. ஆர். கிருஷ்ணமூர்த்தி - மிருதங்கம்

*6.00 - 6.20 மணி :* ஸ்ரீ டி. எஸ். சங்கரன் - புல்லாங்குழல்; த்வாரம் மங்கதாயாரு - வயலின்; ஸ்ரீ எஸ். ஹரி - மிருதங்கம்; ஸ்ரீ ஏ. ஆர். செல்லப்பா - கடம்

*6.20 - 6.40 மணி :* மஹாராஜபுரம் ஸ்ரீ ராமச்சந்திரன் - வாய்ப்பாட்டு; நாகை ஸ்ரீ முரளீதரன் - வயலின்; தஞ்சாவூர் ஸ்ரீ சுப்பிரமணியன் - மிருதங்கம்; ஸ்ரீ காமாட்சி சுந்தரம் - கஞ்சிரா; ஸ்ரீ டி. டி. பாலசுந்தரம் - கடம்

*6.40 - 7.00 மணி :* ஸ்ரீ யு. ஸ்ரீனிவாஸ், ஸ்ரீ யு. ராஜேஷ் - மாண்டலின்; சிக்கில் ஸ்ரீ பாஸ்கரன் - வயலின்; ஸ்ரீ ஆர். ரமேஷ் - மிருதங்கம்; ஸ்ரீ வி. நாகராஜன் - கஞ்சிரா; ஸ்ரீ டி. வி. வாசன் - கடம்

*7.00 - 7.20 மணி :* ஸ்ரீ ராஜ்குமார் பாரதி - வாய்ப்பாட்டு; திருவள்ளூர் பார்த்தசாரதி - வயலின்; பிரபஞ்சம் ஸ்ரீ ரவீந்திரன் - மிருதங்கம்

*7.20 - 7.40 மணி :* குமாரி கல்யாணகுமாரி - வயலின்; ஸ்ரீ கே. வி. பிரசாத் - மிருதங்கம்; பாலக்காடு வி. ஏ. சுந்தரம் - கடம்

*7.40 - 8.00 மணி :* வாரூர் ஸ்ரீமதி ஜி. எஸ். நாகமணி ஸ்ரீநாத் - வாய்ப்பாட்டு; ஸ்ரீமதி சாவித்ரி சத்தியமூர்த்தி - வயலின்; தஞ்சாவூர் ஸ்ரீ சுப்பிரமணியன் - மிருதங்கம்; மதுரம் ஸ்ரீ கல்யாணராமன் - கடம்

*8.00 - 8.20 மணி :* ஸ்ரீ கே. பி. சிவானந்தம், ஸ்ரீமதி சாரதா சிவானந்தம் - வீணை; ஸ்ரீ கே. ஆர். கணேஷ் - மிருதங்கம்

*8.20 - 8.40 மணி :* ஸ்ரீ டி. வி. கோபாலகிருஷ்ணன் - வாய்ப்பாட்டு; சிக்கில் ஸ்ரீ பாஸ்கரன் - வயலின்; திருவாரூர் ஸ்ரீ பக்தவத்சலம் - மிருதங்கம்; ஸ்ரீ டி. வி. வாசன் - கடம்

*8.40 மணி - 9.00 மணி :* பம்பாய் சகோதரிகள் : ஸ்ரீமதி சி. சரோஜா, ஸ்ரீமதி சி. லலிதா - வாய்ப்பாட்டு; ஸ்ரீமதி உஷா ராஜகோபால் - வயலின்; ஸ்ரீ அம்பிலிக்குமார் - மிருதங்கம்; ஸ்ரீ எஸ். கோவிந்தராஜன் - கடம்

*9.00 - 9.20 மணி :* ஸ்ரீ டி. லோகநாத சர்மா - வாய்ப்பாட்டு; ஸ்ரீ பூர்ணசந்தர் - வயலின்; ஸ்ரீ டி. வி. கோபாலகிருஷ்ணன் - மிருதங்கம்; ஸ்ரீ டி. வி. வாசன் - கடம்

*9.20 - 9.40 மணி :* ஸ்ரீ வி. வி. சுப்பிரமணியன், ஸ்ரீ வி. வி. எஸ். முராரி - வயலின்; ஸ்ரீ ஆர். ரமேஷ் - மிருதங்கம்; மாயவரம் ஸ்ரீ சோமு - கஞ்சிரா

### தென் மண்டல கர்நாடக இசை

*9.40 - 10.00 மணி :* அகில இந்திய ரேடியோ பாலன் விங்

*10.00 - 10.30 மணி :* திருப்பாம்புரம் ஸ்ரீ சண்முகசுந்தரம் - வாய்ப்பாட்டு; கண்டதேவி ஸ்ரீ அழகிரிசாமி - வயலின்; ஸ்ரீ எம். எஸ். கந்தசாமி பிள்ளை - மிருதங்கம்; ஸ்ரீ சொக்கந்தர் - கஞ்சிரா

*10.30 - 11.00 மணி :* ஸ்ரீமதி கலாநித்திரா - வீணை; நெய்வேலி ஸ்ரீ நாராயணன் - மிருதங்கம்

*11.00 - 11.20 மணி:* மாம்பலம் சகோதரர்கள் : ஸ்ரீ எம். கே. சிவா, ஸ்ரீ எம். கே. எஸ். நடராஜன் - நாதஸ்வரம்; கோவிலூர் ஸ்ரீ வி. பழனிவேல், மாம்பலம் ஸ்ரீ எம். கே. எஸ். சண்முகம் - தவில்

*11.20 - 11.40 மணி:* ஸ்ரீ சேக். மஹபூப்சுபானி, ஸ்ரீமதி கலிஷபி மஹபூப் குழுவினர் - நாதஸ்வரம்

*11.40 - 12.00 மணி :* திருமங்கலம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம், திருச்சேறை ஸ்ரீ டி. எஸ். ஜெயராமன் குழுவினர் - நாதஸ்வரம்

*12.00 - 12.20 மணி :* சேலம் ஸ்ரீ பி. ஏ. சிதம்பரம் குழுவினர் - நாதஸ்வரம்

*12.20 - 12.40 மணி:* ஸ்ரீ ஆர். சுப்பிரமணியன், ஸ்ரீ ஆர். மாமுண்டியா பிள்ளை குழுவினர் - நாதஸ்வரம்

*12.40 1.00 மணி:* ராமநாதபுரம் முருகவருள் ஸ்ரீ எம். பி. சிவகுமார், ஸ்ரீ சிவகொழுந்து - நாதஸ்வரம்; ஸ்ரீ எம். பி. கிருஷ்ணமூர்த்தி - தவில்

*1.00 - 1.20 மணி:* பிரான்மலை ஸ்ரீ எம். எஸ். சண்முகசுந்தரம் குழுவினர் - நாதஸ்வரம்

*1.20 - 1.40 மணி :* திருக்கோவிலூர் ஸ்ரீ டி. எஸ். ஜ. பாபு, ஸ்ரீ டி. எஸ். ஏ. குமார் - நாதஸ்வரம்; கொங்கம்பட்டு ஸ்ரீ ஏ. வி. முருகையன், வேலூர் ஸ்ரீ பி. ஆர். எம். வெங்கடேசன், பாண்டிச்சேரி ஸ்ரீ எம். எம். சரவணன் - தவில்

## 11.1.93 திங்கள் மாலை

*5.15 - 5.30 மணி :* ஸ்ரீமதி வி. விஜயலக்ஷ்மி - வாய்ப்பாட்டு; த்வாரம் மங்கதாயாரு - வயலின்; பாபநாசம் ஸ்ரீ குமார் - மிருதங்கம்

*5.30 - 5.45 மணி :* ஸ்ரீமதி சம்பகக்குமார - வாய்ப்பாட்டு; ஸ்ரீமதி ராதா சுந்தரேசன் - வயலின்; மேலக்காவேரி ஸ்ரீ பாலாஜி - மிருதங்கம்

*5.45 - 6.00 மணி:* கண்டதேவி ஸ்ரீ அழகிரிசாமி, ஸ்ரீ விஜயராகவன் - வயலின்; குருவாயூர் ஸ்ரீ துரை - மிருதங்கம்; பாலக்காடு வி. ஏ. சுந்தரம் - கடம்

*6.00 - 6.20 மணி :* ஸ்ரீமதி பூஷணி கல்யாணராமன் - வாய்ப்பாட்டு; துரை ஸ்ரீ பாலசுப்பிரமணியன் - வயலின்; ஸ்ரீ ஜெயஷ்யாமன் - மிருதங்கம்; ஸ்ரீ எஸ். கார்த்திக் - கடம்.

*6.20 - 6.40 மணி :* ப்ரியா சகோதரிகள் : குமாரி சண்முகப்ரியா, குமாரி ஹரிப்ரியா - வாய்ப்பாட்டு; திருவாரூர் ஸ்ரீமதி பாலம் - வயலின்; ஸ்ரீ ஏ. எஸ். சரவணன் - மிருதங்கம்; ஸ்ரீ ஏ. எஸ். முரளி - கடம்; ஸ்ரீ ஏ. ராமன் - மோர்சிங்

*6.40 - 7.00 மணி :* சிக்கில் சகோதரிகள் : ஸ்ரீமதி நீலா, ஸ்ரீமதி குஞ்சுமணி - புல்லாங்குழல்; குமாரி ஏ. கன்யாகுமாரி - வயலின்; ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீ ராஜா ராவ் - மிருதங்கம்

இது ஒரு லலிதா ஜுவல்லர்ஸ் வெளியீடு

7.00 - 7.20 மணி : ஸ்ரீ ஓ. எஸ். தியாகராஜன் - வாய்ப்பாட்டு; கண்டதேவி ஸ்ரீ அழகிரிசாமி - வயலின்; பாலக்காடு ஸ்ரீ டி. எஸ். ராஜாமணி - மிருதங்கம்.

7.20 - 7.40 மணி : ஸ்ரீ என். ரவிகிரண் - சித்ரவீணை; ஸ்ரீ கே. ஆர். கணேஷ் - மிருதங்கம்; உமையாள்புரம் ஸ்ரீ நாராயணசுவாமி - கடம்

7.40 - 8.00 மணி : திருச்சூர் ஸ்ரீ வி. ராமச்சந்திரன் - வாய்ப்பாட்டு; திருப்பாற்கடல் ஸ்ரீ வீரராகவன் - வயலின்; குருவாயூர் ஸ்ரீ துரை - மிருதங்கம்; வைக்கம் ஸ்ரீ கோபாலகிருஷ்ணன் - கடம்

8.00 - 8.20 மணி : கே. வி. ராமானுஜம் - புல்லாங்குழல்; ஸ்ரீமதி ஏ. பாரதி - வயலின்; மேலக்காவேரி ஸ்ரீ பாலாஜி - மிருதங்கம்

8.20 - 8.40 மணி : திருவெண்காடு ஸ்ரீ ஜெயராமன் - வாய்ப்பாட்டு; ஸ்ரீ துரை சுவாமிநாதன் - வயலின்; தஞ்சாவூர் ஸ்ரீ முருகபூபதி - மிருதங்கம்; ஸ்ரீ காமாக்ஷி சுந்தரம் - கஞ்சிரா

8.40 - 9.00 மணி : ஸ்ரீமதி மணிகிருஷ்ணசுவாமி - வாய்ப்பாட்டு; ஸ்ரீமதி சாவித்திரி சத்தியமூர்த்தி - வயலின்; மேலக்காவேரி ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி - மிருதங்கம்

9.00 - 9.15 மணி : ஸ்ரீ டி. கே. பதஞ்சலி, ஸ்ரீ டி. வி. மகாலிங்கம் - புல்லாங்குழல், ஸ்ரீ டி. கே. விஜயராகவன் - வயலின்; ஸ்ரீ கே. பாலசங்கர் - மிருதங்கம்; ஸ்ரீ முரளி - கடம்

9.15 - 9.35 மணி : மதுரை ஸ்ரீ ஜி. எஸ். மணி - வாய்ப்பாட்டு; திருப்பாற்கடல் ஸ்ரீ வீரராகவன் - வயலின்; குருவாயூர் ஸ்ரீ துரை - மிருதங்கம்; வைக்கம் ஸ்ரீ கோபாலகிருஷ்ணன் - கடம்

9.35 - 9.55 மணி : ஸ்ரீ எம். சந்திரசேகரன், ஸ்ரீமதி பாரதி - வயலின்; ஸ்ரீரங்கம் ஸ்ரீ ராஜாராமன் - மிருதங்கம்; ஸ்ரீ டி. வி. வாசன் - கடம்

9.55 - 10.15 மணி : ஸ்ரீ எஸ். கல்யாணராமன் - வாய்ப்பாட்டு; ஸ்ரீ வி. தியாகராஜன் - வயலின்; ஸ்ரீ கமலாகர்ராவ் - மிருதங்கம்

10.15 - 10.35 மணி : ஏ. கே. சி. நடராஜன் - கிளாரினெட்

10.35 - 10.55 மணி : கலிகாமலை ஸ்ரீ கே. எஸ். பஞ்சாட்சரம், ஸ்ரீ கே. எஸ். கதிர்வேல் - நாதஸ்வரம்; ஸ்ரீ கே. எஸ். நடராஜன், ஸ்ரீ கே. எஸ். ஆறுமுகம், ஸ்ரீ எஸ். ராஜாராம் - தவில்

10.55 - 11.15 மணி : கோயமுத்தூர் ஸ்ரீ கே. ஆர். சுப்பிரமணியன், ஸ்ரீ கே. ஆர். செல்லப்பா - நாதஸ்வரம்; அம்பாசமுத்திரம் ஸ்ரீ ஏ. பூரநாதன், கோயமுத்தூர் ஸ்ரீ ஏ. ஆர். ரத்தினம் - தவில்

11.15 - 11.35 மணி : காரைக்குடி கே. வி. கைலாசம், குரும்பலூர் ஸ்ரீ மனோகரன் - நாதஸ்வரம்; ஆலங்குடி ஸ்ரீ வைத்தியநாதன், மன்னார்குடி ஸ்ரீ எம். எஸ். ராஜகோபாலன் - தவில்

11.35 - 11.55 மணி : திருக்கருகாவூர் ஸ்ரீ டி. ஜி. சுப்பிரமணியன், அலக்குடி ஸ்ரீ போஜராஜன் - நாதஸ்வரம்; திருக்கருகாவூர் ஸ்ரீ டி. ஜி. தட்சிணாமூர்த்தி, மன்னை ஸ்ரீ டி. பி. ராஜகோபால், ஆலங்குடி ஸ்ரீ ஏ. ஜி. குருமூர்த்தி - தவில்

11.55 - 12.15 மணி : பந்தநல்லூர் ஸ்ரீ பி. வி. காசிநாதன், உடையாளூர் ஸ்ரீ எஸ். கோவிந்தராஜன் - நாதஸ்வரம்; பந்தநல்லூர் ஸ்ரீ பி. ராஜேந்திரன் - தவில்

12.15 - 12.35 மணி : ஸ்ரீ ஏ. எம். அங்கப்பா பிள்ளை, கணபதி அக்ரஹாரம் ஸ்ரீ ஜி. பிச்சையப்பா - நாதஸ்வரம்; கும்பகோணம் ஸ்ரீ கே. ஏ. டி. சுவாமிநாதன், பிள்ளைமாநகர் ஸ்ரீ டி. எம். துரை - தவில்

12.35 - 12.55 மணி : இஞ்சிக்குடி ஸ்ரீ ஈ. பி. கணேசன், ஸ்ரீ ஈ. பி. எம். வைத்தியநாதன் - நாதஸ்வரம்; திருச்சேறை ஸ்ரீ டி. ஜி. முத்துக்குமாரசுவாமி பிள்ளை, கொரநாடு ஸ்ரீ எஸ். சுவாமிநாத பிள்ளை - தவில்

12.55 - 1.15 மணி : ஸ்ரீ பி. எம். ஜி. எம். டி. பழனி, திருச்சேறை ஸ்ரீ டி. எம். நாகலிங்கம் - நாதஸ்வரம்; கீழ்வேளூர் ஸ்ரீ கே. ஆர். கோவிந்தராஜன் - தவில்



**சங்கீத கலாநிதி செம்மங்குடி சீனுவாச ஐயர் கூறுகிறார்...**

திருவையாறுன்னு அந்த க்ஷேத்திரத்தோட பெயரை உச்சரிக்கிறப்பவே ஏதோ அந்த தியாகராஜ ஸ்வாமிகளையே நேர்ல பார்த்தாப்ல ஒரு பரவசம் வந்துடறது.

இன்னிக்கு நேத்திக்கா நடக்கிற சம்பவம் இது!.... 145 வருஷமா மகோன்னதமா ஒரு விழா கொண்டாடறதுன்னா சாமான்யப்பட்டதுல்ல...

அந்தக் காலத்துல பெரிய... பெரிய இசை மேதைகள், மகான்கள் நடத்திண்டு வந்த இந்த விழா இன்னிக்கு உலகம் முழுவதும் பிரபலமாயிருக்குங்கறத்துக்குக் காரணம் சாமான்ய மனுஷாள் இல்ல! எல்லாம் அந்த ஸ்வாமிகளோட அனுக்ரஹம் தான்!

பெரிய கட்சி, சின்னக் கட்சின்னு ஒரு காலத்துல ரெண்டா பிரிஞ்சு நடந்துண்டிருந்ததை ஒரே நிகழ்ச்சியா மாத்தினதுல அடியேனுக்கும் பங்கு உண்டு. முசிறி சுப்பிரமணிய ஐயர் அப்ப செகரட்டிரியா இருந்தார்.

அப்புறம்... அப்புறம் எவ்வளவோ மாற்றங்களைச் சந்திச்சு இன்னிக்கு டீ.வி.. ரேடியோன்னு வளர்ச்சி அடைஞ்சாச்சு.

இப்ப இருக்கிற சூழ்நிலையில் ஸ்வாமிகளுக்கு ஒண்ணரைக் கோடி ரூபாய்ல நினைவாலயம் கட்டறதுமில்லாம... கிட்டத்தட்ட பதின்மூன்று வருஷமா... அற்புதமாக ஆராதனை விழாவை நடத்தறதுக்குக் குன்னக்குடி வைத்தியநாதனைப் பாராட்டாம இருக்க முடியாது.

எல்லோருமே இதைச் செஞ்சுட முடியாது... அதுக்கும் ஒரு அனுக்ரஹம் வேண்டும். அது வைத்தியநாதனுக்கு நிறையவே கிடைச்சிருக்கு.

இதுக்கு, முக்யமா ஒத்துமையாக இருந்து செயல்படும் ஸபா அங்கத்தினர்களுக்கும் அந்த மகானோட அருள் இருக்கும்கறதுல சந்தேகமே இல்ல...!

இது ஒரு லலிதா ஜுவல்லர்ஸ் வெளியீடு

1.15 - 1.35 மணி : ஸ்ரீ துரை பாரதிதாசன், ஸ்ரீ டி. ஆர். முருகானந்தம் - நாதஸ்வரம்; திருக்கண்ணமங்கை ஸ்ரீ டி. பி. ராஜகோபால், திருவாமேஸ்வரம் ஸ்ரீ டி. பி. ராதா கிருஷ்ணன் - தவில்

1.35 - 1.55 மணி : சென்னை ஸ்ரீ தேவசேனாபதி, ஸ்ரீ ஜி. ரமேஷ் குழுவினர் - நாதஸ்வரம்

1.55 மணி : பெரும்பூர் ஸ்ரீ பி. நடராஜன், ஸ்ரீ மனோகரன் - நாதஸ்வரம்; ஸ்ரீ எஸ். ஜி. நிதையானந்தன், ஸ்ரீ ஜி. ஜெயசங்கர் - தவில்

## 12.1.93 – செவ்வாய் மாலை

5.15 - 5.30 மணி : செங்கல்பட்டு ஸ்ரீ ரெங்கநாதன் - வாய்ப்பாட்டு; த்வாரம் மங்கதாயாரு - வயலின்; ஸ்ரீ டி. கோவிந்தராஜன் - மிருதங்கம்; திருச்சி ஸ்ரீ முரளி - கடம்

5.30 - 5.45 மணி : கும்பகோணம் ஸ்ரீமதி வி. பி. ராஜேஸ்வரி - வாய்ப்பாட்டு; மேலகாவேரி ஸ்ரீ தியாகராஜன் - வயலின்; ஹனுமந்தபுரம் ஸ்ரீ ஆர். ஜே. பூவராகன் - மிருதங்கம்; ஸ்ரீ ஏ. எஸ். முரளி - கடம்

5.45 - 6.00 மணி : ஸ்ரீமதி சாருமதி ராமசந்திரன் - வாய்ப்பாட்டு; திருவையாறு ஸ்ரீமதி பாலம் - வயலின்; ஸ்ரீ ஏ. எஸ். ரங்கநாதன் - மிருதங்கம்

6.00 - 6.20 மணி : வைகல் ஸ்ரீ ஞானஸ்கந்தன் - வாய்ப்பாட்டு; திருவள்ளூர் ஸ்ரீ பார்த்தசாரதி - வயலின்; காரைக்குடி ஸ்ரீ ஜெயராமன் - மிருதங்கம்

6.20 - 6.40 மணி : ஸ்ரீ பி. எஸ். நாராயணசுவாமி - வாய்ப்பாட்டு; சிக்கில் ஸ்ரீ பாஸ்கரன் - வயலின்; உமையாள்புரம் ஸ்ரீ கே. சிவராமன் - மிருதங்கம்; ஸ்ரீ வி. நாகராஜன் - கஞ்சிரா

6.40 - 7.00 மணி : சித்தூர் ஸ்ரீ ஜி. வெங்கடேசன் - புல்லாங்குழல்; வி. தியாகராஜன் - வயலின்; ஸ்ரீ கே. ஆர். கணேஷ் - மிருதங்கம்; மாயவரம் ஸ்ரீ சோமு - கஞ்சிரா; தணிகை ஸ்ரீ நாகரத்தினம் - மோர்சிங்

7.00 - 7.20 மணி : ஸ்ரீமதி பிரேமா ஹரிஹரன் - வாய்ப்பாட்டு; ஸ்ரீமதி ராதா சுந்தரேசன் - வயலின்; நாஞ்சில் ஸ்ரீ அருள் - மிருதங்கம்

7.20 - 7.40 மணி : த்வாரம் மங்கதாயாரு - வயலின்; பாபநாசம் ஸ்ரீ குமார் - மிருதங்கம்; ஸ்ரீ ஏ. எஸ். சங்கர் - கடம்

7.40 - 8.00 மணி : மதுரை சகோதரர்கள்: எம். பி. என். சேதுராமன், எம். பி. என். பொன்னுசாமி - நாதஸ்வரம்; திருவாவடுதுறை ஸ்ரீ டி. ஏ. கலியமூர்த்தி; தஞ்சாவூர் ஸ்ரீ டி. ஆர். கோவிந்தராஜன் - தவில்

8.00 - 8.20 மணி : பி. ராஜம் ஐயர் - வாய்ப்பாட்டு; திருப்பாற்கடல் ஸ்ரீ வீரராகவன் - வயலின்; ஸ்ரீ கமலாகர் ராவ் - மிருதங்கம்

8.20 - 8.40 மணி : சென்னை ஆல் இந்தியா ரேடியோ வாத்திய விருந்து

8.40 - 9.00 மணி : மதுரை ஸ்ரீ டி. என். சேஷகோபாலன் - வாய்ப்பாட்டு; ஸ்ரீ எம். சந்திரசேகரன் - வயலின்; ஸ்ரீ நாராயணன் - மிருதங்கம்

9.00 - 9.15 மணி : ஸ்ரீ ஏ. சுந்தரேசன் - வாய்ப்பாட்டு; ஸ்ரீ வி. தியாகராஜன் - வயலின்; மேலக்காவேரி ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி - மிருதங்கம்

9.15 - 9.35 மணி : ஸ்ரீ வி. ஆர். கிருஷ்ணன் - வாய்ப்பாட்டு; த்வாரம் மங்கதாயாரு - வயலின்; தஞ்சாவூர் முருகபூபதி - மிருதங்கம்

9.35 - 9.55 மணி : சுதா ரகுநாதன் - வாய்ப்பாட்டு; ஸ்ரீமதி ரத்னா - வயலின்; ஸ்ரீ பாலசங்கர் - மிருதங்கம்; ஸ்ரீ ஏ. ஆர். செல்லப்பா - கடம்

9.55 - 10.15 மணி : ஸ்ரீ ஜி. ஜே. ஆர். கிருஷ்ணன், விஜயலக்ஷ்மி - வயலின்; கே. ஆர். கணேஷ் - மிருதங்கம்; கே. எம். வைத்தியநாதன் - கடம்

10.15 - 10.35 மணி : ஸ்ரீ என். ரமணி - புல்லாங்குழல்; ஸ்ரீ துரைஸ்வாமிநாதன் - வயலின்; குருவாயூர் ஸ்ரீ துரை - மிருதங்கம்; வைக்கம் ஸ்ரீ கோபாலகிருஷ்ணன் - கடம்

## பெங்களூர் நாகரத்தினம்மாள்!

தியாகராஜ ஆராதனை இந்தளவு விமரிசையாக நடந்து வருவதற்குக் காரணமாக இருந்த முன்னோடி பெங்களூர் திருமதி நாகரத்தினம்மாள்தான்.

- 'வித்யாசுந்தரி'' என்றழைக்கப்பட்ட பெங்களூர் நாகரத்தினம்மாள் தமது ஒன்பதாவது வயதிலேயே சங்கீதத்திலும் - வடமொழியிலும் புலமை பெற்று இருந்தார்.

- ஆனால் அவருடைய குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இல்லை. சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டு... ஒரு வழியாக மகளின் 15-வது வயதில் சங்கீத அரங்கேற்றத்தை நடத்தி வைத்தார்.

- குமரியாக இருந்த நாகரத்தினம்மாவிடம் இயற்கையிலேயே உருவாகி இருந்த தயாள சிந்தனையும் - குருபக்தியும், மாதா - பிதா பக்தியும், மற்ற மொழிகளின் மீது வைத்திருந்த நன்மதிப்பும் இவரை ஸ்புடம் போட்ட தங்கமாக வெளிப்படுத்தின.

- காலம் கரைந்தோட - நாகரத்தினம்மாளுக்கு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளிடம் ஏற்பட்ட அபரிமிதமான பக்தியும் அன்பும் - அவரை தெய்வமாகவே போற்றச் செய்தன. பொறாமை கொண்ட சிலரது அவதூறுகளையும் சூழ்ச்சிகளையும் பொருட்படுத்தாமல் அவர் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் சமாதியைப் புனரமைக்கும் பொருட்டு ஏராளமான பொருள் செலவில் சமாதியை நிர்மாணித்து 1925-ல் கும்பாபிஷேகம் செய்தார். நாகரத்தினம்மாள் 1952 மே மாதம் 19-ஆம் தேதியன்று தியாகராஜரடி சேர்ந்தார்.

- தற்போது உற்சவம் நடைபெறும் நாட்களில் ஆராதனை தினத்தன்று இரவு இந்த அம்மையாரின் சமாதியமைந்த இடத்தில் அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பட்டு, அதன் பிறகு பஞ்சரத்ன மல்லாரி... வாசிக்கப்படுகிறது. இரவு தியாகராஜ ஸ்வாமிகளின் படஊர்வலமும் நடத்தப்படுகிறது.

தொகுப்பு : குமார்

இது ஒரு லலிதா ஜுவல்லர்ஸ் வெளியீடு

# ரூ. 6000x10 = ரூ. 1,23,000*

நம்பமுடியாத கணக்கு அல்லவா?
யூலிப்பினால் இது எப்படி சாத்தியம் என்று பாருங்கள்.



ஆச்சரியம் ஆனால் உண்மை.

யூனிட் ட்ரஸ்டின் யூனிட் லிங்க்ட் இன்சூரன்ஸ் திட்டத்தில் சேருங்கள். இலக்கு ரூ. 60,000. கால அவதி 10 வருடங்கள். அதாவது பத்து வருடங்களுக்கு ஒவ்வொரு வருடமும் ரூ. 6000 முதலீடு செய்யுங்கள்.

உங்கள் முதலீடு ஒவ்வொரு வருடமும் டிவிடெண்ட் பெறுகிறது. வருடாவருடம் டிவிடெண்ட் வளர்ந்து வருகிறது. கடந்த வருடத்திய டிவிடெண்ட் 16% இந்த டிவிடெண்ட் திட்டத்தில் திரும்பவும் முதலீடு செய்யப்படுகிறது. ஆகவே உங்கள் முதலீடு வளர்ந்து கொண்டே போகிறது. ஒவ்வொரு வருடமும். 10 வது வருட முடிவில் உங்களுக்கு 5% முதிர்ச்சி போனஸும் அளிக்கப்படுகிறது.

ஆகவே 10 வருட கால அவதியில் நீங்கள் ரூ. 60,000 மட்டுமே முதலீடு செய்யும்போது உங்களுக்கு கிட்டத் தட்ட ரூ. 1,23,000* கிடைக்கிறது.

**வரி அனுகூலத்தைப் பாருங்கள். புன்னகை இன்னும் கூடட்டும்!**

உங்கள் பங்கீட்டு தொகையான ரூ. 6000 ற்கு இந்த கவர்ச்சிகர லாபத்தைத் தவிர வருடா வருடம் பிரிவு 88ன் கீழ் வரிக்கழிப்பும் உண்டு. அதாவது வருடாவருடம் உங்கள் சேமிப்பு ரூ. 1200.

**மனோதிடன் உங்களுக்கு ஆயுள் மற்றும் விபத்துக்காப்பும் உண்டு.**

இவற்றைத் தவிர உங்களுக்கு ரூ. 60,000 ற்கு ஆயுள் காப்பும் உண்டு. அதுவும் மருத்துவ பரிசோதனை இல்லாமலேயே மற்றும் இலவச விபத்துக் காப்பும் உண்டு ரூ. 15,000 வரை.

யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா

**34 மில்லியன் யூனிட்தாரர்களின் சேவையில்.**

* முதலீட்டாளரின் வயது 35 என்ற கணக்கில் ஆதாரப்படி யூனிட்டுகளின் வாங்கும் மற்றும் விற்கும் விலை வரிசைப்படி ரூ. 12.20 மற்றும் ரூ. 11.80 என்று மற்றும் டிவிடெண்ட் 16% என்ற விகிதத்தில் இருக்கும்.

## யூனிட் லிங்க்ட் இன்சூரன்ஸ் திட்டத்தில் முதலீடு செய்யுங்கள்.

எல்லா செக்யூரிட்டிகள் முதலீடுகளும் மார்க்கெட் ரிஸ்க் கொண்டவையாகும். முதலீடு செய்வதற்கு முன் முதலீட்டு ஆலோசகர் அல்லது முகவரை கலந்தாலோசிக்கவும்.

**Branch Offices:** • Madras Ph: 517101, 517178 • Coimbatore Ph: 210399 • Madurai Ph: 34597 • Trichy Ph: 27774

Sista's UTI 2029/92 TM C

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

